ஸ்ரீகலா Srikala



# என் நெஞ்சம் நீதானே

En Nenjam Neethaane

ஸ்ரீகலா Srikala

# என் நெஞ்சம் நீதானே

En Nenjam Neethaane




தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS
Download

# ஸ்ரீகலாவின் "என் நெஞ்சம் நீதானே...!!!"

Contents


அத்தியாயம் : 1
அத்தியாயம் : 2
அத்தியாயம் : 3
அத்தியாயம் : 4
அத்தியாயம் : 5
அத்தியாயம் : 6
அத்தியாயம் : 7
அத்தியாயம் : 8
அத்தியாயம் : 9

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

# அத்தியாயம் : 1

சென்னையில் இருந்த அந்தச் சிறிய கணினி நிறுவனத்தின் ஊழியர்கள் அனைவரும் ஒரு அறையில் குழுமி இருந்தனர். சரவணன் தனது இரு கைகளையும் கட்டி கொண்டு அவர்களைப் பார்த்திருந்தான். அவனிடம் வேலை பார்ப்பவர்கள் பதினைந்து பேர் பவ்யமாக அவன் என்ன பேச போகிறான்? என்பதை அறியும் ஆர்வத்துடன் அவனைப் பார்த்திருந்தனர். ஆனால் அவனுடைய நண்பர்களான வம்சி, குணா இருவரும் சிரிப்பை அடக்கியபடி அவனைப் பார்த்திருந்தனர். அவன் என்ன பேச போகிறான்? என்று அவர்களுக்குத் தான் தெரியுமே. கடந்த ஒரு மாதமாக அவன் அவனது திட்டத்தைக் கூறி அவர்களைப் போட்டு படுத்தி எடுத்துவிட்டானே.

"ஹலோ கைஸ்... நான் இப்போ ஒரு முக்கியமான விசயம் பேச தான் உங்களைக் கூப்பிட்டேன்."

"பாஸ், ஆட்குறைப்புன்னு சொல்லி எங்களை எல்லாம் வேலையை விட்டு தூக்கிர மாட்டீங்களே?" ஒருவன் முந்தி கொண்டு கேட்க...

"டேய், நானே ஒரு ஃப்ளோல பேசிக்கிட்டு இருக்கேன். நீ வேற..." என்று சரவணன் தனக்குள் முணுமுணுத்துக் கொள்ள... அதைக் கேட்டுக் குணா குபீரென்று சிரித்து விட்டான். சரவணன் அவனைத் திரும்பி பார்த்து முறைத்தான். அதைக் கண்டு குணா வாயை மூடி கொண்டான்.

"ஆட்குறைப்பு எல்லாம் இல்லை. இது வேறு..." என்ற சரவணன் தனது தொண்டையைக் கனைத்துக் கொண்டு,

"நாளையில் இருந்து நான் உங்க முதலாளி இல்லை. உங்களில் ஒருவன். அதாவது நானும் ஒரு தொழிலாளி. உங்க கூடச் சேர்ந்து வேலை செய்யும் ஒருவன்." என்று கூற...

PDF தமிழ் .com

"ஏன் பாஸ், உங்களால் கம்பெனிக்கு பெரிய லாஸ் வந்திருச்சா? அதான் வம்சி, குணா பாஸ் ரெண்டு பேரும் உங்களை வேலை பார்க்க சொல்லிட்டாங்களா?" வேறொருவன் கேட்க...

"அடேய் நாதாரிங்களா, நானே சரவணன் போடும் ஓசி சோறை சாப்பிட்டுட்டு இருக்கேன். அதில் கை வைக்காதீங்க பாவிங்களா." வம்சி அலறினான். அவனது பேச்சு கேட்டுக் கூட்டம் மொத்தமும் சிரித்தது.

"ஷ்... அமைதி, அமைதி அமைதிக்கு எல்லாம் அமைதி..." குணா சின்சான் ஸ்டைலில் கூற... மீண்டும் சிரிப்பலை அங்கே பரவியது. அனைவரது கூத்தை கண்டு சரவணன் முகத்திலும் புன்னகை அரும்பியது.

"இப்போ நான் பேசலாமா?" என்ற சரவணன்,

"இன்னும் சில மாதங்களுக்கு நீங்க என்னை உங்களில் ஒருவனாக ட்ரீட் பண்ண வேண்டும். மறந்தும் மரியாதை கொடுக்கக் கூடாது." என்று அவன் முடிக்க...

"டேய் சரவணா..." மற்றொருவன் எழுந்து அவனை உரிமையுடன் அழைக்க... சரவணன் திகைப்புடன் அவனைப் பார்த்தான்.

"ஈவினிங் பப்புக்கு போகணும். கொஞ்சம் கடனா இரண்டாயிரம் கொடேன்." என்று அவன் கேட்க...

"டேய், என்னங்கடா இது?" சரவணன் அழாத குறையாக அவனைப் பார்க்க...

"பாஸ், நீங்க தானே ப்ரெண்ட்லியா ட்ரீட் பண்ண சொன்னீங்க. நான் என் ப்ரெண்ட்ஸ் கிட்ட இப்படித்தான் கேட்பேன்." அவன் பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு கேட்க...

"விதி வலியது..." குணா சிரித்துக் கொண்டே விசமமாய்ச் சரவணனை பார்த்தான்.

"மிஸ்டர், இது நாளையில் இருந்து தான் நடைமுறைக்கு வருது. இன்னைக்கு நான் உங்க பாஸ் தான். என்ன மெமோ கொடுக்கவா?" என்று சரவணன் மிரட்டலாய் கேட்க... அவன் அலறியடித்து,

"கடனே வேண்டாம் பாஸ்..." என்று பெரிய கும்பிடு போட்டுவிட்டு இருக்கையில் அமர்ந்தான்.

"அது..." என்று சரவணன் நண்பர்களைக் கெத்தாகப் பார்க்க... அவர்களோ காறி உமிழ்வது போல் அவனைப் பார்த்தார்கள். அதைக் கண்டு அவன் 'ஹி ஹி' என்று அசடு வழிந்தான்.

"என்ன புரிஞ்சதா?" சரவணன் திரும்பி கூட்டத்தைப் பார்த்து கேட்க... அதிலிருந்த ஒருவன்,

"புரியலை..." என்க...

"இப்படிச் சொல்லியே இன்னைக்கு நாளை ஓட்டிரலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கியா? இன்னைக்கு அந்த ஜெர்மன் ப்ராஜெக்ட்டை நீ மட்டும் தனியா டீல் பண்ற." சரவணன் அவனது ஆசைக்கு ஆப்பு வைக்க...

"தெய்வமே, ஆளை விடுங்க..." என்றவன் அங்கிருந்து ஓடி விட்டான்.

"நம்ம கைவசம் ஜெர்மன் மட்டுமில்லை... யுஎஸ், கனடா, ஆஸ்திரேலியா, லண்டன் இப்படிப் பலவித ப்ராஜெக்ட் இருக்கு." என்று சரவணன் கூட்டத்தைப் பார்த்து கூற... அவ்வளவு தான் எல்லோரும் கல்லெறியப்பட்ட காக்கா கூட்டம் போல் காணாமல் போயினர்.

"யாரு கிட்ட... நம்ம கிட்டேயேவா?" சண்டை காலரை பின்னால் இழுத்து விட்டபடி சரவணன் தனது நண்பர்களைப் பார்க்க... அவர்களோ இவனை முறைத்து கொண்டிருந்தனர்.

"டேய், இப்படிப் பாசமா எல்லாம் பார்க்காதீங்கடா. வெட்கம் வெட்கமா கம்மிங்..." என்று நகத்தைக் கடித்தபடி

PDF தமிழ் .com

வெட்கப்படுவது போல் அவன் பாவனைச் செய்ய...

"டேய் சரவணா, என்னடா இதெல்லாம்? பார்க்க சகிக்கலை." வம்சி, குணா இருவரும் ஒருசேர கூற...

"எதுடா? நான் வெட்கப்படுறதா?"

"நீ போடுற பிளான்." வம்சி சொன்னதும் சரவணனின் முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது.

"ப்ச், நீ வேற எது சொன்னாலும் கேட்கிறேன். ஆனா இதை மட்டும் கேட்காதே." என்றவன் அங்கிருந்து சென்று விட்டான்.

"அவனுக்குத் தான் இதைப் பத்தி பேசினாலே கோபம் வரும்ன்னு தெரியும்ல. நீ எதுக்கு அவன் கிட்ட இதைப் பத்தி கேட்கிற?" குணா வம்சியைக் கடிந்தான்.

"எதிர்காலம் இல்லாத ஒண்ணுக்கு இவன் ஏன் இப்படிக் கஷ்டப்படுறான்?"

"அப்படின்னு யார் சொன்னா?"

"சரவணன் நாலு வருசமா இலவு காத்த கிளியா காத்துக்கிட்டு இருக்கான். அவன் நினைச்சது நடக்குமா?"

"நாலு வருசமா? ஏழு வருசம்டா... சரவணனோட காதலுக்கு வயசு ஏழுடா.”

"குணா...?" வம்சி திகைப்புடன் குணாவை பார்த்தான்.

"நாங்க ரெண்டு பேரும் ஒரே ஊரு... அதனால் எனக்கு அவனைப் பத்தி முழுசா தெரியும்."

"சரவணன் ரொம்ப நல்ல பையன்... வசதியான வீட்டு பையன்... சொந்த தொழில் பண்றான். ஆளும் பார்க்க அழகா தான் இருக்கான். அப்படியிருந்தும் சிஸ்டர் ஏன்டா அவனோட காதலை ஏத்துக்கலை?" என்ற வம்சியை அற்பப்புழு போல் பார்த்து வைத்தான் குணா.

"ஏன்டா இப்படிப் பார்க்கிற?"

"இவன் காதலிக்கிறதே அந்தப் பொண்ணுக்கு தெரியாதுடா." என்று கூறி குணா வம்சி மனதில் திகிலை கூட்டினான்.

"என்னடா சொல்ற?"

"என்னத்த சொல்ல சொல்ற? எல்லாம் விதி... சரவணன் பாவம்." என்ற குணா மேலே அது பற்றிப் பேச மறுத்து விட்டான். அப்படி என்ன தான் நடந்திருக்கும்? என்று வம்சி தலையைப் பிய்த்துக் கொண்டான்.

****************************

ஆட்டோவில் இருந்து இறங்கிய நிலா கை நிறையப் பைகளைச் சுமந்து கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள். வீடு மயான அமைதியுடன் காட்சி அளித்தது. யாரையும் காணவில்லை. எப்போதும் சண்டையிட்டுக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்யும் தங்கைகள் இருவரையும் காணவில்லை.

"துர்கா, மீனா..." என்று அவள் தங்கைகளை அழைத்தபடி செல்ல... ஆனால் அங்கு வந்ததோ அவளது அன்னை அஞ்சலை. மகளின் கையிலிருந்த பைகளைக் கண்டு அவளை முறைத்து பார்த்தார். அவளோ அவரைக் கண்டும் காணாதது போல் கடந்து சென்றாள்.

"நில்லுடி... எதுக்குடி கையில் இருக்கிற காசை எல்லாம் கரைச்சிட்டு வந்திருக்க?"

"இது ஒண்ணும் உன் புருசன் காசு இல்லை. நானே சொந்தமா சம்பாதிச்சது." என்று அவள் அலட்டி கொண்டாள். பக்கத்தில் இருக்கும் பிள்ளைகளுக்கு ட்யூசன் எடுத்ததில் வந்த வருமானம் தான் அது...

"பிசாத்து இரண்டாயிரத்துக்கு இந்த அலட்டலா...?" அவர் நொடித்துக் கொண்டார்.

"இரண்டாயிரம் இல்லை. ஐயாயிரம்..." அவள் வலதுகையை விரித்துக் காட்டி, கண்களை உருட்டி

PDF தமிழ் .com

கொண்டு பதில் சொன்னாள்.

"ம்ஹூம், என் கிட்ட கொடுத்திருந்தா வீட்டு செலவுக்கு உதவியிருக்கும்."

"எதுக்கு? நான் எதுக்குக் கொடுக்கணும்? என்னைத் தான் தண்ணி தெளிச்சு விட்டுட்டீங்களே. அப்புறம் எதுக்கு என் துட்டை மட்டும் கேட்கிறீங்க?" அவள் உதட்டை சுளித்தபடி அறைக்குள் சென்றாள்.

அங்கே எட்டாவது அதிசயமாக அவளது தங்கைகள் படித்துக் கொண்டிருந்தனர். துர்கா கல்லூரியில் இரண்டாம் வருடம் படிக்கிறாள். மீனா பனிரெண்டாம் வகுப்பு படிக்கிறாள்.

"என்னடி இது அதிசயமா இருக்கு? இன்னைக்கு உங்காளு படம் விஜயில் போடுறான் பார்க்கலையா?" அவள் சொல்லி முடிக்கும் முன் அவள் தலையில் நறுக்கென்று கொட்டு விழுந்தது. திரும்பி பார்த்தால் அவளது அன்னை அஞ்சலை ஆக்ரோசத்துடன் நின்றிருந்தாள்.

"நீ தான் கெட்டன்னா படிக்கிற புள்ளைங்களை எதுக்குக் கெடுக்கிற?"

நிலா வலித்த தலையைத் தடவி கொண்டே, "இங்கே பாரும்மா, என்னைத் தொடுற உரிமை உனக்கு இல்லை. அப்பா வரட்டும். நான் அவர் கிட்ட சொல்லி கொடுக்கிறேன்." என்று எரிச்சலுடன் கத்த...

"எல்லாம் அந்தாளு கொடுக்கிற செல்லம். அதான் இன்னமும் உருப்படாம இருக்க."

"என்ன உருப்படாம இருக்கேன். இதோ படிச்சு முடிச்சு வேலைக்குப் போகப் போறேன். கை நிறையச் சம்பாதிக்கப் போறேன். உங்களை எல்லாம் நல்லா வச்சுக்கப் போறேன்."

மகள் சம்பாதித்தாலும் அவளுக்கு என்று தனித்துக் கூறாது தங்களுக்கு என்று கூறுவது கண்டு அந்தத் தாயின் உள்ளம் நெகிழ்ந்தது. இந்த அறிவு முன்பே இருந்திருந்தால்...?

பழைய நினைவுகளை நினைத்து அவரால் பெருமூச்சு மட்டுமே விட முடிந்தது.

"உன்னை நீ நல்லா பார்த்துக்கோ. அது போதும்." என்ற அஞ்சலை அங்கிருந்து அகன்றார்.

"என்னத்த வச்சுக்கப் போற? இன்னமும் நீ உன் அரியரை கிளியர் பண்ணலை. அதை ஞாபகம் வச்சுக்கோ." துர்கா அக்கா காதில் கிசுகிசுத்தாள்.

"வாயை மூடுடி..." என்று அன்னைக்குத் தெரியாது தங்கையை அதட்டிய நிலா அவளது கையில் நறுக்கென்று கிள்ளினாள்.

"ஆ..." என்று துர்கா அலற... அவளது வாயில் கை வைத்து தடுத்த நிலா,

"கத்தி உசுர வாங்காதே..." என்று ஒற்றை விரல் நீட்டி தங்கையை எச்சரிக்க... அப்போது மீனா வாய்விட்டு சிரித்தாள்.

"எதுக்குடி சிரிக்கிற?"

"அரியர் வச்ச உனக்கு வேலை போட்டு கொடுத்து இருக்கானே... அந்த மாங்கா மடையனை நினைச்சேன் சிரிச்சேன்."

"எல்லாம் ஐயாவோட ஏழாவது அறிவை பார்த்து தான்... ஆறாவது அறிவு உள்ளவங்க அரியர் வைக்க மாட்டாங்க. ஆனா ஏழாவது அறிவு உள்ளவங்களோட ஸ்பெசலே அரியர் வைப்பது தான். இதெல்லாம் புரிய உனக்கு ஏழாவது அறிவு இருக்கணும்டி." என்று கெத்தாகக் கூறியவளை கண்டு சின்னவர்கள் இருவரும் ஆவென்று வாயை பிளந்தனர்.

"அரியர் வைப்பதில் இவ்வளவு விசயம் இருக்கா...?"

"ம், இன்னும் இருக்கு... அரியர் வச்சா தான் நாம யூத்தா ஃபீல் பண்ணுவோம்."

"எப்படி நிலா?"

PDF தமிழ் .com

"ஆமா, நாம காலேஜ் படிச்சிட்டே இருந்தா தானே யூத்தா ஃபீல் பண்ண முடியும்." என்றவளை காறி உமிழ்வது அவர்கள் பார்க்க...

"அக்கா ஷாப்பிங் போயிட்டு வந்து டயர்டா இருக்கேன். துர்கா குட்டி, மீனு கண்ணு நீங்க ரெண்டு பேரும் எனக்காகப் பேக் பண்ணுவீங்களாம். நான் கொஞ்ச நேரம் தூங்க போறேனாம்." என்று தங்கைகளுக்கு அன்பாய் உத்தரவிட்டவள் அங்கிருந்த பாயை எடுத்துத் தரையில் விரித்துப் படுத்து கொண்டாள்.

நிலாவிற்கு இரவு பேருந்து பயணம் என்பதால் தங்கைகள் இருவரும் அவளது சோர்வு உணர்ந்து அவளுடைய உடமைகளைப் பெட்டியில் எடுத்து வைக்க ஆரம்பித்தனர். அஞ்சலை எட்டிப்பார்த்தவர் பெரியவள் வேலையைச் சின்னவர்கள் செய்வதைக் கண்டு வாய்க்குள் முணுமுணுத்தபடி அங்கிருந்து சென்றுவிட்டார்.

நிலா தூங்கி எழவும் அவளது தந்தை மாரிமுத்து வரவும் சரியாக இருந்தது. அவரும் வரும் போதே மகளுக்குப் பிடித்த கோழி பிரியாணியை வாங்கி வந்திருந்தார்.

"ஐய், அப்பான்னா அப்பா தான்..." என்றவள் முகத்தைக் கூடக் கழுவாது உண்ண ஆரம்பித்தாள்.

"துர்கா, மீனா ரெண்டு பேரும் வாங்க..." மாரிமுத்து மற்ற மகள்களை அழைக்க... அவர்கள் வரவும் கையிலிருந்த பார்சலை அவர்களிடம் கொடுத்தவர்,

"இது உங்களுக்குத் தான். சாப்பிடுங்க..." என்க...

"வாவ், சிக்கன் கறி, பொறிச்ச ப்ரோட்டா..." துர்கா மகிழ்ச்சியில் கத்த...

"எனக்கு மட்டன் பிரியாணி..." மீனா குதூகலிக்க...

"ஏய், ரெண்டு பேரும் உங்களோடதில் எனக்குக் கொஞ்சம் பங்கு கொடுக்கணும்." நிலா அதிகாரமாய்க் கேட்க...

"முடியாது போடி..." என்று மற்ற இருவரும் கூற... அடுத்த நொடி அங்கே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

மகள்களைப் பார்த்து சிரித்தபடி சமையலறைக்கு வந்த மாரிமுத்து மனைவியிடம், "கொஞ்சம் காபி போட்டு கொடு..." என்று கேட்க...

"அதெல்லாம் ரெடியா இருக்கு. இந்தாங்க..." அஞ்சலை சூடான காபியை கணவர் கையில் கொடுத்தார். மாரிமுத்து அதை வாங்கிப் பருகியபடி மகள்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"எல்லாம் நீங்க கொடுக்கும் இடம் தான். காலாகாலத்தில் நிலாவுக்குக் கல்யாணம் பண்ணி வச்சால் தானே, அடுத்தடுத்து இருக்கிற துர்கா, மீனாவுக்கு நல்லது பண்ண முடியும். இப்படி அவள் இழுக்கிற இழுப்புக்கு எல்லாம் நீங்க போயிக்கிட்டே இருந்தால்... இது எங்கே போயி முடிய போகுதோ?"

"நிலாவுக்கு என்ன செய்யணும்ன்னு எனக்குத் தெரியும். நீ வாயை மூடிட்டு இருந்தா போதும்."

"ஆமா, கவுர்மெண்ட் உத்தியோகம் பார்த்துச் சம்பளம், கிம்பளம் வாங்கி அஞ்சாறு வீடு கட்டி வாடகைக்குக் கொடுத்து இருக்கீங்க பாருங்க. அதில் வர்ற வருமானத்தில் பொண்ணுங்களுக்கு வரதட்சணை கொடுக்க... தனியாரு கம்பெனியில கூலி வேலை பார்த்து வர்ற சொற்ப வருமானம் வாய்க்கும், வவுத்துக்கும் சரியா இருக்கு. இதில் நீங்க வேற அவளுக்குத் தூபம் போட்டுட்டு இருக்கீங்க. படிக்கிறதையாவது ஒழுங்கா படிக்கிறாளா? அதிலயும் ஃபெயில். இப்படிப்பட்டவளுக்கும் ஒருத்தன் வேலை போட்டு கொடுத்து இருக்கானே. அவனைச் சொல்லணும்..." என்று புலம்பிய மனைவியைக் கண்டும் காணாதவராய் அவர் வெளியில் வந்துவிட்டார்.

இரவு உணவு முடிந்து நிலா சென்னைக்குக் கிளம்ப ஆயத்தமானாள். பெட்டி, பையைத் தூக்கி கொண்டு வந்து கூடத்தில் வைத்தவள்,

PDF தமிழ் .com

"ம்மா, தண்ணி பாட்டில் எடுத்து வச்சியா?" என்று கத்த...

"எல்லாம் பையில் எடுத்து வச்சிட்டேன். நீ பார்த்து, பத்திரமா போ. ராவு தூங்கிட்டு இறங்கிற இடத்தைக் கோட்டை விட்டுறாதே."

"பஸ் சென்னைக்குத் தான்ம்மா போகுது. எங்கே இறங்கினாலும் டான்னு நான் போக வேண்டிய இடத்துக்குப் போயிருவேன்."

"இந்த வாய் மட்டும் இல்லை..." என்று அஞ்சலை ஆரம்பிக்க...

"நாய் கூடச் சீண்டாது..." என்று துர்கா, மீனா இருவரும் கோரசாக முடித்து வைத்தனர்.

"அடியேய், உங்களை..." தங்கைகளை அடிக்கப் பாய்ந்தவளை தந்தையின் குரல் அடக்கியது.

"நிலா, கிளம்புற நேரத்தில் என்ன சண்டை?" மாரிமுத்துக் குரலில் அவள் அமைதியானாள்.

"எல்லாம் எடுத்து வச்சிட்டியா நிலா?" தந்தை கேட்டதும் அவள் தாய் மற்றும் தங்கைகள் முகத்தைப் பார்க்க...

"எல்லாம் எடுத்து வச்சாச்சுங்க." என்று அஞ்சலை கூற...

"நிலா, இனியும் இப்படிப் பொறுப்பில்லாம இருக்கக் கூடாது. உனக்கான பாதையில் நீ தனியே பயணிக்கப் போகிற. அதனால் ஒவ்வொரு நொடியும் பார்த்து கவனமா இருக்கணும்." என்ற தந்தைக்கு அவள் தலையை மட்டும் ஆட்டினாள்.

"அப்பா, நம்ம நிலாவுக்கு யாருப்பா வேலை போட்டு கொடுத்தது?" துர்கா கேட்க...

"அது எதுக்கு உனக்கு...?" மாரிமுத்து சட்டென்று சுதாரித்தார்.

"நீங்க தானே அவளுக்கு வேலை வாங்கிக் கொடுத்தது. இவளுக்கு வேலை போட்டு கொடுத்த அந்த அறிவாளி யாருன்னு தெரிஞ்சுக்கலாம்ன்னு கேட்டேன்."

"அதைத் தெரிஞ்சு நீ என்ன பண்ண போற? நிலா மட்டும் தெரிஞ்சுக்கிட்டா போதும்." என்றவர் நிலாவை அழைத்துக் கொண்டு சென்றார்.

பேருந்தில் மகளை ஏற்றிவிட்டு அவளுக்கு ஆயிரம் அறிவுரைகள் கூறி விடைபெற்றார் மாரிமுத்து. தூரத்தில் புள்ளியாகத் தெரிந்த தகப்பனின் உருவத்தைப் பார்த்தவளுக்கு விழிகள் கலங்கியது. அவளுக்கு எத்தனை சோதனைகள் வந்த போதும் அவளுக்குப் பக்கபலமாக இருந்தவர் அவளது தந்தை. இதோ இப்போதும் அவள் வேலைக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னதும் தான் தாமதம்... உடனே வேலைக்கான உத்தரவை வாங்கிக் கொண்டு வந்துவிட்டார். அவரது அன்பில் அவளது மனம் நெகிழ்ந்து போனது. விழிகளை மூடி இருக்கையில் சாய்ந்தவளுக்கு வேறு ஒரு எண்ணம் மனதில் தோன்றி அவளை வாட்டி வதைத்தது. அவளால் தான் அவளது பெற்றோர் பிறந்த மண்ணை விட்டு இங்கே வந்து இருக்கின்றனர். அவர்களது பிழைப்பில் அவள் மண்ணை அள்ளி போட்டு விட்டாள். பழைய நினைவில் அவளுக்குக் கண்கள் கரித்தது.

"எங்கேடா இருக்க...? உனக்காகத் தான் நான் காத்திருக்கிறேன்னு உனக்குத் தெரியுமா? நீ என்னை ஏத்துக்குவியா?" என்று அவனிடம் மானசீகமாகக் கேட்டவள் அவனது பதில் தெரியாது மனதிற்குள் சோர்ந்து தான் போனாள்.

இந்தக் கணமே அவனைக் காண வேண்டும் என்ற ஆவல் அவளுள் எழுந்தது. ஆனால் குடும்பச் சூழல் அவளைக் கட்டி போட்டது. தனக்காகப் பார்த்து பார்த்து செய்த குடும்பத்திற்கு அவள் செருப்பாகத் தேய தயாரானாள். குடும்பத்தைப் பற்றி யோசித்த அவளது மனம் மீண்டும் நாய்க்குட்டியாய் அவனிடத்தில் வந்து நின்றது.

தமிழ் நாவல்

"அவன் அப்படியே தான் இருப்பானா? இல்லை இந்நேரம் கல்யாணம் பண்ணியிருப்பானா? ஒருவேளை அவன் கல்யாணம் பண்ணி இருந்தால்...??? நீ கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் எனக்குச் சந்தோசம் தான். என் மனசில் இருந்த பாரம் இல்லாது போயிரும்." என்றவளின் மனதினில் பாரமேறியது.

அதற்கு மேல் அதைப் பற்றிச் சிந்திக்காது பேருந்தில் கொடுத்த போர்வையைப் போர்த்திக் கொண்டு நன்கு உறங்கிவிட்டாள். மீண்டும் அவள் எழுந்து பார்த்த போது பேருந்து நின்றிருந்தது. அதிலிருந்து பயணிகள் ஒவ்வொருவராக இறங்கி கொண்டிருந்தனர்.

'ஆத்தி, இம்புட்டு நேரமாவா தூங்குவ நிலா? வழியில் ஏதோ ஏரியா பெயர் சொல்லி இறங்க சொன்னாங்களே... அது என்ன ஏரியான்னு தெரியலையே?' தனக்குள் முணுமுணுத்தபடி தனது உடமைகளை எடுத்துக் கொண்டு பேருந்தை விட்டு இறங்கினாள் அவள்.

பெற்றோர் படித்துப் படித்துக் கூறியும் இறங்கும் இடத்தைத் தவற விட்ட தனது மடத்தனத்தை எண்ணி அவள் தன் தலையில் தானே கொட்டி கொண்டாள். தந்தைக்கு அழைத்துக் கேட்கலாம் தான். ஆனால் அன்னையிடம் வசவுகளை யார் வாங்குவது? அதனால் அந்த எண்ணத்தைத் தவிர்த்து விட்டாள். சென்னை வந்ததும் தொடர்பு கொள்ளச் சொல்லி தந்தை கொடுத்த அலைப்பேசி எண் அந்தக் கணம் அவளுக்கு ஞாபகம் வந்தது.

'நமக்குன்னு ஒரு அடிமை வலிய வந்து சிக்கி இருக்கும் போது நீ எதுக்கு நிலா கவலைப்படுற? அடிமையை அழைப்போம்.' என்று நினைத்தவள் தந்தை கொடுத்த எண்ணிற்குத் தனது அலைப்பேசியில் இருந்து அழைத்தாள்.

"உன் உள்ளம் நான் காண என் ஆயுள் போதாது
என் அன்பை நான் சொல்ல உன் காலம் போதாது
என் காதல் எடையென்ன உன் நெஞ்சு காணாது

ஆனாலும் என் முத்தம் சொல்லாமல் போகாது
கொண்டாலும் கொன்றாலும் என் சொந்தம் நீதானே
நின்றாலும் சென்றாலும் உன் சொந்தம் நான் தானே
உன் வேட்கை பின்னாலே என் வாழ்க்கை வளையுமே"

மறுபக்கம் ஒலித்த பாடலை கேட்டு அவள் ஒரு கணம் திடுக்கிட்டு போனாள். அலைப்பேசியை எடுத்து திகைப்புடன் பார்த்தவள்,

"சரியான காதல் கிறுக்கா இருப்பான் போல்..." என்றபடி அலட்சியமாகத் தோள்களைக் குலுக்கியவள் மீண்டும் அலைப்பேசியைக் காதருகே கொண்டு போனாள். அவளது அனைத்து சேட்டைகளையும் பார்த்தபடி பேருந்து நிலையத்தின் தூண் மறைவில் நின்றிருந்தான் சரவணன். நிலாவின் சேட்டைகள் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்த போதும் ஒரு காதலனாய் அவன் அவளை அணுஅணுவாய் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். முன்பு மொட்டாய் இருந்தவள் இன்று மலராய் மணம் பரப்பி நிற்பதை கண்டவனின் இதயம் தாறுமாறாய்த் துடித்தது. இந்தக் கணமே மனதில் இருக்கும் காதலை சொல்லி அவளை எங்கேயாவது கண்காணாத தேசத்திற்கு அழைத்துச் செல்ல விழைந்தது அவனது காதல் மனம். ஆனாலும் முயன்று கட்டுப்படுத்திக் கொண்டான்.

'அடங்குடா... வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழி உடைந்த கதையாய் போய்விடும். சரவணா, அடக்கி வாசி.' அவனது மனசாட்சி அவனுக்கு அறிவுறுத்தியது. கொஞ்ச நேரம் அவளைக் காக்க வைத்தவன் கடைசி நொடியில் அழைப்பை உயிர்ப்பித்தான். அவன் எடுத்ததும் தான் தாமதம் மறுபக்கம் அவள் பொரிய ஆரம்பித்து விட்டாள்.

"கொஞ்சமாவது பொறுப்பு இருக்கா? வயசு பொண்ணு, தெரியாத ஊருக்கு இப்படிக் காலங்கார்த்தால வந்து இறங்கி இருக்காளே. அவளை நேரத்தோட வந்து கூட்டிட்டு போகாம அங்கன என்னத்தைக் கிழிக்கிற நீ?" அவளது

வசவு மழையில் அவன் ஒரு கணம் அயர்ந்து நின்றுவிட்டான்.

"இப்போ நீ வரலை... நான் அப்படியே என் ஊருக்கு பொட்டிய கட்டிருவேன்." அவளது வார்த்தைகளில் சுயவுணர்வு பெற்றவன்,

"அம்மா, பரதேவதையே! ஊருக்கு எல்லாம் போயிராதே. அப்புறம் என் முதலாளிகிட்ட யாரு பேச்சு கேட்பது. இரு தாயே... வந்திர்றேன்." என்றவன் அழைப்பை துண்டித்துவிட்டு அவளை நோக்கி ஓடி வந்தான். எங்கே, தன்னவள் மனம் மாறி ஊருக்கு சென்று விடுவாளோ என்கிற பயம் தான்.

"குட்மார்னிங் மேடம்..." என்றபடி முப்பத்து இரண்டு பற்களையும் காட்டியபடி தன்முன் நின்றிருந்தவனை ஏற இறங்க பார்த்தவள்,

"யாரு நீ?" என்று கேட்க...

அதைக் கேட்டு அவன் அப்படியே திகைத்து நின்றுவிட்டான். அவளுக்காக அவன் உயிரை தேக்கி வைத்துக் காத்திருக்க... அவளுக்குத் தன் நினைவு கூட இல்லையா? அவன் உள்ளுக்குள் மிகவும் வருந்தினான்.

"உங்களைப் பிக்கப் பண்ண வந்தவன்..."

"என்னது...?" அவள் காளி அவதாரம் எடுக்க...

"ஐயோ, தப்பா நினைச்சிட்டீங்க... உங்களைக் கூட்டிட்டு போக வந்திருக்கேன்னு சொன்னேன். அதாவது நீங்க வேலை பார்க்கும் கம்பெனிக்கு அழைச்சிட்டு போக வந்திருக்கேன்."

"நீ சொல்றது எல்லாம் சரி தான். ஆனா உன் திருட்டு முழி சரியில்லையே. எங்கே, நான் வேலைக்குப் போக இருக்கும் கம்பெனி பெயர் சொல்லு பார்க்கலாம்."

'பார்த்து பார்த்து பெயர் வச்ச என் கிட்டேயே என் கம்பெனி பெயரை கேட்கிறியே பாதகத்தி...' மனதிற்குள்

புலம்பியவன்,

"எஸ்எஸ் கம்ப்யூட்டர் கம்பெனி..." என்று வெளியில் கூற...

"ஆங், சரியா சொல்லிட்ட..." அவள் குதூகலிக்க...

"ஐய், அப்போ எனக்குப் பரிசு ஏதும் உண்டா?" அவனும் அவளைப் போல் சொல்லி காட்ட...

"அதெல்லாம் ஒண்ணும் கிடையாது." அவள் ஜாக்கிரதையாகத் தனது பையை எடுத்து நெஞ்சோடு சேர்த்து அணைத்து கொண்டாள்.

'பாருடா, இதில் எல்லாம் விவரமா இருக்கிறதை...' என்று முணுமுணுத்தவன்,

"சரி வாங்க..." என்று அவளது பெட்டி, பையைத் தூக்கினான்.

"வெயிட் வெயிட்..." என்று அவனைத் தடுத்து நிறுத்தியவளை அவன் புரியாது பார்க்க...

"ஆமா, என்னைய பார்த்தா உனக்கு அக்கா மாதிரியா இருக்கு." அதைக் கேட்டு அவன் ஜெர்க்கானான்.

"நான் ரொம்பச் சின்னப் பொண்ணு. நீ தான் மாடு மாதிரி வளர்ந்திருக்க. அதனால நீ என்னை வா, போன்னு கூப்பிடு. வாங்க, போங்கன்னா என்னவோ வயசான ஃபீல் வருது." என்றவளை கண்டு அவன் சற்று நிம்மதி அடைந்தான்.

'கொஞ்ச நேரத்துல இந்தப் புள்ள நம்மை ஜெர்க்காக வச்சிருச்சே. வெரி டேன்ஜரஸ் கேர்ள்.' மனதிற்குள் புலம்பியவன்,

"அதுக்கு என்ன நிலா பொண்ணு... உன்னை வா, போன்னே கூப்பிடுறேன்." என்றவன் முன்னால் நடக்க... நிலா தனது கைப்பையைத் தூக்கி கொண்டு அவனை நோக்கி ஓடினாள்.

தமிழ் நாவல்

"எங்கே தங்க போறன்னு ஏதாவது தெரியுமா?" அவன் அவளைப் பற்றித் தெரிந்திருந்தும் வேண்டுமென்றே கேட்க...

"ஆமா, அதானே... இப்போ நான் எங்கே தங்குறது...?" திகைப்புடன் கேட்டவளை கண்டு அவன் திகைத்து நின்றான், அவளது அறியாமையை எண்ணி...

தொடரும்...!!!

# அத்தியாயம் : 2

"தங்குறதுக்கு ஏற்பாடு எல்லாம் பண்ணாமலா சென்னைக்குக் கிளம்பி வந்த?" சரவணன் சிறிது நக்கலுடன் கேட்க... நிலா விழிகள் கலங்க கைகளைப் பிசைந்து கொண்டு செய்வதறியாது நின்றிருந்தாள். அவளது நிலை கண்டு அவனுக்கே பாவமாக இருந்தது.

"சரி, சரி... ரொம்ப யோசிக்காதே. என் கூட வா?"

"எதுக்கு? உன் கூட எல்லாம் வர முடியாது?"

"இப்ப கொஞ்ச நேரத்துக்கு முந்தி என் கூட வர்றேன்னு சொன்னியேம்மா?"

"அது... ஆங், நான் வேலை செய்யப் போகிற கம்பெனி பெயரை நீ சரியா சொன்ன... அதனால் தான்."

"சரி, அப்படியே வச்சுக்குவோம். இப்போ ஏன் திடீர்ன்னு வர மாட்டேன்னு சொல்ற?"

"முன்ன பின்ன தெரியாதவங்க கூப்பிட்டா போகக் கூடாதுன்னு எங்கம்மா சொல்லியிருக்கு." என்றவளை கண்டு அவன் தன்னைத் தானே முன்னே, பின்னே திருப்பிக் காட்ட...

"இப்ப எதுக்கு இப்படி டான்ஸ் ஆடுற?"

"என்னை முன்ன பின்ன பார்த்தது இல்லைன்னு சொன்னியா? அதான்... இப்போ பார்த்துட்டல்ல, வா..."

"ஐய்யே... ஜோக்கு, சிரிப்பு வரலை." என்றவள்,

"கொஞ்சம் இரு. எங்கப்பா கிட்ட கேட்டுட்டு வர்றேன்." அவள் தனது அலைப்பேசியை எடுத்து தந்தைக்கு அழைத்தாள்.

'ஆள் பார்க்க கொஞ்சம் லூசு மாதிரி இருந்தாலும் இதில் எல்லாம் விவரம் தான்.' அவன் அவளை மெச்சியபடி ரசித்துக் கொண்டு இருந்தான்.

அவள் அலைப்பேசியைப் பார்த்தபடி கழுத்தில் கிடந்த சங்கிலியை கடித்துக் கொண்டிருப்பதைக் கண்டவனுக்கு அந்தச் சங்கிலியாகத் தான் பிறக்கவில்லையே என்கிற ஏக்கம் அவனுள் சடுதியில் காளானாய் முளைத்தது.

"அப்பா..." தந்தை எடுத்ததும் அவள் சத்தமாய்க் கத்தினாள்.

"ஏம்மா இறங்கிற இடத்தைத் தவற விட்ட...? பொட்டப்புள்ள கொஞ்சமும் பொறுப்பு இல்லாம இருக்க... உங்கம்மா உன்னைத் திட்டுறது சரி தான். நான் தான் அதிகச் செல்லம் கொடுத்து கெடுத்துட்டேன்."

தாயை போல் தந்தையும் தன்னைத் திட்டியதில் தான் இடம் மாறி இறங்கியது எப்படித் தந்தைக்குத் தெரியும் என்பதை அவள் யோசிக்க மறந்தாள். அதைத் தந்தையிடம் போட்டு கொடுத்தவன் தன் முன்னால் நின்று இருப்பவன் என்பதை அவள் அறியாது போனாள்.

"ப்பா, நீங்களும் அம்மா மாதிரியே திட்டுறீங்க?" என்று சிணுங்கியவளை கண்டு தன்னுணர்வு பெற்ற சரவணன் அவளிடம்,

"நிலா பொண்ணே, உங்கப்பா கிட்ட என்னைப் பத்தி கேட்காம என்ன வெட்டி பேச்சு பேசிக்கிட்டு இருக்க..." என்று குரலை உயர்த்திக் கேட்க...

"இருடா..." என்று அவனை நோக்கி கை நீட்டி சொன்னவள் தந்தையிடம் மேலே பேசலானாள்.

"என்னதூஊஊஊஊ... டாவா?" என்று அவன் திகைத்து நிற்க...

"ப்பா, இங்கே நான் எங்கே தங்குறது? நீங்க எந்த அட்ரசும் கொடுத்து விடலையே?"

"உன்னைக் கூட்டிட்டு போக ஒரு தம்பி வந்திருப்பாரே நிலா. அவர் நீ தங்கும் இடத்துக்கு அழைச்சிட்டு போவார்."

"ஓ, அப்படியா... சரிப்பா, சரிப்பா... நீங்க சொன்ன தங்க கம்பி இவனான்னு பாருங்க..." என்று சரவணன் முன்

அலைப்பேசியை நீட்டினாள். அலைப்பேசியை வாங்கிய சரவணன் திரையில் தெரிந்த மாரிமுத்துவை கண்டு புன்னகைத்தான். அவனைக் கண்டதும் அவரது புன்னகை விரிந்தது.

"மாப்..." என்று மேலே கூற போனவரை தடுத்து,

"அப்புறம் அங்கிள் நல்லா இருக்கீங்களா?" என்று கேட்டவன் நிலா அருகில் இருப்பதைக் குறிப்பாக உணர்த்தினான்.

"நல்லா இருக்கேன் தம்பி. எம் பொண்ணைப் பத்திரமா பார்த்துக்கோங்க. சூதுவாது தெரியாத வெள்ளந்தி பொண்ணு."

"அதெல்லாம் நீங்க சொல்லவும் வேணுமா? நான் நிலா பொண்ணைப் பத்திரமா பார்த்துக்கிறேன்."

"சரி, ஃபோனை நிலா கிட்ட கொடுங்க." அவர் சொன்னதும் அவன் அலைப்பேசியை அவளிடம் நீட்டினான்.

"தம்பியை அவன், இவன்னு பேச கூடாது. மரியாதை கொடுத்து பேசணும். உன்னை விட வயசு அதிகம் இல்லையா?"

"பார்க்க அப்படி ஒண்ணும் வயசானவங்களா தெரியலேயேப்பா. நல்லா இளமையா, அழகா தானே இருக்காங்க." அவள் சொன்னதைக் கேட்டு அவன் சொக்கித்தான் போனான்.

"நிலா பொண்ணு என்னை வா, போன்னே கூப்பிடட்டும் அங்கிள். நோ ப்ராப்ளம்." அவன் கத்தி கூற...

"பார்த்து பத்திரமா இரு நிலா." என்ற மாரிமுத்து அங்கே மனைவி வருவதைக் கண்டு அழைப்பை துண்டித்து விட்டார்.

"ஃபோனில் யாருங்க...?" அஞ்சலை கேட்க...

"நம்ம நிலா தான்."

தமிழ் நாவல்

"சென்னை போய்ச் சேர்ந்துட்டாளா? என் கிட்ட கொடுத்து இருக்கலாமே? நானும் அவள் கிட்ட பேசி இருப்பேனே."

"எதுக்கு ஃபோனிலும் அவளைத் திட்டவா?"

"என்னங்க நீங்க?"

"நிலாவை நான் பார்த்துக்கிறேன். நீ உன் வேலையைப் பார்." என்று அவர் கடுப்புடன் கூற... அஞ்சலையின் முகம் தொங்கி போனது. அதைக் கண்டு மாரிமுத்துவிற்கு வருத்தமாக இருந்த போதும் அதற்காகப் பெரிதாக அலட்டி கொள்ளவில்லை.

அங்கே சரவணன் நிலாவிடம், "இப்பவாவது போகலாம்ங்களா மேடம்?" என்று கேட்க...

"எங்கப்பா சொன்னதால் நம்பி வர்றேன்." என்று கெத்தாகக் கூறியவள் அவனுடன் இணைந்து நடக்க...

"சரவணனை நம்பியோர் கைவிடப்படார்." என்று அவன் அர்த்தம் பொதிந்த வார்த்தைகளைக் கூற... அது அவளுக்குப் புரியவில்லை. மாறாக அவள் அவனைக் கண்டு புன்னகைத்தாள்.

சரவணன் தனது கார் நிற்கும் இடத்திற்கு வந்தவன் அதன் பின்பகுதியை திறந்து அவளது உடமைகளை உள்ளே போட்டு மூடிவிட்டு மீண்டும் முன்பக்கம் வந்த போது நிலாவை காணவில்லை. அவ்வளவு தான் அந்தக் கணம் அவன் விழிகள் கலங்க கதிகலங்கி போனான். அவள் எங்கே காணாமல் போனாள்? யாராவது அவளைக் கடத்தி கொண்டு போய் விட்டார்களோ? என்று அவனது கற்பனை குதிரை தாறுமாறாகத் தறிகெட்டு ஓடியது. அவனது உயிர் அவனிடத்தில் இல்லை. அவன் அப்படியே ஸ்தம்பித்து நிற்கும் போது அவன் அருகில் இருந்து,

"ஷ்..." என்று யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது...

யாரென்று திரும்பி பார்த்தவன் அப்படியே திகைத்துப் போனான். ஆம், நிலா அவனது காரில் முன்னிருக்கையில்

ஏறிச் சட்டமாக அமர்ந்து இருந்தாள். அவள் தான் கார் கண்ணாடியை இறக்கி விட்டு அவனை அழைத்தது.

'கொஞ்ச நேரத்தில் பதற வைச்சிட்டாளே.' அவளைக் கண்டதும் தான் அவனுக்குச் சற்று நிம்மதியாக இருந்தது.

"யாரை இப்படித் தேடுற?" என்றவளை கண்டு கடுப்பானவன்,

"காணாம போன என் காலை தேடுறேன்." என்றுரைத்தபடி சுற்றி வந்து ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்து காரை கிளப்பினான்.

சிறிது நேரம் அமைதியாக வந்த நிலாவிற்கு அதற்கு மேல் அமைதியாக வர முடியவில்லை. அவனிடம் பேச்சு கொடுக்க ஆரம்பித்தாள். அவள் மேல் அவனுக்குக் கடுப்பு இருந்த போதும் அவளுடன் பேச அவனுக்கு விருப்பம் இருக்கத்தான் செய்தது.

"ஆமா, உன் பெயர் என்ன?"

"ஆஹா... ரொம்பச் சீக்கிரம் கேட்டுட்டியே நிலா பொண்ணே..."

"ஹேய், இரு, இரு... என் பெயர் உனக்கு எப்படித் தெரியும்?"

'சில்வண்டு கிட்ட இப்படிச் சிக்கிட்டியே சிறுத்தை சரவணா. சமாளி, சமாளி...' என்று தனக்குள் சொல்லி கொண்டவன்,

"நீ எங்க கம்பெனியில் வேலை செய்ற. அவங்க உன்னைப் பத்தின டீடெயில்ஸ் கொடுத்து தான் உன்னை அழைச்சிட்டு வர சொன்னாங்க."

"ஓ... அப்ப சரி." என்று சமாதானமாகியவள்,

"உன் பெயரென்ன சொல்லவே இல்லையே?" என்று கேட்க...

"சரவணன்..." அவன் பெயரை சொன்ன போது கூட அவளுக்கு அவனை ஞாபகம் வரவில்லை. அப்படி ஞாபகம்

வரும் அளவிற்கு அவன் அவளுக்கு முக்கியமானவாய் இல்லையோ என்னமோ!

"சரவணா..." உடனே அவள் பெயரை சொல்லி அழைக்க... அவன் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான்.

"பெயர் கூப்பிட தானே." என்றவளை கண்டு புன்னகைத்தவன்,

'நீ கூப்பிடத்தான்...' மனதிற்குள் கிறங்கியவன் வெளியில் சம்மதமாய்த் தலையசைத்தான். அவனுக்குப் பெயர் வைத்த தந்தைக்கு மட்டும் அவனது நினைப்புத் தெரிந்தது காறி துப்பி இருப்பார்.

"நான் இறங்க வேண்டிய இடம் வேறு... ஆனா நீ அங்கே காத்திருக்காம இங்கே வந்து காத்திருக்க..." அவள் அப்படிக் கேட்டதும் அவனுக்குப் புரையேறியது.

அவள் இறங்கும் இடத்தில் காத்திருந்தவன் பேருந்து வந்ததும் பரபரப்பானான். ஆனால் அவள் அதிலிருந்து இறங்காது போகவும் அவள் தந்தைக்கு அழைத்து அவள் வருகையை உறுதி செய்து கொண்டு அந்தப் பேருந்தை பின்தொடர்ந்து வந்தது அவனுக்குத் தானே தெரியும்.

"நீ அங்கே இறங்கலை. சோ, எப்படியும் நீ இங்கே இறங்கி தான் ஆகணும். அதான் இங்கே காத்திருந்தேன்."

"குட்..." என்று மெச்சுதலுடன் அவள் கூற... அவனோ ஒலிம்பிக்கில தங்க பதக்கம் வாங்கியவன் போல் வாயெல்லாம் பல்லானான்.

சரவணன் தான் தங்கியிருக்கும் அடுக்குமாடி குடியிருப்பிற்கு அவளை அழைத்துச் சென்றான். அவன் வீட்டிற்கு அருகிலிருந்த வீட்டை தான் அவன் அவளுக்காகப் பார்த்திருந்தான்.

"அப்பார்ட்மெண்ட்டா...?" என்று அவள் முகத்தைச் சுளிக்க...

"ஏன்? அப்பார்ட்மென்ட்டுக்கு என்ன குறைச்சல்?" அவன் புரியாது விழித்தான்.

"குடிசை வீடா இருந்தாலும் தனி வீடு தான் அழகு. அப்போ தான் நல்லா காற்றோட்டமா இருக்கும்."

'சென்னையில் தனிவீடா? அதுக்கு நான் என்னோட சொத்து முழுசையும் விக்கணுமே.' மனதிற்குள் சொல்லி கொண்டவன் வெளியில் அவளைப் பார்த்து இளித்து,

"இப்போதைக்கு அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்க மேடம். நாளைக்குக் கூவம் பக்கத்துல இருக்கிற குடிசையில் ஒண்ணை உங்களுக்காகப் புக் பண்றேன்." அவன் சிரியாமல் அவளைக் கேலி செய்ய...

"கூவமா? ஐய்யே, வேண்டாம்ப்பா..." என்றவள் முகத்தை அருவருப்புடன் சுளித்தபடி, மூக்கை மூடி கொண்டாள்.

"ஹா ஹா... அதுக்கு இது பெட்டர் இல்லையா?"

"ஆமா, ஆமா..." அவள் வேகமாகத் தலையாட்ட...

"அப்போ மூக்கில் இருந்து கையை எடுத்துட்டு சமத்தா என் கூட வா..." அவன் சொன்னதைப் போல் அவளும் செய்ய... அவனது புன்னகை விரிந்தது.

இருவரும் மின்தூக்கி மூலம் பத்தாவது தளத்தை அடைந்தனர். அவளது வீட்டை அவன் திறந்து உள்ளே செல்ல... அவளும் அவனைப் பின்தொடர்ந்து உள்ளே சென்றாள். புது ஆடவனுடன் தனியே இருக்கிறோம் என்கிற பயம் அவளில் இல்லை. வெகுசாதாரணமாக அவள் இருந்தாள். அதைக் கண்டவனுக்கு மிகுந்த திருப்தியாக இருந்தது.

'நிலா பெண்ணே, உன் மனசில் இடம் பிடிக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை.' என்று தனக்குள் கூறி கொண்டவனுக்குத் தெரியவில்லை, அது மிகவும் கடினம் என்று...

வீட்டின் ஜன்னல்களை எல்லாம் திறந்து விட்டவன், "குளுகுளுன்னு காத்து வருதா?" அவளைப் பார்த்து கேட்க...

"சூப்பரா வருது..." என்றவள் ஜன்னல் வழியே தவழ்ந்து வந்த தென்றலை விழி மூடி ரசித்தாள்.

அவளது ரசிப்பில் லயித்துப் போனவன் அவள் அருகே வர... பெண்களுக்கே உண்டான ஜாக்கிரதை உணர்வு அவளுள் விழித்துக் கொள்ள... அவள் படக்கென்று விழி திறந்தாள். தன்னருகில் வந்து நின்றவனைக் கண்டு அவள் 'என்ன?' என்பது போல் பார்க்க... சட்டென்று சுதாரித்தவன்,

"வீட்டை சுத்தி காட்டுறேன்..." என்று தப்பித்துக் கொண்டான்.

இரண்டு படுக்கையறை கொண்ட அந்த வீடு அவளுக்கு மிகவும் பிடித்துப் போனது. அவளது வீடு இதைவிடச் சின்ன வீடு அல்லவா! தந்தையின் சொற்ப வருமானத்தில் அவர்களால் சாதாரணமாகத் தான் வாழ முடிந்தது. ஆடம்பரம் என்பது அறவே கிடையாது. அதனால் இந்த வீடு அவளுக்குப் போதுமானதாக இருந்தது என்பதை விட ஆடம்பரமாக இருந்தது என்பதே பொருந்தும். அப்போதும் கூட அவள் சந்தேகிக்கவில்லை. 'புதிதாக வேலைக்கு வரும் தனக்கு நிறுவனம் இப்படியொரு வீட்டினை கொடுக்குமா?' என்று...

"சமைக்கத் தெரியுமா? இல்லை ஹோட்டலில் வாங்கிக்கிறியா?"

"என்ன இப்படிக் கேட்டுட்ட சரவணா? நான் நல்லா சமைப்பேன். எங்கம்மா எல்லா வேலைகளையும் செய்யச் சொல்லித்தான் வளர்த்திருக்காங்க. இல்லைன்னா எங்கம்மா சூடு வச்சிரும்." என்று சாதாரணமாகச் சொன்னவளை கண்டு அவனது விழிகள் கலங்கி போனது. அதை அவள் கண்டு கொண்டாள்.

"ஏய், எங்கம்மா எனக்குத் தான் சூடு வைப்பாங்க. உனக்கு எல்லாம் வைக்க மாட்டாங்க." என்று அவள் அவனைக் கேலி செய்ய... அதில் தன்னைச் சுதாரித்துக் கொண்டவன்,

"ஒண்ணுமில்லை தூசி..." என்று அவன் சமாளிக்க...

"தூசியா? பளிச்சின்னு கண்ணாடி மாதிரி இருக்கு..." என்றவள் சுற்றும் முற்றும் பார்க்க... நேற்று அவன் இடுப்பொடிய வீட்டை சுத்தம் செய்தது இப்போது அவனுக்கு ஞாபகம் வந்தது. அதை அவளிடம் சொல்லாது அமைதி காத்தவன்,

"சரி, குளிச்சு கிளம்பு..." என்றவன் தன்னிடம் இருந்த வீட்டு சாவியை அவளிடம் கொடுத்துவிட்டு அங்கிருந்து அகன்றான்.

சரவணன் தனது வீட்டிற்குச் சென்றதும் அவனைப் பிடித்துக் கொண்டனர் குணாவும், வம்சியும்.

"என்னடா, இவ்வளவு நேரம்... நல்லா சைட் அடிச்சு ஜொள்ளு விட்டுட்டு இருந்தியா?" என்று இருவரும் கண்சிமிட்டி சிரிக்க... அப்போது தான் அவன் நேரத்தை கவனித்தான்.

"அச்சோ, டைம் ஆகிருச்சே... என்னடா, நான் வர லேட்டாகுதுன்னா நீங்களாவது கம்பெனிக்கு கிளம்பி போகக் கூடாதா? இன்னைக்கு முக்கியமான ப்ராஜெக்ட் வேற இருக்கு."

"அதெல்லாம் நாங்க கிளம்பி தயாரா தான் இருக்கோம். உன் கிட்ட சொல்லிட்டுப் போகத் தான் வெயிட்டிங்." என்ற குணா,

"தம்பி, நாங்க கேட்டதுக்குப் பதில் வரலை." 'தம்பி, இன்னும் டீ வரலை.' என்கிற பாணியில் கேட்க...

"அதை ஏன்டா கேட்கிற? தேரை இழுத்துட்டு வர மாதிரி இவளை இழுத்துட்டு வர இவ்வளவு நேரமாகி போச்சு. அத்தனை கேள்விகள் கேட்கிறாள்." என்று அவன் சலித்துக் கொண்டான்.

"ஹா ஹா, அப்போ சிஸ்டர் ரொம்பப் புத்திசாலின்னு சொல்லு." வம்சி கலகலக்க...

'ம்ஹூம், அவளோட புத்திசாலித்தனத்தை வெளியில் சொன்னா என் பொழப்பு நாறிரும். சரவணா சிரிச்சுச் சமாளி.' என்று தனக்குள் கூறி கொண்டவன்,

"ஆமாடா, ஆமாடா..." என்று சமாளிக்க...

"அதான் தெரியுமே... அத்தனை அரியர் வைக்கும் போதே... ரொம்பபபபபபப புத்திசாலின்னு..." குணா கிண்டலடிக்க...

"டேய் ஓடிரு..." சரவணா அவனை மிரட்ட... அடுத்தக் கணம் வம்சியும், குணாவும் தப்பித்து ஓடிவிட்டனர்.

"ஹப்பாடா..." என்று சோபாவில் அமர்ந்தவனைச் சுவற்றில் இருந்த கடிகாரம் 'கூக்கூ' என்றழைத்து நேரமாகி விட்டதை உணர்த்தியது. அவசரமாக எழுந்தவன் அலுவலகத்திற்குக் கிளம்பத் தயாரானான்.

அங்கே குளியலறையில் குளித்துக் கொண்டிருந்த நிலாவிற்குத் தனது காலில் இருந்த சூட்டு வடுவை கண்டு விழிகள் கலங்கியது. மெல்ல அதை வருடி கொடுத்தவளுக்கு அந்த நாள் ஞாபகம் மனதில் எழுந்தது. அன்று தான் செய்த தேவையில்லாத வேலையால் எத்தனை பேருக்கு வருத்தம், அவமானம்!

"இந்த வடுவை பார்க்கும் போது எல்லாம் உன் ஞாபகம் தான் வருது. மறக்கணும்ன்னு நினைச்சாலும் மறக்க முடியலை. என்னால் ரொம்பக் கஷ்டப்பட்டியா? நான் ஒரு மடச்சி... இப்போ இருக்கும் புத்தி அப்போ இல்லாம போயிருச்சு. இருந்திருந்தா யாரும் கஷ்டப்பட்டு இருக்க வேண்டாம் இல்லையா?" அவள் தனக்குத் தானே பேசியபடி குளித்து முடித்தாள்.

குளித்து முடித்துச் சுடிதார் அணிந்து அலுவலகத்திற்குக் கிளம்பினாள். அவள் வீட்டின் கதவை திறக்கும் சத்தம் கேட்டு சரவணன் தனது வீட்டில் இருந்து வெளியில் வந்தான்.

"சரவணா, நீ இங்கேயா இருக்க?" அவனைக் கண்டதும் அவள் ஆச்சரியமாய்க் கேட்க...

"நீ இங்கே இருக்கும் போது நான் இங்கே இருக்கக் கூடாதா?"

"அப்போ கம்பெனி உனக்கும் வீடு கொடுத்திருக்கா?"

"உனக்கும், எனக்கும் மட்டும் தான். வேறு யாருக்கும் இல்லை." என்றவன் மனதிற்குள்,

'எல்லோருக்கும் வீடு கொடுத்தா நான் போண்டியாகி ஆண்டியாக வேண்டியது தான்.' என்று கூறி கொண்டவன் கதவை பூட்டிவிட்டுக் கிளம்பினான்.

"சரவணா, இரு இரு... நானும் வர்றேன்." என்றவள் தானும் அவனுடன் இணைந்து நடந்தாள்.

கீழே வந்ததும் நிலா அவனிடம், "கம்பெனிக்கு எந்தப் பஸ் போகும்ன்னு சொல்லு? நான் பிடிச்சு போயிக்கிறேன்." என்று கேட்க... தன்னவள் பேருந்தில் போவதா? நோ நெவர் என்று அவன் தலையை இடமும் வலமுமாக மறுப்பாய் அசைக்க... அவள் அவனைப் புதிராய் பார்த்தாள்.

"உனக்குக் கம்பெனியில் இருந்து டிரைவர், கார் எல்லாம் கொடுத்து இருக்காங்க." என்றவனைக் கூர்ந்து பார்த்தவள்,

"அது நீ தானே..." என்று கேட்க...

"எப்படிக் கரெக்ட்டா கண்டுபிடிச்ச...?"

"அதெல்லாம் எனக்குத் தெரியும். நீ போய்க் காரை எடுத்துட்டு வா..." என்று அவள் கெத்தாகக் கூற... அவளைக் கண்டு சிரித்தபடி அவன் சென்றான்.

காரில் அவளை ஏற்றிக் கொண்டு சென்றவன் போகும் வழியில் உணவு விடுதியில் காரை நிறுத்த...

"எதுக்குச் சரவணா?"

"சாப்பிட வேண்டாமா?" என்றவன் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

வேலைக்குப் புதிதாகச் செல்வதாலோ என்னவோ அவளுக்கு உணவு இறங்கவில்லை. இரண்டு இட்லியுடன் உணவை முடித்துக் கொண்டவளை அவன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

"இன்னும் எதுவும் வேணுமா? கூச்சப்படாம சாப்பிடு. நான் ஒண்ணும் சொல்ல மாட்டேன்."

"இல்லை வேண்டாம்." என்றவளின் முகத்தைப் பார்த்து என்ன நினைத்தானோ சரியென்று விட்டு விட்டான்.

அலுவலகம் வந்ததும் நிலா இறங்கி செல்ல முனைய... அவன் அவளைத் தடுத்து நிறுத்தினான்.

"வெயிட் பண்ணு. காரை பார்க் பண்ணிட்டு வர்றேன்." என்றவன் காரை ஓட்டி கொண்டு செல்ல... அவள் அவனுக்காகக் காத்திருந்தாள்.

காரை நிறுத்திவிட்டு வந்த சரவணன் அவளை அழைத்துக் கொண்டு அலுவலகத்திற்குள் நுழைந்தான். ஒரு பெண்ணுடன் வரும் முதலாளியை கண்டு எல்லோரும் ஆச்சரியமாகப் பார்த்தாலும் நேற்று அவன் சொன்ன அறிவுரை நினைவில் வர எல்லோரும் அமைதியாகத் தலை குனிந்து கொண்டனர். அதில் ஒருவன் மட்டும் அதை மறந்து போனவனாய் அவனைக் கண்டு,

"குட்மார்னிங் பாஸ்." என்க... சரவணன் அவனை முறைத்து பார்க்க... மற்றவர்கள் அவனை 'ஷ், ஷ்," என்றழைத்து அமர சொன்னார்கள். அவன் அவர்களைக் கவனிக்காது சரவணன் முகம் பார்த்தான். சரவணனோ அவனைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்தான்.

"இவர் எதுக்கு உன்னைப் பாஸ்ன்னு கூப்பிடுறாரு?" நிலா பெண்ணிற்குச் சந்தேகம் வந்துவிட்டது.

"அது அப்படி இல்லை... ஆங், நான் அவனோட டீம் லீடர். அதான் அப்படிக் கூப்பிடுறான்." சரவணன் அவளுக்கு விளக்கி கூற... அதைக் கேட்டு அந்த ஊழியனுக்கு

நேற்றைய அறிவுரை நினைவில் வர அமைதியாக அமர்ந்து விட்டான்.

"நீ முன்னால் போ நிலா பெண்ணே. நான் இப்போ வந்துர்றேன்." அவளை அனுப்பி விட்டு தனித்து நின்றவன் ஊழியனை பார்த்து,

"போட்டா கொடுக்கிற... உனக்கு இந்த மாச சம்பளம் கட்." என்று கடுப்புடன் கூற...

"பாஸ்..."

"அடுத்த மாச சம்பளமும் கட்..." என்று அவன் கூறிக் கொண்டே போக...

"தெய்வமே, மீ பாவம்..." என்றவன் சாஷ்டாங்கமாய்ச் சரவணனின் காலில் விழுந்து விட்டான்.

"இந்தத் தடவை போனால் போகுதுன்னு விடறேன். இனியொரு தடவை இப்படி நடந்தது..." என்று சரவணன் மிரட்ட... அவன் வாய் பொத்தி, கை கட்டி நின்றான்.

சரவணன் தனது நண்பர்களைத் தேடி போனான். அங்கே நிலா இருவரின் முன் நின்று கொண்டிருந்தாள்.

"என்ன நின்னுக்கிட்டு இருக்க நிலா? உட்கார்." என்ற சரவணன் தானும் அங்கிருந்த இருக்கையில் அமர...

"சரவணா, பாஸ்..." என்று நிலா மெல்ல கூற...

"யூ மீன் ஐ..." அவன் தன்னைச் சுட்டிக்காட்ட... இல்லை என்று தலையசைத்தவள் குணா, வம்சியைச் சுட்டிக்காட்டினாள். அப்போது தான் அவனுக்கும் அது ஞாபகம் வந்தது.

"ஆமாமில்ல..." என்று அசடு வழிந்தவன் எழுந்து நின்றான்.

"பாஸ், சொல்லுங்க பாஸ்... சொல்லுங்க." என்று அவன் பவ்யமாய் நிற்க... அதைக் கண்டு குணா, வம்சிக்குச் சிரிப்பு வந்தது. இருந்தும் அடக்கி கண்டனர்.

"மிஸ்டர். சரவணன், நீங்க கொஞ்ச நேரம் வெளியில் இருக்கீங்களா? நாங்க பேசிக்கிறோம்." என்று குணா கெத்தாகக் கூற...

"சரிங்க பாஸ்..." பணிவாய் கூறியவன், 'மவனே, எடக்குமடக்கா ஏதாவது கேட்டீங்க... நீங்க ரெண்டு பேரும் தொலைஞ்சீங்க.' என்று விழிகளால் நண்பர்களுக்கு எச்சரிக்கை விடுத்தவன் அறையை விட்டு வெளியில் வந்தான்.

அறையினுள் நண்பர்கள் நிலாவிடம் ஏதோ கேட்க... அவள் ஏதோ பதில் கூற... இங்கே இவனுக்குத் தான் பிரசவத்திற்காக மனைவியை அனுப்பிவிட்டு தவிக்கும் கணவனின் மனநிலையில் தவித்தபடி நகத்தைக் கடித்துக் கொண்டு கண்ணாடி வழியே உள்ளே பார்த்திருந்தான். சிறிது நேரத்தில் நிலா வரவும் தான் அவனுக்கு நிம்மதியாக இருந்தது.

"அவனுங்க ரெண்டு பேரும் உன் கிட்ட என்ன கேட்டாங்க?"

"தப்பு, தப்பு... எம்டியை பார்த்து அப்படி எல்லாம் சொல்ல கூடாது."

"ஆமாந்தாயே, கன்னத்தில் போட்டுக்கிறேன்." என்று அவன் கூற...

"அது நல்ல பிள்ளைக்கு அழகு... அவங்க என்ன கேட்டாங்கன்னா..."

"ம், சொல்லு, சொல்லு..." அவன் ஆர்வத்துடன் அவளைப் பார்க்க...

"அதை நீயே அவங்க கிட்ட போய்க் கேட்டுக்கோ." என்றவள் தனது இடத்தை நோக்கி சென்றாள்.

சரவணன் நொந்து போய்த் தனது நண்பர்களைக் காண சென்றான். அங்கு அவர்கள் இருவரும் அவனுக்கு மேல் நொந்து போயிருந்தனர்.

"என்னடா, நானும் பார்க்கிறேன்... என் ஆளை கேள்வி மேல் கேள்வி கேட்டு கொடுமைப்படுத்துறீங்க? அவளுக்கு யாரும் இல்லைன்னு நினைச்சீங்களா? நான் இருக்கேன்டா." அவன் தனது முழுக்கை சட்டையை முழங்கை வரை ஏற்றி விட்டுக் கொண்டு சண்டைக்குத் தயரானான்.

"டேய், என்ன நடந்ததுன்னு தெரியாம நீ வேற குதிக்காதே?" வம்சி சலித்துக் கொள்ள...

"என்ன தான் நடந்தது? சொல்லி தொலைங்களேன்டா..."

"உன் ஆளை நாங்க இண்டர்வியூ பண்ணலைடா." அவர்கள் பாவமாகக் கூற...

"இதை என்னை நம்பச் சொல்றீங்களா? நான் தான் பார்த்தேனே... நீங்க கேள்வி மேல் கேள்வி கேட்டதை."

"ஆனா அவள் எங்களைப் பார்த்து கேட்ட கேள்விகளை நீ கவனிக்கலையேடா. நாங்க அவள் கேட்ட கேள்விக்குத் தான்டா பதில் சொல்லிட்டு இருந்தோம்."

"பாருடா, இப்பவே கம்பெனிக்கு ஓனரம்மா மாதிரி கேள்வி கேட்டு இருக்கிறத. வெரி வெரி ஸ்மார்ட் கேர்ள்." அவன் அவளை நினைத்து சிலாகித்து மெச்சி கொள்ள...

"ஓனரம்மா மாதிரி இல்லைடா... ஓனரம்மாவா மாறக் கேட்டாள்டா." குணா பரிதாபமாகக் கூற...

"என்னது...?" சரவணன் திகைத்துப் போனான்.

"ஆமாம்டா, உன்னோட சேரை காட்டி இந்த மாதிரி குஷன் சேர் எனக்குக் கொடுப்பீங்களான்னு கேட்டாள்டா." வம்சி புலம்ப...

"அரியர் வச்ச அவளுக்கு வேலை போட்டு கொடுத்ததே பெருசு... இதில் இது வேற..." குணா பொருமினான்.

சரவணன் தன்னவள் பேச்சை கேட்டு அயர்ந்து போய் நின்றான்.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 3

"பாரேன், என் செல்லக்குட்டிக்கு இருக்கிற அறிவை..." அப்போதும் சரவணன் நிலாவை விட்டு கொடுக்காது கூற...

"போப்பா... போய், உன் செல்லக்குட்டியை கூட்டிட்டு வந்து உன் சேரில் உட்கார வை."

"சீட்டில் என்னடா... என் மடியில் கூட உட்கார வைப்பேன். உங்களுக்கு என்ன? அவள் எனக்கே ஓனரம்மா. அப்போ கம்பெனிக்கு ஓனரம்மாவா இருக்கிறதில் என்ன தப்பு இருக்குங்கிறேன்?"

"அதே தான் ராசா... தப்பே இல்லைங்கிறேன்." குணா, வம்சி இருவரும் கோரசாகக் கூற...

"பொறாமை..." சரவணன் இருவரையும் உறுத்து விழிக்க...

"லைட்டா..." வம்சி தலையை ஆட்டி ஒத்துக் கொள்ள...

"நான் எதுக்குடா உன்னைப் பார்த்து பொறாமைப்படணும்? எங்களுக்கும் ஆள் இருக்கு." குணா சட்டை காலரை தூக்கி விட்டுக் கொண்டான்.

"இது எப்போ இருந்துடா." நிலாவை மறந்தவர்களாகச் சரவணன், வம்சி இருவரும் குணாவை ஆர்வத்துடன் பார்க்க... குணா மாட்டி கொண்ட தினுசில் திருதிருவென விழித்தான்.

"இந்த முழி எல்லாம் இங்கே ஆகாது தம்பி. யாரது? உண்மையைச் சொல்." என்று சரவணன் அங்கு இருந்த கத்திரிக்கோலை எடுத்துக் கொண்டு மிரட்ட...

"அது சஸ்பென்ஸ்டா... கல்யாணத்தப்போ பார்த்துக்கோ." என்று குணா கூற...

"ஏன்டா... எங்க கிட்ட கூடக் காட்ட முடியாத அளவுக்கு உன் பிகர் அவ்வளவு அட்டுபிகராடா. ச்சு, ச்சு, சோ சேட், சோ சேட்..." என்று சரவணன் நண்பனுக்காகப் பரிதாபப்பட...

"பின்னே அவன் மூஞ்சிக்கு சூப்பர் பிகரா வந்து மாட்டும்?" வம்சி கேலி செய்ய... சரவணனும், வம்சியும் 'ஹைபை' கொடுத்து கொண்டனர்.

"டேய் சரவணா, வம்சி சொன்னா சொல்லிட்டு போகட்டும். நீ சொல்லாதேடா. பின்னாடி ரொம்ப வருத்தபடுவ?" குணா பாவம் போல் கூற...

"நானா...? எதுக்கு...?"

"எதுக்கோ...?" என்ற குணா விசயத்தைச் சொல்லாது மறைத்து விட்டான். சரவணனும் அதைப் பற்றி யோசிக்கவில்லை.

"சரி, நீங்க ரெண்டு பேரும் வேலையைப் பாருங்கடா. நான் என் ஆளை தேடி போறேன். பை..." என்ற சரவணன் எழுந்து செல்ல...

"ம், இனி பய ஒரு மாதிரி மந்திரிச்சு விட்ட மாதிரி சுத்துவானே. கடவுளே, இதை எல்லாம் பார்க்கிற தைரியத்தை எனக்குக் கொடு." வம்சி மேலே பார்த்து கையை நீட்டி புலம்ப...

"டேய், நீ அடங்கு. வேலையைப் பார்." குணா அவனது தலையில் தட்டி வேலையைப் பார்க்க சொன்னான்.

சரவணன் நிலா அமர்ந்திருக்கும் இடத்திற்கு வந்த போது அவள் தந்தையிடம் பெருமையாகப் பேசி கொண்டிருந்தாள்.

"அப்பா என் திறமைக்காகத் தங்குறதுக்குப் பெரிய வீடு எல்லாம் கொடுத்திருக்காங்க." என்று அவள் கதை அளந்து கொண்டிருக்க...

'வந்தவுடனேயே இவள் ஏழரையைக் கூட்டாம விட மாட்டாள் போலிருக்கே.' என்று மனதிற்குள் கூறியபடி அவள் அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தான் சரவணன். அவனைக் கண்டதும் அலைப்பேசியை அணைத்தவள் அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

"இப்படிச் சத்தம் போட்டு பேச கூடாது." அவன் வாயருகில் வலக்கை ஆள்காட்டி விரலை வைத்து ரகசியம் பேச...

"ஏன்?" அவளும் அவனைப் போல் ரகசியம் பேசினாள்.

"எல்லோரும் வீடு கேட்டா நம்ம பாஸ் பாவம்ல." அவன் தன்னை நினைத்தே பரிதாபம் கொள்ள...

"அட, ஆமாமில்ல..."

"ஆமாம் மட்டும் தான்." என்றவனைக் கண்டு,

"இனி பேச மாட்டேன்." என்றவளும் வாயின் மீது ஆள்காட்டி விரலை வைத்தாள்.

"நல்லது... வேலையைப் பார்ப்போமா?" என்றவன் வேலையில் ஆழ்ந்துவிட்டான். அவன் முதலாளியாய் இருந்து செய்ய வேண்டிய வேலையைத் தொழிலாளியாய் மாறிச் செய்து கொண்டிருந்தான். காதல் வந்தால் அந்தஸ்தும் மறந்து போகும் போல...

வெகுநேரமாய் நிலாவிடம் இருந்து எந்தவொரு சத்தமும் வராது கண்டு சரவணன் தனது கண்களைக் கணினியில் இருந்து திருப்பி அவள் புறம் பார்த்தான். அவளோ மும்முரமாகக் கணினியில் ஏதோ செய்து கொண்டிருந்தாள்.

'நம்மாளு அரியர் கேசாச்சே. இவ்வளவு வேகம் எல்லாம் சரிப்பட்டு வராதே. என்னவா இருக்கும்?' என்று யோசித்தவன் அவளது கணினி திரையை எட்டிப்பார்த்தான். அவன் எட்டிப்பார்ப்பதை உணர்ந்து அவள் கணினியை திருப்பி வைத்து கொண்டாள்.

"காப்பி அடிக்கக் கூடாது. நீ உன் வேலையைப் பார்." என்று அறிவுரை வேறு...

"எல்லாம் நேரம்டி ஆத்தா... புதுசா வந்துட்டு அலப்பறைய பாரு. நான் எல்லாம் கம்ப்யூட்டரை கரைச்சு குடிச்சவனாக்கும். என் கிட்டேயேவா?" அவன் அவளிடம் வம்பு வளர்க்க...

"ம்க்கும்..." என்று அவள் உதட்டை சுளித்தாலும் கணினி திரையை அவன் புறம் திருப்பவே இல்லை.

மாலையில் அவள் தனது வேலையை முடித்தபின் அதை அவனுக்கே மின்னஞ்சலில் அனுப்பி வைத்தாள். அதைக் கண்டவனுக்குச் சிரிப்பு வந்தது. 'இதுக்குத் தான் இத்தனை பில்டப்பா!' என்று சிரித்தபடி அவளது மின்னஞ்சலை திறந்தவன் அசந்து தான் போனான். அவள் அவ்வளவு அழகாக, நேர்த்தியாக அவளுக்குக் கொடுக்கப்பட்டு இருந்த வேலையை முடித்திருந்தாள். அவனால் உடனே அவளைப் பாராட்டவும் முடியவில்லை. பாரட்டினால், எப்படித் தெரியும் என்று கேட்பாள். அதனால் அவன் அமைதியாக இருந்தான்.

மாலையில் ஆறு மணியானதும் சரவணன் அவளை வீட்டிற்குக் கிளம்பச் சொல்ல... அவளோ சுற்றும் முற்றும் பார்த்தபடி,

"எல்லோரும் வேலை செய்றாங்க. நான் மட்டும் எப்படி?" என்று தயங்கினாள்.

"அவங்களுக்கு வேற வேலை இல்லை. நீ வா..."

"பாஸ்..." என்று குணா, வம்சி இருந்த அறையை நோக்கி அவள் சுட்டிக்காட்ட...

"அவனுங்க கிடக்கிறாங்க வெட்டி பசங்க..." என்று அலட்சியமாகக் கூறியவனை அவள் ஆவென்று பார்த்தாள்.

"நீ அவ்வளவு பெரிய ஆளா சரவணா?" அவள் கேட்டதும் தான் அவன் சுதாரித்தான்.

"எனக்கு லேபர் லா தெரியும். குறிப்பிட்ட நேரத்துக்கு மேல வேலை வாங்கினால் நான் கோர்ட்டுக்கு போவேன்னு அவங்களுக்குத் தெரியும். அதான் ஐயாவுக்கு மட்டும் அவுங்க பயப்படுவாங்க."

"என்னை வேலையை விட்டு தூக்கிர மாட்டாங்களே."

"அதுக்கு நான் மனசு வைக்கணும்." என்றவனை அவள் சந்தேகமாகப் பார்க்க,

"இல்லை என்னை மீறி எதுவும் நடந்துறாதுன்னு சொன்னேன்." என்று சமாளித்தவன் அவளை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான்.

"பீச்சுக்கு போகலாமா?" காரை ஓட்டி கொண்டே கேட்டவனை அவள் மீண்டும் சந்தேகத்துடன் பார்க்க...

"ஓய், என்ன அப்படிப் பார்க்கிற? ஐயம் டீசன்ட் பாய்."

"அப்புறம் எதுக்குப் பீச்சுக்கு கூப்பிடற?"

"பீச்சுக்கு கூப்பிட்டால் என்ன?"

"பீச்சுல லவ்வர்ஸ் எல்லாம் ஜோடி ஜோடியா சுத்துவாங்க... அப்புறம்..." மேலே சொல்ல போனவள் முகம் சிவக்க அமைதியாகி விட்டாள்.

'பாருடா, அம்மணிக்கு வெட்கத்தில் முகம் எல்லாம் சிவக்குது. பரவாயில்லை நாம நினைச்ச அளவுக்குத் தத்தி இல்லை.' அவன் மனதிற்குள் சந்தோசப்பட்டுக் கொண்டான்.

"ஹலோ ஹலோ... ஸ்டாப் மேடம். நீங்க நினைக்கிற மாதிரியான பையன் நானில்லை. உங்கப்பாவுக்கு என்னைய நல்லா தெரியும்." அவன் அப்பாவை பற்றிக் கூறியதும் அவள் அமைதியானாள். பின்பு அவனைத் திரும்பி பார்த்து,

"பீச்க்கு இன்னொரு நாள் போகலாம். எனக்குக் கொஞ்சம் சாமானுங்க வாங்கணும்." என்று தயங்கியபடி கூற...

"என்ன சாமான்?"

"பலசரக்கு..."

"என்னது சரக்கா...? எனக்கும் சேர்த்து வாங்கிக் கொடுப்பியா?" என்று அவன் வாயெல்லாம் பல்லாக வினவ...

"சரவணா, என்னைய பார்த்தா குடிகாரி மாதிரியா தெரியுது." அவள் காளி அவதாரம் எடுக்க...

"டங்க் ஸ்லிப்பாகிருச்சு. பலசரக்கான்னு கேட்டேன்." அவன் அசடு வழிந்தான்.

"இனியொரு தடவை நாக்கு தவறி வார்த்தை வரட்டும். அப்புறம்..." அவள் அறுப்பது போல் சைகை செய்ய... அவன் வாயை லபக்கென்று மூடி கொண்டான்.

அடுத்து சில நிமிடங்களில் பெரிய அங்காடி முன் காரை நிறுத்திவிட்டு அவன் இறங்க... அவளும் உடன் இறங்கினாள். உள்ளே சென்று அவள் பொருட்களை வாங்க... அவன் அவளை வேடிக்கை பார்த்தபடி பின்னேயே வந்தான்.

"எதுக்குச் சமைக்கிற? பேசாம ஹோட்டலில் சாப்பிட்டுக்க வேண்டியது தானே." அவன் கேட்க... குனிந்து வெண்டைக்காயை எடுத்து கொண்டிருந்தவள் அவனை ஏறிட்டு பார்த்து,

"அந்தளவுக்குப் பணம் என் கிட்ட இல்லை..." என்க... அதைக் கேட்டு திகைத்து போனவன்,

"இல்லை... அதெல்லாம் இருக்கும்." என்று மறுத்து கூற...

"ஆமா, என் சம்பளம் பத்தி உனக்கு எப்படித் தெரியும்?"

"நம்ம பாஸ் இரண்டு பேரும் என்னோட காலேஜ்மேட். நான் அவங்க கூடத்தான் குடியிருக்கிறேன். அதனால் எனக்குக் கம்பெனி விசயம் எல்லாம் அத்துப்படி..."

"ஓ..." அவனது பதிலில் அவள் சிறிது சமாதானமானாள்.

"போதும் தான் சரவணனா. இருந்தாலும்..." அவள் இழுக்க...

"இருந்தாலும்..." அவன் கேள்வியாய் அவளைப் பார்த்தான்.

"வீட்டுக்குப் பணம் அனுப்பணும்ல. எல்லாத்தையும் நானே செலவு பண்ணிட்டா அவங்களுக்கு என்னத்தை

அனுப்பறது?" சில நேரம் குழந்தையாக, சில நேரம் குமரியாகத் தன்னவள் மாறி மாறி வெளிப்படுத்தும் பாவனையைக் கண்டு அவன் அதிசயித்து நின்றான். அவளது இந்தப் பேச்சு அவனுக்கு ரசிப்புக்குரியதாய் இருந்தது.

"ம், நீ சொல்றதும் சரி தான்." என்றவன் அமைதியாகி போனான்.

அந்த அங்காடியில் பலசரக்கு மட்டுமல்லாது, சமைக்கின்ற பாத்திரங்கள், காய்கறிகள் என்று அனைத்தும் இருந்தது. எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிக் கொண்டாள்.

"இன்னும் கொஞ்சம் அதிகமா வாங்கு..." அவன் கூறியதற்கு அவள் மறுத்து விட்டாள்.

"என் ஒருத்திக்கு இதே அதிகம் தான்."

"ஏன் நிலா, எனக்குச் சாப்பாடு போட மாட்டியா?" என்று அவன் கேட்க...

"இல்லை..." என்று அவள் பட்டென்று கூறி அவனை அதிர வைத்தாள்.

"ஏன்ம்மா ஏன்...?" அவன் சோகமாகி போனான்.

"நீ சாப்பிடறதுக்கு யாரு துட்டு தருவா?"

"ஓ... அது தான் ப்ராப்ளமா? நான் தர்றேனே." அவன் பல்லை காட்ட...

"சாப்பாட்டுக்கு நீ தருவ... ஆனா சமைக்கிற எனக்குச் சம்பளம் யாரு தருவா? நீயா?"

"அடப்பாவி... சும்மாக்காச்சும் வாங்க சாப்பிடுங்கன்னு சொல்ல மாட்டியா?" அவன் பரிதாபமாகப் பார்க்க...

"எதுக்குச் சொல்லணும்?" அவள் அவனைக் கெத்தாகப் பார்க்க...

"பொழைச்சுக்குவடி ஆத்தா பொழைச்சுக்குவ..." என்று கூறியவனைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"உனக்கு மட்டும் ஸ்பெசல் சாப்பாடு சமைச்சு போடுறேன்." என்று அவள் கண்சிமிட்டி கன்னம் குழி விழ சிரிக்க... அந்தக் கன்னக்குழி பள்ளத்தில் அவன் தொபக்கடீர் என்று விழுந்தே விட்டான்.

"நான் மட்டும் என்ன ஸ்பெசல்...?"

"உனக்கு ஒண்ணு தெரியுமா? எங்கப்பான்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும்."

"டேடி’ஸ் லிட்டில் ப்ரின்ஸஸா நீ?" அவன் கேலி செய்ய...

"ஆமா, என் அப்பாவுக்கு நான் இளவரசி தான். அவருக்கு அடுத்து என்னை அக்கறையா நீ தான் பார்த்துக்கிட்ட..." அது கேட்டு அவன் நெகிழ்ச்சியோடு அவளைப் பார்க்க...

"காலையில் எனக்காக ஹோட்டல் கூட்டிட்டுப் போய் சாப்பிட வச்ச உனக்கு ஒரு வாய் சாப்பாடு போட மாட்டேனா சரவணா?"

"போதும்மா போதும். நெஞ்சை நக்கிட்ட..."

"ச்சீ, ச்சீ... என்ன பேச்சு பேசுற நீ?"

"அது வந்து... அதாவது..." அவன் விழித்தான். 'இந்த நேரம் பார்த்து ஒண்ணும் சிக்க மாட்டேங்குதே.' அவன் தனக்குள் புலம்ப...

"உன் மனசை தொட்டுட்டேன்னு சொல்றியா?" அவள் தெரிந்து சொன்னாளோ? இல்லை தெரியாது சொன்னாளோ? அவன் வேகமாய்த் தலையை மேலும் கீழும் ஆட்டினான். அவனைக் கண்டு சிரித்தவள்,

"போகலாம் வா..." என்று அவனை அழைத்துக் கொண்டு பில் போட சென்றாள்.

எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கி கிளம்பினர். அவர்களது குடியிருப்பு வந்ததும் இருவரும் பொருட்களை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றனர். அவள் எல்லாப் பொருட்களையும் எடுத்து வைக்க உதவியவனுக்கு அவள் காபி போட்டு கொடுத்தாள்.

"நம்பி குடிக்கலாமா?"

"ம்..." என்று அவள் தலையசைக்க... ஒரு மிடறு காபி குடித்தவனின் முகம் மலர்ந்தது.

"உன்னைக் கட்டிக்கப் போறவன் கொடுத்து வச்சவன்..." என்று கூறியவனைக் கண்டு அவளது முகம் செம்மையுற்றது.

அவள் மனதிற்குள் தனது மானசீக காதலனை நினைத்து கொண்டாள். அவனோ அவளது செம்மையுற்ற முகத்தை ரசித்தபடி காபியை பருகி முடித்தான். காபி பருகி முடித்ததும் தனது வீட்டிற்குக் கிளம்ப நினைத்தவன் பின் நின்று,

"ஆமா, உன் கிட்ட கேட்கணும்னு நினைச்சேன். ரொம்ப அழகா, பெர்பெக்ட்டா வொர்க்கை முடிச்சு இருக்க. இப்படிப்பட்ட நீ எப்படி அரியர் வச்ச? என்னால் நம்ப முடியலையே." அவன் அவளைப் பார்த்தபடி கூற... அதைக் கேட்டு அவளது முகம் ஒருமாதிரியாய் மாறிவிட்டது. அதை அவனுக்குக் காட்டாது மறைத்து விட்டாள்.

"அரியர் வச்சதும் நான் தான். வேலையைப் பெர்பெக்ட்டா முடிச்சதும் நான் தான்."

"அது தெரியுது. ஆனா நம்பத்தான் முடியலை."

"சரவணா, ரொம்ப டயர்டா இருக்கு."

"நீ கிளம்புன்னு சொல்லாம சொல்ற. கிளம்பறேன்." என்றவன் வாசல் வரை வந்துவிட்டு மீண்டும் நின்று அவளிடம்,

"நைட் என்ன சாப்பிடுவ?" அவனது அக்கறையில் அவளது உள்ளம் நெகிழ்ந்தது. பார்த்து ஒரு நாளேயான அவனது அன்பு அவளது மனதினை தொடுவதாய்...

"பிரெட், ஜாம் இருக்கு... வாங்கிட்டு வந்திருக்கேன்."

"ஓகே... குட்நைட்..." என்றவன் தனது வீட்டிற்குச் சென்றான்.

நாட்கள் அது பாட்டிற்கு விரைந்து சென்றது... சரவணன், நிலா இடையே புரிதலுடன் கூடிய நட்பு இழையோடியது. அவள் நட்பு என்கிற எல்லையில் இருக்க... அவனோ காதல் என்கிற நினைவில் வானில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தான். அன்று ஞாயிறு என்பதால் விடுமுறையில் எல்லோரும் வீட்டில் இருந்தனர். குணா படுத்து தூங்கி கொண்டிருந்தான். ஞாயிறு ஒருநாள் மட்டும் அவனுக்கு மதியம் தான் காலை பொழுது விடியும். வம்சி அவனது சொந்த ஊருக்குச் சென்றிருந்தான். மாலை தான் அவன் திரும்பி வருவான். சரவணன் மட்டும் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் எங்கேயோ இருந்து மீன் குழம்பின் வாசம் ஆளை தூக்கியது. அவன் மெல்ல நுகர்ந்து கொண்டே வெளியில் வந்தான்.

"ஞாயித்துக் கிழமை அதுவுமா பேச்சுலர்ஸோட கடுப்பை கிளப்பாதீங்கடா? நானே வவுத்துல ஈரத்துணிய போட்டுட்டு படுத்து இருக்கேன். இந்தக் கடங்காரன் எப்போ எந்திருச்சு எப்போ தலப்பாக்கட்டி பிரியாணி சாப்பிட போறது. ஐயோ, அம்மா, பசிக்குதே." என்று வயிற்றைப் பிடித்தபடி வந்தவன் எதிர்த்த வீட்டின் அருகில் சென்று நுகர்ந்து பார்த்தான். அங்கே இருந்து ஒரு வாசனையும் வரவில்லை.

"ஞாயித்துக் கிழமை கூடக் கஞ்சி தான் குடிப்பான் போல... பிசினாறி பய..." அவனை வஞ்சியவன் பக்கத்து வீடான நிலாவின் வீட்டுப் பக்கம் சென்றான். அங்கே சென்றதும் அவனது முகம் மலர்ந்தது.

"கரெக்ட்... நம்மாளு தான் மீன் குழம்பு செஞ்சிருக்கா...? உடனே அட்டெண்டன்ஸ் போட்டுர வேண்டியது தான்."

அவன் கதவை தட்ட போக...

'அவள் உன்னைக் கூப்பிடவே இல்லை. தொறந்த வீட்டுக்குள்ள ஏதோ போன மாதிரி நீ போகாதே.' அவனது மனசாட்சி அவனை எச்சரித்தது.

"அப்படித்தான் போவேன்." என்று மனசாட்சியை அதட்டியவன் கதவை தட்டியே விட்டான்.

"யாரது...?" என்று கேட்டபடி கதவை திறந்த நிலா அவனைக் கண்டதும் ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"என்ன சரவணா?" என்று கேட்க... அவனோ பதில் கூறாது விழிகளால் உள்ளே தேடினான்.

"என்ன தேடுற?" அவளும் பின்னால் திரும்பி பார்த்தபடி கேட்க...

"எங்க வீட்டு பூனைக்கு ரொம்பப் பசியா இருந்துச்சா... உங்க வீட்டில் வேற மீன் குழம்பு வச்சிருக்கிற மாதிரி இருக்கு..." அவள் அவனை ஒருமாதிரியாகப் பார்க்கவும்,

"இல்லை, வாசம் வந்ததுச்சு... அதான் எனக்கு... சாரி, சாரி பூனைக்கு மீன் வாங்கிட்டு போகலாம்ன்னு வந்தேன்." அவன் தட்டுத் தடுமாறினான். அதைக் கண்டு அவள் களுக்கென்று சிரித்தாள்.

"நானே உன்னைக் கூப்பிடணும்ன்னு நினைச்சேன். நீயே வந்திட்ட... வா, வா..." என்று அவள் அவனை உள்ளே அழைக்க... அவன் வேகமாய் உள்ளே நுழைந்தான். எங்கே அவள் மனம் மாறி விடுவாளோ என்கிற பயம் தான்...

"எதுக்கு என்னைக் கூப்பிடணும்ன்னு நினைச்ச?" கேள்வி அவளிடம் இருந்தாலும் அவனின் பார்வை உணவு மேசை மீதே இருந்தது.

"உன்னைய எதுக்குக் கூப்பிடுவாங்க. சாப்பிடத்தான்." அவள் கூறியதும் அவன் முகம் மலர அவளைப் பார்த்தான்.

"வா..." என்று அவனை அழைத்தவள் அவனை நாற்காலியில் அமர வைத்து அவன் முன் வாழையிலை விரித்து அதில் சுடச்சுட சோறு போட்டு அதன் மீது மீன் குழம்பை ஊற்றினாள். பின்பு பொறித்த மீன் துண்டுகளை இலையின் ஓரமாய் வைத்தாள்.

"ம், சாப்பிடு சரவணா..." என்று அவள் அவனை ஊக்குவிக்க...

"நீ தெய்வம்மா தெய்வம்..." என்று அவளை நோக்கி கை கூப்பியவன் அடுத்த நொடி சோற்றைக் கபளீகரம் செய்ய ஆரம்பித்தான். நொடியில் காலியானது சோறு... அவள் சிரித்தபடி மீண்டும் பரிமாறினாள்.

"நீ எனக்குச் செய்ற உதவிக்குச் சின்ன உபகாரம் இது..." என்று கூறி புன்னகைத்தவளை கண்டு அவன் மெய் மறந்தான்.

'நீ தினமும் இப்படிப் பரிமாறணும்ன்னு என்கிறது தான் என்னுடைய ஆசை...' என்று நினைத்தவன் அதை வெளியில் சொல்லவில்லை.

"இது சின்ன உபகாரமா? பெரிய உபகாரம். எங்காத்தா மாதிரி நீயும் ஞாயிறு அதுவுமா மீன் சோறு ஆக்கி போட்டு இருக்கியே. உனக்குக் கோவில் கட்டி கும்பிடுறேன் தாயே." உண்டு முடித்துக் கையைக் கழுவி விட்டு வசனம் பேசியவனைக் கண்டு அவள் மீண்டும் சிரித்தாள்.

"இது தான் சரவணா உன் கிட்ட எனக்குப் பிடிச்சது. எப்பவும் நீயும் சிரிச்சிக்கிட்டே இருந்து அடுத்தவங்களையும் சிரிக்க வைக்கிறியே. இந்தக் குணம் யாருக்கும் வராது." என்றவளை இமைக்க மறந்து பார்த்தபடி அவன் நின்றிருந்தான்.

'என்னோட சிரிப்புக்கு பின்னாடி பெரிய வலி இருப்பது உனக்குத் தெரியுமா பெண்ணே? அந்த வலியோட காரணம் நீ என்பதும் உனக்குத் தெரியுமா? உன் மீதான காதல் எனக்கு எத்தனை பெரிய வலியை கொடுக்கிறது என்பது

உனக்குத் தெரியுமா? சொல்லாத காதல் செல்லரிக்கும் புற்றுநோய்க்குச் சமம். இப்போது நானும் இந்த நோயால் அவஸ்தைப்படுகிறேன் என்பது உனக்குத் தெரியுமா? எப்போது நீ என்னைக் காதலிக்கப் போகிறாய் நிலா பெண்ணே!' மனதிற்குள் கூறியபடி அவன் நிற்க...

"சரவணா..." அவள் அவன் கண்முன் கையை விரித்து ஆட்டினாள். அதில் சுயவுணர்வு பெற்றவன்,

"சோறு போட்ட உனக்கு ஏதாவது செய்யணுமே..." என்று அவன் நாடியில் விரல் வைத்து யோசிக்க...

"என்ன செய்யப் போகிற?" அவள் ஆர்வத்துடன் அவனைப் பார்த்தாள்.

"ம், ஐடியா... இன்னைக்குப் பீச் போகலாமா?" அவன் கேட்க... அவளும் சந்தோசமாய்ச் சம்மதமாய்த் தலையசைத்தாள்.

நிலாவிடம் விடைபெற்று தனது வீட்டிற்கு வந்தவனைத் தூங்கி எழுந்து அமர்ந்திருந்த குணா வரவேற்றான்.

"வாடா, உனக்காகத் தான் காத்துக்கிட்டு இருக்கேன். பிரியாணியை ஒரு வெட்டு வெட்டிட்டு வரலாம்."

"பிரியாணியா? யாருக்கு வேணும் பிரியாணி? பிரியாணி நேரத்துக்கு என் பசியாற்றியதா? பிரியாணி ஓசியில் கிடைக்குமா? பிரியாணி சாப்பிட்டால் கை இப்படிக் கமகமவென்று மணக்குமா?" என்று நண்பன் மூக்கின் அருகே சரவணன் தனது இடதுகையைக் கொண்டு செல்ல...

"கருமம் பிடிச்சவனே... பீச்சாங்கையை எடுத்து தொலைடா. நாறுது." என்று குணா கத்த... அவன் உடனே தனது கையை இழுத்து கொண்டவன் வலக்கையை நண்பனது மூக்கின் அருகில் கொண்டு செல்ல... குணா மீன் குழம்பின் வாசனையை நுகர்ந்தவன் முகம் மலர்ந்தவனாய்,

"ஐய், மீன் குழம்பு... யாருடா கொடுத்தா?"

"உன் கேள்வியே தப்பு தம்பி. யாரு கொடுத்தான்னு கேட்க கூடாது. யாரு சோறு போட்டு, மீன் குழம்பு ஊத்தி பரிமாறினாங்கன்னு கேட்கணும்."

"யாருடா...?"

"எல்லாம் உங்க அண்ணி தான்." சரவணன் வெட்கப்பட...

"யூ மீன் தட் குள்ள கத்திரிக்கா...?" குணா திகைப்பில் வாயை பிளைக்க...

"குள்ள கத்திரிக்காய்ன்னு சொன்ன மண்டைய பிளந்துருவேன். உன்னோட வருங்கால முதலாளியம்மா, என்னோட வீட்டுக்காரம்மா, ஆல்வேஸ் மை நிலா பொண்ணு தான்." அவன் தலையை ஆட்டி பாவனையுடன் கூற... குணாவால் நம்ப முடியவில்லை.

"உண்மையா தான்டா சொல்றேன். ஈவினிங் நாங்க ரெண்டு பேரும் பீச்சுக்கு போறோம்."

"அப்போ நம்ம சினிமா ப்ரோக்ராம்...?"

"கேன்சல்... ஐயா என்ன உன்னை மாதிரி முரட்டு சிங்கிள்ன்னா நினைச்ச... ஐயா கமிட்டெட். ஃபாலிங் இன் லவ்."

"அடப்பாவி, பிகரை கண்டதும் பிரெண்ட்டை கழட்டி விட்டுட்டியே."

"இட்ஸ் ஆல் இன் த கேம். விதி தம்பி விதி... எல்லாம் விதிப்படி தான் நடக்கும்." என்றவன் ஓய்விற்காகத் தனது அறையை நோக்கி செல்ல... குணா புலம்பியபடி வெளியில் கிளம்பி சென்றான்.

மாலையில் சரவணன், நிலா இருவரும் கடற்கரை செல்லும் வரை எல்லாம் நன்றாக இருந்தது. அதன் பிறகு தான் நேரம் சரியில்லாது போனது.

"வாவ், எவ்வளவு பெருசா இருக்கு...?" கடற்கரையைச் சுற்றி பார்த்தபடி கூறியவளை கண்டவன் அப்போது தான்

அவளுடன் சேர்ந்து கடற்கரையை ரசித்தான்.

"ம், பெரிசா தான் இருக்கு." என்றவனை ஆச்சரியமாகப் பார்த்தவள்,

"நீ இதுக்கு முன்னாடி வந்தது இல்லையா?" என்று கேட்க...

"ப்ச், இல்லை..."

"ஏன்...?"

"வேலையைப் பார்க்கவே நேரம் சரியா இருக்கும். இதில் எங்கே இருந்து ரசிக்க...? இந்த வழியா போகும் போது பார்த்து இருக்கேன். அவ்வளவு தான்."

"வேலை எப்பவும் இருக்கத்தான் செய்யும் சரவணா... இது மாதிரி அப்பப்போ வந்து ரசிக்கிறதில் தப்பில்லை."

"சொல்லிட்டல்ல... இனி அடிக்கடி வந்திர்றேன். பட் ஒன் கன்டிசன்."

"என்ன?"

"நீயும் கூட வரணும்."

"வந்துட்டா போச்சு." என்று கலகலத்து சிரித்தவளை அழைத்துக் கொண்டு அங்கிருந்த மணலில் அமர்ந்தான். அவள் அங்குச் சென்ற சுண்டல் விற்றுக் கொண்டிருந்த பையனை அழைத்துச் சுண்டல் வாங்கினாள்.

"உனக்கு சரவணா?"

"எனக்கு மாங்காய்..." என்று அவன் பிகு செய்யாது மாங்காய் பத்தையை வாங்கிக் கொண்டான்.

அப்போது பலத்த காற்று வீசியதில் அவளது துப்பட்டா படபடத்தது. நல்லவேளையாக அவள் அதைச் சுடிதாரோடு சேர்த்து குத்தி இருந்ததால் பறக்காது தப்பித்தாள். அவள் துப்பட்டாவை பிடித்து இழுக்கும் முன் பின்னால் சென்ற ஒருவன் அவளது துப்பட்டாவை பிடித்து இழுக்க... அவளது துப்பட்டா சுடிதாரோடு சேர்ந்து கிழித்துக் கொண்டு வந்தது.

"ஆ..." என்று அலறியபடி அவள் சுடிதாரை பிடித்துக் கொண்டு விழிக்க...

சரவணன் சூழ்நிலையை ஊகித்தவனாய் எழுந்து சென்று துப்பட்டாவை பிடித்து இழுத்தவனின் சட்டை காலரை பற்றியவன் அவனிடம் இருந்து துப்பட்டாவை பறித்து நிலாவிடம் கொடுத்தான். நிலா அதைத் தன் தோளோடு சுற்றி போர்த்திக் கொண்டாள். பின்பு சரவணன் அவனை அடிப்பின்னி எடுத்து விட்டான். அத்தனை ரௌத்திரம் அவனிடத்தில்... நிலவால் கூட அவனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அங்கே இருந்த சிலர் அவர்களைப் பிரித்துவிட்டனர். இருந்தாலும் சரவணன் எகிறிக் கொண்டு வந்து அவனை அடித்தான். காவலர் வந்ததும் தான் அவனது கோபம் அடங்கியது. அவன் அவரிடம் பேசி அந்தப் பொறுக்கியை கைது செய்ய வைத்தான்.

"போகலாம் சரவணா..."

அவள் அவனது கையைப் பிடித்து இழுத்தாள். அவள் தன் கையைப் பிடித்திருப்பதைக் கண்ட சரவணன் சிறகில்லாது வானில் பறந்தான். அந்த நொடி அவன் தன்னை அவளது ஹீரோவாக எண்ண துவங்கினான். ஆனால் அவளது மனதில் வேறொருவன் ஆழமாய்ப் பதிந்திருப்பதை அவன் அறியாது போனது தான் அந்தோ பரிதாபம்...!!!

தொடரும்...!!!

## அத்தியாயம் : 4

நடு இரவில் ஆழ்ந்து உறங்கி கொண்டிருந்த சரவணனை அவனது அலைப்பேசி அலறியடித்து எழுப்பியது. ஆனால் அவனோ அலறியடிக்காது ஆழ்ந்து உறங்கி கொண்டிருந்தான். குணா தூக்கத்தில் திரும்பி படுத்தவன்,

"டேய் எருமை, ஃபோன் அடிக்குதுடா. எடுத்து தொலை." என்று கூறியவன் அடுத்த நொடி ஆழ்ந்து உறங்கி விட்டான்.

வம்சி தான் தூக்கத்தில் இருந்து விழித்தவன் தூக்க கலக்கத்தோடு சரவணனின் அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தவன்,

"சொல்லுங்க..." என்று கூற...

"எங்கேடா அந்தக் கூறுகெட்ட குக்கரு...? நான் பெத்த மக்கரு..." கர்ஜனையாய் ஒலித்த குரலில் வம்சியின் தூக்கம் பறந்தோடியது. மறுபக்கம் ஒலித்த சிம்ம குரலோனை அவனுக்கு அடையாளம் தெரியாது போகுமா?

"அப்பா..." என்று அவன் பயபக்தியுடன் விளிக்க...

"அப்பா தான்டா... நான் பெத்த லூசுப்பயலை எழுப்பி விடு. அவன் அம்மாவுக்கு உடம்புக்கு சுகமில்லை."

"என்னது அம்மாவுக்கு உடம்பு முடியலையா?" வம்சி அலறிய அலறலில் மற்ற இருவரும் பாய்ந்தடித்துக் கொண்டு எழுந்து அமர்ந்தனர்.

"யாரு அம்மாவுக்குடா? என்னாச்சு?" குணா விசாரிக்க... சரவணன் வம்சியின் கையிலிருந்த தனது அலைப்பேசியைப் பார்த்தவன் சட்டென்று அதைப் பறித்துக் காதில் வைத்தான்.

"அம்மாவுக்கு என்னாச்சு?" அவன் பதற்றத்துடன் கேட்க...

"அந்த அக்கறை இருக்கிறவன் நேரே வந்து பாருடா..." அவனது தந்தை சொக்கன் உறும...

"இப்போ சொல்ல போறீங்களா இல்லையா? இல்லைன்னா அப்பன்னு கூடப் பார்க்க மாட்டேன்." அவனும் பதிலுக்கு உறுமினான்.

"அடேய் தம்பி, நம்மளை பெத்த ஆத்தாவுக்கு நேர்ந்த கதையைக் கண்டியா?" அவனது மூத்த அக்கா கலாவதி அழுது புலம்பும் சத்தம் அவனது செவியை நிறைத்தது.

"யாராவது விசயத்தைச் சொல்லி தொலையுங்களேன்." அவன் மறுபடியும் கத்த... மறுபக்கம் கப்சிப் என்று அமைதியானது.

"உங்கம்மா நெஞ்சை பிடிச்சிட்டு ஹாஸ்பிட்டல்ல படுத்து கிடக்கா... நீ வெரசா வந்து சேரு." அவன் தந்தை கூறியதும் தான் தாமதம் அவன் பதிலை கூடச் சொல்லாது அழைப்பை துண்டித்துவிட்டு உடனே தாயை காண தயாரானான். அவனுடன் குணாவும் கிளம்ப...

"நீ எதுக்குடா கிளம்பற? நாம ரெண்டு பேரும் இல்லைன்னா வம்சியால தனியா சமாளிக்க முடியாது."

"இல்லை... நான் வருவேன்." என்று அடம்பிடித்த குணா அவனது கண்களுக்கு வித்தியாசமாகத் தெரிந்தான். ஆனாலும் அதை ஆராயாது,

"சரி வந்து தொலை..." என்றவன் வம்சியிடம் சொல்லி கொண்டு ஊருக்குக் கிளம்பினான். கிளம்பும் முன் அவன் நிலாவிடம் சொல்லிவிட்டுக் கிளம்பத்தான் ஆசை கொண்டான். ஆனால் அர்த்த ராத்திரியில் அவளது வீட்டு கதவை தட்ட அவனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அதனால் அவன் அவளிடம் சொல்லாது கிளம்பிவிட்டான். போகும் வழியெல்லாம் ‘அன்னைக்கு ஒன்றுமாகக் கூடாது’ என்று அவனது மனம் பயத்தில் அடித்துக் கொண்டது.

"ப்பா, தம்பி கிளம்பிட்டானா?" கலாவதி ஆர்வத்துடன் கேட்க...

"அதான் அவன் அம்மாவுக்கு உடம்பு சரியில்லைன்னு சொல்லி இருக்கேன்ல. வந்துருவான், வந்திருவான்."

"அவனுக்கு அம்மாவா? அப்போ இவருக்கு நான் யாருன்னு கேளுடி..." பொன்னுத்தாய் சிலிர்த்துக் கொண்டு கூந்தலை முடிந்தபடி மகளிடம் கேட்டார். அவருக்குத் தான் உடல்நலம் சரியில்லை என்று சொக்கன் கூறியது.

"யாருடி இவ... விவரம் இல்லாம பேசுறது?" சொக்கன் மனைவியை முறைத்தார்.

"உங்களுக்கு என்ன...? அசால்ட்டா பொய் சொல்லிப்புட்டீக... ஆனா அவன் வந்து என்னைத் தான் வைவான்." என்று பொன்னுத்தாய் மூக்கை சிந்தினார்.

"அதையும் நான் பார்க்கிறேன்." சொக்கன் வேட்டியை மடித்துக் கட்டி கொண்டு வெளிவாயிலை நோக்கி செல்ல... கலாவதி அவரின் பின்னேயே சென்றார்.

"ப்பா, எப்படியாவது என் மகள் அஞ்சலியை தம்பிக்கு கட்டி வச்சிருங்கப்பா."

"அதுக்குத் தானே அவனை வர சொல்லியிருக்கேன். வந்ததும் இரண்டில் ஒண்ணு பார்த்துடுறேன்." அவர் மீசையை முறுக்க...

"போன தடவை மாதிரி அவன் விருப்பத்துக்கு வளையாதீக. ஸ்ட்ரிக்ட்டா சொல்லிப்புடுக." அதைக் கேட்டு அவரது முகம் மாறிப் போனது.

"இவ்வளவு நாள் அவன் இஷ்டத்துக்கு விட்டது போதும். அதான் லூசுப்பய மாதிரி திரிஞ்சிக்கிட்டு இருக்கான். இங்கே வரட்டும்... போகும் போது ஒரு கால்கட்டு போட்டு தான் அனுப்புவேன்."

"நம்ம அஞ்சலி கூட..."

"நிச்சயமாய்..." என்றவரது முகம் ஆத்திரத்தில் ஜொலித்தது. அன்று அவர் கண்ட அவமானம் மனதில் வந்து போனதோ!

சொக்கன், பொன்னுத்தாய் தம்பதியினருக்கு மூன்று மக்கள்... முதலிரண்டும் பெண் பிள்ளைகள். மூத்தவள் கலாவதி, அவரது கணவர் பெயர் தர்மராஜ். ஒரே ஒரு மகள் அஞ்சலி. இரண்டாவது மகளின் பெயர் அமராவதி, கணவர் பெயர் அழகிரி. இவர்களுக்கு ஒரே ஒரு மகன் ரஞ்சன். கடைசிப் பையன் தான் சரவணன். அவனுக்கும் கலாவதிக்கும் பதினைந்து வயது வித்தியாசம். அதனால் தான் கலாவதிக்கு ஆரம்பித்ததில் இருந்தே தனது தம்பியை மகளுக்கு மணம் முடிக்க வேண்டும் என்கிற ஆவல் அதிகம் இருந்தது. ஆனால் சரவணனோ அதற்கு இப்போது வரை பிடி கொடுக்கவில்லை. முன்பு அவனுக்குத் தந்தையின் ஆதரவு இருந்தது. ஆனால் அந்தச் சம்பவத்திற்குப் பிறகு அவனுக்குத் தந்தையின் ஆதரவு இல்லை. அதனால் தான் சந்தர்ப்பம் பார்த்து கலாவதி சரவணனின் நிறுவனத்திற்கு நிலா வேலைக்குச் சென்றதை தந்தையிடம் போட்டு கொடுத்து தம்பியுடனான தனது மகளின் திருமணத்தை உறுதி செய்து கொண்டாள். அவளுக்கு அவளது காரியம் நடந்தால் போதும். இதை அறியாத சரவணன் பதட்டத்துடன் வந்து கொண்டிருந்தான்.

விடியற்காலையில் ஊர் எல்லையைத் தொட்டதும் சரவணன் தந்தைக்கு அழைத்தான்...

"எந்த ஹாஸ்பிட்டல்?"

"நேரே வீட்டுக்கு வா..."

"அதுக்குள்ள வீட்டுக்கு கூட்டிட்டு வந்திட்டீங்களா?" அவன் முடிக்கும் முன் அழைப்பு துண்டிக்கப்பட்டு இருக்க...

"என்னடா குணா...? சகுனமே சரியில்லையே..." அவனது ஏழாம் அறிவு யோசிக்கத் தொடங்கியது.

"அதனால் தானேடா நானும் உன் கூடக் கிளம்பி வந்தது." என்று குணா முணுமுணுத்தான்.

"என்னடா சொன்ன...?"

"நான் ஒண்ணும் சொல்லலையே... வீட்டுக்குப் போய்ப் பார்த்தால் நிலவரம் என்னன்னு தெரிய போகுது."

"நீ சொல்றதும் சரி தான்டா..." என்ற சரவணன் காரை வீட்டை நோக்கி விரட்டினான்.

சரவணன் வீட்டின் முன் காரை நிறுத்தியதும் அவனது கார் சத்தம் கேட்டு பொன்னுத்தாய் வெளியில் ஓட எத்தனித்தார். சொக்கன் அவரைத் தடுத்தார்.

"உன்னை வச்சு தான் அவனைப் பொறியில சிக்க வச்சிருக்கேன். நீ எதுக்கு இப்ப போற? போய், உள்ளாற போய்ப் படு."

"எம் மவன் ஒண்ணும் எலி கிடையாது. நீங்க பொறி வச்சு பிடிக்க... அவன் சிங்கம். உங்க நரி வேலை எல்லாம் அவன் கிட்ட ஆகாது." என்றவர் கணவரது பேச்சை கேட்காது செல்ல...

"மகன் வந்ததும் புருசன் உங்க பேச்சு கேட்க மாட்டேங்கிறாங்க பாருங்க." கலாவதி தந்தைக்கு ஏத்திவிட...

"நீ வேற சும்மாயிரு புள்ள..." சொக்கன் மகளை அடக்கினார்.

"ம்ஹூம், நீங்களும் அவுட்டா...?" என்று கலாவதி புலம்பி கொண்டே தம்பியை காண சென்றாள்.

தன்னை வரவேற்க வந்த பொன்னுத்தாயை கண்ட சரவணன் திகைத்து விழித்தான். பொன்னுத்தாயோ மகனை கண்டதும் ஓடி வந்து,

"சரவணா, எப்படி இருக்கப்பா?" என்று நலம் விசாரிக்க...

"ம்மா, உனக்கு உடம்பு சரியில்லைன்னு அப்பா சொன்னாரு."

"அது வந்து..." பொன்னுத்தாய் இழுக்க...

"எதுக்கும்மா வந்து போயின்னு இழுக்க... உம் பேத்திக்கும், எந்தம்பிக்கும் கல்யாணம்ன்னு சட்டுப்புட்டுன்னு விசயத்தைச் சொல்லு." கலாவதி கூறிய செய்தியை கேட்டு குணா நெஞ்சில் கை வைக்க... சரவணனோ அம்மாவை கோபத்துடன் பார்த்தான்.

"ம்மா, நீயும் அந்தாளோட சேர்ந்துட்டு என்னை ஏமாத்திட்டல்ல. உனக்கு மகனை விட உன் மகள் தான் உசத்தியா போயிட்டாள் இல்ல... உனக்கு என்னாச்சோ, ஏதாச்சோன்னு பயந்துட்டே காரை ஓட்டி வந்தது எனக்குத் தான் தெரியும்."

"நீ எதுக்குக் காரை ஓட்டுற? இந்த எருமை மாடு சும்மா தூங்கிட்டு வந்தானாக்கும்." பொன்னுத்தாய் குணாவை பார்த்து கடிய...

"ம்மா, பேச்சை மாத்தாதே. நான் கேட்டதுக்குப் பதிலை சொல்லு..."

"என்னத்தைச் சொல்ல சொல்லுற சரவணா... அப்பனும், மகளும் சேர்ந்துட்டு கூத்தடிக்கிறதை நீயே வந்து பாரு." என்றவர் அவனை அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் சென்றார்.

"அஞ்சும்மா, மாமன் வந்து இருக்கான் பாரு... களைச்சு போய் வந்திருக்கான். சூடா காபி போட்டுக் கொண்டு வா..." கலாவதி கூறியது கேட்டு குணா ஆர்வத்துடன் உள்ளே பார்க்க... சரவணனோ கடுப்புடன் தந்தையை முறைத்துக் கொண்டிருந்தான்.

"இப்போ எதுக்கு என்னைக் கூட்டிட்டு வந்து கூத்தடிக்கிறீங்க?" சரவணன் தந்தையைப் பார்த்து கத்த...

"நீ சென்னையில் கூத்தடிச்சதை கேள்விப்பட்டுத் தான் நான் உன்னை இங்கே வரவழைச்சது."

"நான் ஒண்ணும் கூத்தடிக்கலை. வேலை போட்டு கொடுத்தேன்."

"வேலைக்காரியை எதுக்குடா ஊரை சுத்தி காட்ட கூட்டிட்டு போற?" அவர் எகிற...

"நிலா ஒண்ணும் வேலைக்காரி இல்லை. என்னுடைய வீட்டுக்காரி."

"ஐய்யோ, ஐய்யோ... என்ன வார்த்தை சொல்றான் பார்த்தீங்களாப்பா?" கலாவதி வாயில் அடித்துக் கொண்டு கத்த...

"கேட்டுட்டு தான்ம்மா இருக்கேன்." சொக்கன் மகனை முறைத்தபடி பதில் கூற...

"அக்கா, செத்த நேரம் சும்மாயிருக்கியா?"

"நான் எதுக்குடா சும்மா இருக்கணும். அப்பா கேட்டதுக்குப் பதிலை சொல்லு."

"அதான் சொல்லிட்டேனே... நிலா என்னுடைய மனைவியாகப் போகிறவள்ன்னு..."

"அது இந்த ஜென்மத்தில் நடக்காது." சொக்கன் உறுதியாய் கூற...

"அதையும் பார்த்திரலாம்." அவன் பதிலுக்குப் பேச...

"எதைடா பார்க்கலாம்? உன்னோட ஆசைக்காக என் மானம், மரியாதையை இழக்க சொல்லுறியா? உனக்குத் தான் வெட்கம், சூடு, சொரணை இப்படி எதுவும் கிடையாது. ஆனா எனக்கு நிறைய இருக்குடா."

"ஹேய் ஹேய்... ம்மா பாரும்மா... உன் புருசன் சோக் அடிக்கிறதை." என்று தாயிடம் தந்தையைக் கலாய்த்தவன் தந்தையிடம்,

"ஏன்ப்பா உண்மையைச் சொல்லுங்க? உங்களுக்கு இந்த வெட்கம், மானம், சூடு, சொரணை இதெல்லாம் இருக்கா என்ன? நீங்க கல்யாணம் பண்ணினப்பவே இதை எல்லாம் தூக்கி போட்டுட்டதா செத்து போன அப்பத்தா சொல்லுச்சே..." அவன் அவரைக் கலாய்த்தான்.

"செத்தும் என் உசுரை வாங்குது கிழவி." சொக்கன் தனது தாயின் புகைப்படத்தை எரித்துவிடுவது போல் பார்த்தார்.

"நான் உம்மவன்ப்பா... உன்னை மாதிரி தான் இருப்பேன். பொஞ்சாதி கிட்ட வெட்கம், மானம், சூடு, சொரணை இதெல்லாம் பார்க்க கூடாது." என்று அவன் வெட்கப்படுவது போல் பாவனைச் செய்ய...

"அடச்சீ அடங்குடா... உன் ஆசையைத் தூக்கி தூர போட்டுட்டு உன் அக்கா மகளைக் கல்யாணம் பண்ணும் வழியைப் பாரு..."

சொக்கன் சொல்லும் போதே அஞ்சலி காபி எடுத்துக் கொண்டு அங்கே வந்தாள். வந்தவள் நேரே குணாவிடம் காபியை நீட்ட... சண்டை போட்டுக் கொண்டிருந்த அனைவரும் இதைக் கவனிக்கவில்லை. குணா பல்லை காட்டியபடி காபியை எடுத்துக் கொண்டான்.

"சுகர் நிறையப் போட்டு இருக்கியா அஞ்சு பேபி..."

"ம், நாலு ஸ்பூன்..." அவள் வெட்கப்பட்டுக் கொண்டே சொல்ல... அவளது வெட்கம் கண்டு குணா அப்படியே கற்பனை உலகில் சஞ்சரித்தான்.

"இங்கே பாருங்க... அஞ்சுவை நான் என் அக்கா மகளா பார்க்கலை. என் மகளா பார்த்தேன்னு இப்படி எல்லாம் டயலாக் விட விரும்பலை. அஞ்சு கொஞ்சும் அழகா இருந்திருந்தா நான் திரும்பி பார்த்து இருப்பேனோ என்னவோ...? அது உங்களை மாதிரியே இருக்கு. எப்படித் திரும்பி பார்க்க மனசு வரும் சொல்லுங்க..." அவன் கூறியதை கேட்டு சொக்கன் திகைத்து விழிக்க... குணா மகிழ... அஞ்சலி மட்டும்,

"மாமா..." என்று சிணுங்கினாள்.

"சும்மா லுலுலாய்க்கு..." சரவணன் அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் சொல்ல... அதைக் கண்ட அஞ்சலிக்குச் சிரிப்பு வந்தது.

"முடிவா என்ன தான்டா சொல்ற?" சொக்கன் இறுதியாய் கேட்க...

"நிலா தான் என்னோட பொஞ்சாதி. அதில் மாற்றம் இல்லை." என்றவன் வீட்டை விட்டு வெளியேறி விட்டான்.

"டேய், நானும் வர்றேன்டா... நில்லுடா." குணா கத்தி கொண்டே அவன் பின்னே செல்ல...

"நான் நிம்மதியை தேடி போறேன். கூடவே வந்து என் உயிரை வாங்காதே..." என்றவன் தனது நடையை எட்டி போட்டான்.

"குணா..." அஞ்சலி அவனை அழைக்கவும் அவன் நண்பனின் பின்னே செல்லும் தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டவனாய் அவளைக் கண்டு இளித்தான். பிறகு அவளிடம் கடலை போட்டதில் அவன் முற்றிலும் நண்பனை மறந்து போனான். பிகரை கண்டதும் பிரெண்ட்டை மறந்து போன படுபாவியாகி போனான் அவன்...!!!

சரவணன் விறுவிறுவென்று நடந்தவன் நேரே மாரியம்மன் கோவில் முன்னிருந்த அரச மரத்தடியில் இருந்த திண்டில் வந்து அமர்ந்தான். அவனையும் அறியாது அவனது விழிகள் நேரெதிரே இருந்த நிலாவின் வீட்டினை பார்த்தது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வரை நிலாவின் குடும்பம் இங்குத் தான் இருந்தது. அந்தப் பொல்லாத நாளுக்குப் பிறகே அவளது குடும்பம் இந்த ஊரை விட்டுச் சென்றுவிட்டது. அவனது மனம் ஏழாண்டுகளுக்கு முன்பு அவளைச் சந்தித்த தினத்திற்குப் பயணப்பட்டது. கல்லூரி விடுமுறைக்காக ஊருக்கு வந்திருந்தவன் இந்தத் திண்டில் அமர்ந்து கொண்டு பல் தேய்த்துக் கொண்டு வேடிக்கை பார்த்தபடி தனது நண்பன் குணாவிற்காகக் காத்திருந்தான். அப்போது தான் அந்தச் சத்தம் கேட்டது.

"ம்மா, இனி இப்படிப் பண்ண மாட்டேன்ம்மா..." என்று ஒரு பெண்ணின் அலறல் சத்தம் அவனது காதுகளில் விழுந்தது.

'யாருடா அது...?' என்று எண்ணியபடி திரும்பியவன் அங்கு நிலாவை கண்டதும் இனிமையாய் அதிர்ந்து போனான்.

பாவாடை சட்டை அணிந்து, ஒரு பக்கம் சடையை ஏற்றி கட்டி, மறுபக்கம் ரிப்பன் இல்லாது சடை அவிழ்ந்திருக்க, அவள் முகம் எல்லாம் சிவக்க நின்றிருந்த கோலம் இன்று வரை அவனால் மறக்க இயலாது. அந்த நொடி அவள் அவனது மனதில் பசை போட்டு ஒட்டி கொண்டாள்.

"படிக்கப் பள்ளிக்கூடம் அனுப்பிச்சா... நீ என்னடி பண்ணிட்டு வந்திருக்க?" அவளது அன்னை அஞ்சலை கையில் குச்சியோடு ஆக்ரோசமாய்க் கேட்டபடி நின்றிருந்தார்.

"என்ன பண்ணினேன்?" என்று கேட்டவளின் காலில் குச்சியால் ஒரு அடி போட்டவர்,

"பள்ளிக்கூடச் சுவர் ஏறி குதிச்சு அந்தப் பக்கம் இருந்த தங்கம் அண்ணே மாந்தோப்புக்குள்ள போய்த் தூங்கிட்டு வந்திருக்க."

"ம்மா, தூங்கினது ஒரு குத்தமா?" அத்தனை அடி வாங்கிய போதும் அவள் அடங்காது கூற...

"தூங்கினது குத்தம் இல்லை..."

"ஐய் ஜாலி, அப்போ இனி தூங்க போகலாமா?" அவள் குதூகலமாய்க் கூற...

"இவ்வளவு அடி வாங்கியும் அடங்குறாளான்னு பாரு..." அஞ்சலை அங்கலாய்க்க...

"அது தெரிஞ்ச கூத்து தானே மதினி. அவளை விட்டுப்புட்டு உம் மாட்டைப் போய்க் கவனி. அது நம்ம ராசு அண்ண தோட்டத்துல மேயுது." அங்கு வந்த பெண் ஒருத்தி அவரிடம் சொல்லிவிட்டு செல்ல...

"அது என்னவோ வாஸ்தவம் தான். இந்தக் கழுதையைத் திருத்துறதுக்குப் பதிலா தினம் பத்து கழுதையை

மேய்ச்சிட்டு போகலாம்." என்று பதில் கூறியவரின் கவனம் மகளின் மீது திரும்பியது.

"அண்ணே, தோப்புல இருந்து மாங்காய் திருடினியா?"

"ஐயோ இல்லைம்மா..."

"உண்மையைச் சொல்லுடி..." அவர் கையில் குச்சியுடன் மிரட்ட...

"சத்தியமா திருடலைம்மா..."

"அடிங்க, என் சிறுக்கி மகளே... பொய்யாடி சொல்ற. உன் யோக்கியதையை அண்ணே ஃபோனில் வீடியோ எடுத்து காட்டிப்புட்டாக. இன்னொரு தடவை திருடுவியா? திருடுவியா?" என்று கேட்டபடி அவர் அவளது கால்களில் மாற்றி மாற்றி அடி வெளுக்க ஆரம்பித்தார்.

"ஐயோ வலிக்குது, வலிக்குது..." என்று அலறியவளின் வார்த்தையில் இருந்த வலி ஏனோ அவளது முகத்தில் இல்லாது இருப்பதை அறிந்து அவனுக்குச் சிரிப்பு வந்தது.

'அட யாருய்யா இது, நம்மளை விடப் பெரிய சண்டிராணியா இருக்கிறது?' என்றபடி அவன் அவளையே பார்த்து இருந்தான்.

அஞ்சலை ஒருவழியாக அடித்து ஓய்ந்தவராய் அங்கிருந்து செல்ல... நிலா திண்டின் மறுபக்கம் வந்து அமர்ந்தாள். அவளது தங்கைகள் இருவரும் அவளுக்கு இருபக்கம் வந்து அமர்ந்தனர்.

"அம்மா இவ்வளவு அடிச்சிச்சே... உனக்கு வலிக்கலை நிலா?" துர்கா அக்காவை பார்த்துக் கவலையாகக் கேட்க... நிலா அதற்குப் பதில் சொல்லாது,

"டொட்டட்டய்ங்..." என்றபடி பாவாடை உயர்த்த... அவள் என்ன செய்யப் போகிறாள்? என்கிற ஆர்வம் அவனை உந்த எட்டிப்பார்த்தான்.

'த்தூ, பொட்டப்புள்ள பாவாடையை விலக்குறதை பார்க்கிறதை பாரு. டேய் லூசுப்பயலே, கண்ணைத் திருப்புடா...' என்று அவனை அதட்டிய மனசாட்சியைக் கழற்றி வீசியெறிந்தவன் சிறிதும் மனசாட்சியின்றிப் பெண்ணவளை பார்க்க ஆரம்பித்தான்.

"டொட்டட்டய்ங்..." திரும்பக் கூறியபடி அவள் காலில் இருந்ததைக் கழற்றிய போது தான் அவன் அதிசயித்துப் போனான்.

'என்னா பொண்ணுடா சாமி... இது நம்ம லிஸ்ட்லயே இல்லையே. நம்மளை எல்லாம் விடப் பெரிய கேடியா இருப்பா போலிருக்கே.' என்று அவன் ஆவென அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

"டேய் சரவணா, என்னடா பண்ணிக்கிட்டு இருக்க...?" அங்கு வந்த குணா தான் கண்ட காட்சி கண்டு திகைத்துக் கேள்வி நிற்க...

"அடேய் லூசுப்பயலே, வாயை வச்சிட்டு சும்மா இருக்க மாட்ட..." அவன் தனது மனசாட்சி என்று நினைத்து நண்பனை திட்டினான்.

"லுசுப்பயலா...? யாருடா? நானா...?" குணா வேட்டியை மடித்துக் கட்டியபடி சண்டைக்கு வர...

"பங்கு, நீ எப்போ வந்த? சொல்லவே இல்லை..." சரவணன் அவனைக் கண்டு ஈயென்று இளிக்க...

"நீ அந்தப் பொட்டப்புள்ள காலை பார்க்கும் போதே வந்துட்டேன்." குணா உக்கிரமாக அவனைப் பார்த்தான்.

"டேய், அவள் உன் அண்ணிடா... அப்படி எல்லாம் பார்க்கப்பிடாது..." அவன் குணாவின் மோவாயை பற்றியபடி கொஞ்ச...

"நான் என்ன? ஊரே பார்க்குது..." குணா சொன்னதும் தான் அவன் சுற்றுப்புறம் பார்த்தான். அங்கிருந்த எல்லோரின்

பார்வையும் நிலாவின் மீதே இருந்தது கண்டு அவன் தலையில் அடித்துக் கொண்டான்.

"எப்படி நிலா காலில் வாழை மட்டையைக் கட்டிக்கணும்ன்னு ஐடியா தோணுச்சு?" மீனா அறியாமையுடன் கேட்க...

"போன வாரம் டென்ட் கொட்டாயில முந்தானை முடிச்சுப் படம் பார்த்தோம்ல."

"ஆமாம்..." சின்னவர்கள் இருவரும் கோரசாகக் கூற...

"அதில் நாயகி ஊர்வசி இந்த டெக்னிக் தான் யூஸ் பண்ணுவாங்க. அதையே நானும் ஃபாலோ பண்ணினேன்." என்று இல்லாத சட்டை காலரை அவள் பெருமிதமாக உயர்த்திக் கொள்ள...

"அடிங்க, வாழை மட்டையைக் கட்டி என்னையவா ஏமாத்துற... வீட்டுக்கு வாடி சூடு வைக்கிறேன்." அஞ்சலை வீட்டின் முன் நின்று குரல் கொடுக்க...

"விடு ஜூட்..." என்ற நிலா அடுத்த நொடி அங்கிருந்து மாயமாகி காணாமல் போனாள்.

"நோ அத்தை நோ... வாழை தண்டு போல் இருக்கும் என்னவள் கால்களில் சூடு வைப்பதா? ஐயகோ, இதைக் கேட்பவர் யாரும் இல்லையா? அநியாயம், அக்கிரமம்..." என்று அவன் நாடகபாணியில் புலம்ப...

"பங்கு, சீன் முடிஞ்சு போச்சு..." குணா அவனது தோளை சுரண்டினான்.

"முடிஞ்சதா? அப்போ வாடா போகலாம்..." இருவரும் இணைந்து பம்புசெட்டில் குளிக்கச் சென்றனர்.

அதன்பிறகு சரவணன் நிலாவை தொடர்ந்து கவனித்ததில் அவள் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவி என்றதும் அவனுக்கு சப்பென்றாகி போனது.

"இது நமக்குச் சரிப்பட்டு வராது மாப்ள..." என்று அவன் சலித்துக் கொள்ள...

"எல்லாம் சரி வரும் சரவணா... உனக்கும் வயசு இருக்கு. அவளுக்கும் வயசு இருக்கு." குணா அவனுக்கு ஆறுதல் கூற...

"அப்படிங்கிற...?" சரவணன் சந்தேகமாக நண்பனை பார்க்க...

"அட, ஆமாங்கிறேன்." குணா உறுதியாகக் கூற...

"உன்னைய பார்த்தா எனக்கு என்னமோ சந்தேகமா இருக்கு..."

"என்னைய பார்த்தாடா சந்தேகமாக இருக்கு. நான் உன் உயிர் நண்பேன்டா."

"அதனால் தான்டா சந்தேகமா இருக்கு. நீ சொல்ற விதம் பார்த்தா... பக்கத்து இலைக்குப் பாயாசம் கேட்கிற மாதிரியே இருக்கு. யாருடா அந்த மயில்...?" பாரதிராஜா குரலில் சரவணன் கேட்க...

"ஹி ஹி... அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லைடா..." குணா வெட்கப்பட்டுக் கொண்டே மறுக்க...

"சரி, சரி நீ சொல்றதை நம்பறேன். அதுக்காக வெட்கப்பட்டு உசுர வாங்காதே..." என்றவன் அந்த நொடியில் இருந்து நிலாவை காதலிக்கத் துவங்கினான்.

ஊருக்கு வரும் போது எல்லாம் அவளைப் பார்க்காது அவனது பொழுது விடிந்தது இல்லை. அவளது வீட்டிற்கு எதிரே இருந்த அரச மரத்தடி திண்டில் தான் அவனது வாசம் இருந்தது. ஆனால் நிலா ஒருநாள் கூட அவனைத் திரும்பி பார்த்தது இல்லை. அதைப் பற்றி எல்லாம் அவன் கவலைப்பட்டதும் இல்லை.

"உம் அப்பன் நீ படிச்சு பெரிய கலெக்டராவன்னு எதிர்பார்த்துட்டு இருக்கான். நீ என்னடான்னா இங்கன

பாயப் போட்டு படுத்துட்டு இருக்கியே." பெருசு ஒருத்தர் அவனிடம் அங்கலாய்க்க...

"ஹலோ ப்யூட்டிபுல் ஜென்டில்மேன், ஃபார் யுவர் கைன்ட் இன்ஃபார்மேசன் நான் கலெக்டருக்கு படிக்கலை. கம்ப்யூட்டர் படிப்புப் படிக்கிறேன். கம்ப்யூட்டர் கம்பெனி வைக்கப் போறேன். அதான் இப்போ இருந்தே அதுக்காக ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு இருக்கேன். வீட்டுல ஒரே சத்தம்... கொசு தொல்லை தாங்கலை. அதனால் தான் இங்கே வந்து காத்தாட ஜிந்திச்சுட்டு இருக்கேன்."

"ஆத்தி, கம்ப்யூட்டர் கம்பெனியா? நீ சிந்தி ராசா, சிந்தி." என்றவர் அவனை வாழ்த்திவிட்டு செல்ல... அதைத் தனது காதலுக்கான வாழ்த்தாக எண்ணி கொண்டு அவன் தனது காதல் வாழ்க்கையில் பயணமானான்.

நிலா அடிக்கும் லூட்டிகள் அனைத்தும் அவனை வாய்விட்டு சிரிக்க வைத்தது. அவளைத் தள்ளி நின்று ரசித்தவனுக்கு அவள் அருகில் சென்று தனது காதலை சொல்ல வேண்டும் என்று ஏனோ தோன்றவில்லை. ஒருவேளை அவளது வயது கருதியோ என்னமோ அந்தக் காரியத்தை மட்டும் அவன் செய்யவே இல்லை. இப்படியே முழுதாய் மூன்று ஆண்டுகள் முடிந்திருந்தது. அவன் கல்லூரி படிப்பு முடித்து ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்தவன் இப்போது கணினி துறையில் சற்றுத் தேர்ச்சி பெற்று தனியே நிறுவனம் ஆரம்பிக்க வேண்டும் என்று எண்ணி தந்தையிடம் பேச வந்திருந்தான். அப்போது தான் அவனது தந்தை அந்தக் குண்டை தூக்கி போட்டார்.

"நீ கம்பெனி வைக்கக் காசு தராம வேறு எதுக்குத் தர போறேன். தாராளமா கம்பெனி ஆரம்பி சரவணா. ஆனா அதுக்கு முன்னாடி நீ கல்யாணம் பண்ணிக்கோ." என்று சொக்கன் கூற...

"கல்யாணமா? இப்பவா? ப்பா, எனக்கு இருபத்தினாலு வயசு தான் ஆகுது." அவன் அழாத குறையாகக் கூற...

"வயசு கெடக்குது கழுத... கல்யாணம் பண்ண ஆம்பளைங்கிற தகுதி இருந்தா போதும். நீ சிங்கம்டா..."

"ப்பா, சிங்கத்தை இப்படிக் கல்யாணம் பண்ண சொல்லி அசிங்கப்படுத்தாதீங்கப்பா."

"இங்கே பாரு சரவணா, ரெண்டு பொட்டப்புளைங்களுக்கு அப்புறம் ரொம்ப வருசம் கழிச்சு பிறந்த ஒத்த பையன் நீ... எங்களுக்கு வயசாகிட்டே போகுது. அதான் காலாகாலத்துல உன்னை ஒருத்தி கையில் பிடிச்சு கொடுத்துட்டா நாங்க நிம்மதியா போய்ச் சேருவோம்."

"ப்பா, பொம்பளை பிள்ளையைப் பெத்தவங்க சொல்ற டயலாக் எல்லாம் நீங்க சொல்றீங்க?"

"என்னடா விவரம் தெரியாத மடப்பயலா இருக்க... இப்போ பொண்ண பெத்தவன் யாரும் இந்த டயலாக் சொல்றது இல்லை. காலம் மாறுது. அதுக்கு ஏத்த மாதிரி நாம அப்டேட் ஆகிக்கணும். என்ன சரியா?" என்ற தந்தையைக் கண்டு திகைத்தவனின் தலை தானாகச் சரியென்று ஆடியது.

"ப்பா, பொண்ணு பார்த்துட்டீங்களா? இல்லை..." என்று இழுத்த மகனை கண்டதும் அவரது விழிகள் இடுங்கியது.

"என்ன விசயம் சொல்லு சரவணா?"

"ப்பா, நான் ஒரு பொண்ணைக் காதலிக்கிறேன்."

"யாருடா அது...?" அடுத்த நொடி சொக்கனின் குரல் உறுமலுடன் ஒலித்தது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 5

"எவடா அது...?" மீண்டும் உறுமிய தந்தையின் குரலில் சரவணனுக்கு உள்ளுக்குள் கிலி பிடித்துக் கொண்டது. இருந்தாலும் அவன் காதலுக்காகத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டான்.

'நிலா இல்லையேல் நிரந்தர நித்ராதேவியைச் சரணடைய வேண்டியது தான். அதுக்கு முன்னாடி அப்பா கிட்ட சரண்டராகிப் பார்ப்போம்.' என்று நினைத்தவன்,

"அது வந்துப்பா... மேல தெரு மாரிமுத்து இருக்காருல..."

"ஆமா அவனுக்கு என்ன இப்போ?" என்று மீசையை முறுக்கியவரை கண்டு பயத்தில் எச்சிலை விழுங்கியவன்,

"அவரோட பெரிய பொண்ணு நிலாவை நான் விரும்பறேன்."

"யாரு அந்த வாயாடி நிலா பொண்ணா?"

'ஆத்தி, உன் வாய் ஊர் பிரசித்தம் போலயே...' அவன் நிலாவை எண்ணி மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

"கொஞ்சம் துடுக்குத்தனம் ஜாஸ்தி. அதுக்காக வாயாடி இல்லைப்பா." அவன் அவளுக்காகப் பரிந்து கொண்டு வந்தான்.

"அதுவும் சரி தான். இந்தக் காலத்துல பொட்டப்புள்ளங்க இப்படிச் சூட்டிப்பா இல்லைன்னா உன்னை மாதிரியான பசங்க ஏறி மிதிச்சுருங்க."

"ப்பா, நான் அப்படி இல்லைப்பா..." அவன் சிணுங்கினான்.

"ஆனா அந்தப் பொண்ணு இப்பத்தானே பன்னெண்டாம் வகுப்பு முடிச்சிருக்கு. அதுக்குள்ள கல்யாணம் பண்ணி கொடுப்பாகளா?" சொக்கன் யோசிக்க...

"ஏன் யோசிக்கப் போறாக? எம் பையனுக்கு என்ன குறைச்சலு? சொத்துக்குச் சொத்து, அழகுக்கு அழகு, படிப்புக்குப் படிப்பு எல்லாம் அவனுக்கு இருக்கு. அவனுக்குப் பொண்ணு கொடுக்கக் கசக்குதோ?" என்றபடி பொன்னுத்தாய் அங்கே வந்தார்.

"ஒட்டு கேட்டுட்டு இப்ப வர்றியாக்கும்..."

"அப்படித்தான்னா என்ன செய்றதா உத்தேசம்?" பொன்னுத்தாய் புடவை முந்தானையை உதறி இடுப்பில் சொருகியபடி கேட்க... அடுத்த நொடி சொக்கன் கப்சிபென்று அடங்கிப் போனார்.

'என் தந்தை எனும் யானையை அடக்கும் அங்குசம் என் தாய் நீ அல்லவா!' சரவணன் தாயை அன்பொழுக பார்த்தான்.

"நீ வேற எதையாவது உளறாதே. நான் அதுக்குச் சொல்லலை. பொண்ணுக்கு சின்ன வயசுன்னு யோசிக்கிறேன்." சொக்கன் கூற...

"அதையே தான் நானும் சொல்றேன். இன்னும் மூணு, நாலு வருசம் போகட்டும். அந்தப் புள்ள காலேஜ் முடிச்சிரும். அதுக்குப் பொறவு கல்யாணம் பேசுங்க." சரவணன் கூற...

"எதுக்குடா அவ்வளவு நாளு காத்திருக்கணும். கல்யாணம் முடிஞ்சு அந்தப் புள்ள படிக்கட்டுமே. ஏன்டா சரவணா, நீ உம் பொஞ்சாதிய படிக்க வைக்க மாட்டியா?"

"தாயே, நீ என் தாயல்ல..."

"டேய், என்னடா சொல்லுற?"

"நீ என் தெய்வம்ன்னு சொன்னேன்ம்மா..."

"அதானே பார்த்தேன்... உனக்கு ஒருத்தி வந்ததும் இந்த அம்மாவை கழட்டி விட்டுட்டியோன்னு."

"நோ வே தாயே... எனக்கு என்றும் தாங்கள் முக்கியம்." என்று அவன் வசனம் பேச...

"அப்படிச் சொல்லுடா என் ராசா..." அவனது தாய் அவனை நெட்டி முறித்தார்.

மகனது வார்த்தைகளை நம்பி சொக்கன் தனது உறவினர் ஒருத்தரை வைத்து மாரிமுத்துவிடம் பெண் கேட்க செய்தார். எல்லாம் நல்லபடியாக முடிந்திருந்ததால் சரவணன் காதலுக்குச் சுபம் போட்டு இருக்கலாம். விதி அந்த இடத்தில் கோர தாண்டவமாடியது. பெண் கேட்டு சென்ற உறவினர் முன்னிலையில் நிலா தனக்குத் திருமணத்தில் விருப்பம் இல்லை என்று கூறிவிட... இந்த விசயம் காட்டுத்தீ போல் ஊருக்குள் பரவியது.

"இவ்வளவு சொத்துபத்து இருக்கிற சரவணனை நிலா வேண்டாம்ன்னு சொல்லுறாள்ன்னா அவனுக்குத் தீராத வியாதி இருக்குமோ?"

"இருக்குமப்பு... இல்லைன்னா வசதிக்காரவக ஒண்ணும் இல்லாத இடத்துல வலிய போய்ப் பொண்ணு கேட்பாகளா?"

"ஒருவேளை சரவணன் ஆம்பளையே இல்லையோ..."

"அட ஆமாங்கிறேன், அவனால் கல்யாணம் பண்ணி குடும்பம் நடத்த முடியாது. அது கேள்விப்பட்டுத் தான் அந்தப் பொண்ணு வேண்டாம்ன்னு சொல்லிருச்சு."

"என்ன தான் வசதி குறைவா இருந்தாலும் அந்தப் பொண்ணுக்கும் ஒரு மனசு இருக்கும்ல. அதை நாம யோசிக்க வேண்டாமா? நம்ம சொக்கனுக்கு அறிவு எங்கே போச்சு?" இப்படிப் பல கதைகள் ஊரில் உலாவியது.

இன்னும் சிலரோ அவனுக்குச் சென்னையில் வேறு குடும்பம் இருப்பதாகவும், மகனது தவறு தெரிந்து சொக்கன் அவசரமாக ஏழை பெண் நிலாவை அவனுக்குப் பெண் கேட்டதாகவும் புரளியை கிளப்பினர். அதாவது அவனைப் பொம்பளை பொறுக்கி என்கிற தினுசில்... சரவணன் பொம்பளை பொறுக்கியா? அல்லது ஆண்மை அற்றவனா? என்று ஊருக்குள் பெரிய பட்டிமன்றமே

நடந்தது. அதை அறிந்த சரவணன் அவமானம் தாங்காது சென்னைக்குத் திரும்பி விட்டான். தந்தையிடம் கூட அவன் சொல்லவில்லை. அதன் பிறகு நடந்த விசயம் கேள்விப்பட்டு அவன் திகைத்துப் போனான். அவன் திரும்பி ஊருக்கு வருவதற்குள் எல்லாம் அவன் கை மீறிச் சென்றிருந்தது. அவனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

"சரவணா..." கடந்த காலத்தில் சோகமாய் ஆழ்ந்திருந்தவனைக் குணாவின் குரல் நிகழ்காலத்திற்கு அழைத்து வந்தது. அப்போது தான் அவனுக்குமே ஞாபகம் வந்தது.

"ஏன்டா, என் பின்னாடி தானே வந்துட்டு இருந்த? ஆனா இப்போ வந்து சரவணான்னு கூப்பிடுற...? இவ்வளவு நேரம் எங்கேடா போயிருந்த...?"

"அது வந்து பங்கு..."

"நீ வர்றதுக்குள்ள நான் பிளாஷ்பேக்கே ஓட்டி முடிச்சிட்டேன். நீ இப்போ வர்ற... உண்மையைச் சொல்லு..." என்றவன் நண்பனின் முகத்தை உற்று பார்த்து,

"என்னடா, உன் முகம் ஜிஞ்சர் தின்ன மங்கி மாதிரி டல்லா இல்லாம, கிட்காட் தின்ன காக்கா மாதிரி பிரகாசமா இருக்கு." என்று கலாய்க்க...

"ச்சீ, போடா..." என்று குணா சிணுங்க...

"ச்சீ போங்கள்..." என்று அவனைப் போல் பாவனைச் செய்த சரவணன்,

"அடச்சீ, வெட்கப்படாம விசயத்தைச் சொல்லு..." என்று கூற...

"அது வந்து... சொன்னா நீ கோபப்பட மாட்டியே."

"நீ சொல்லலைன்னா தான் கோபப்படுவேன்." அவன் கொலை காண்டானான்.

"நானும், அஞ்சு பேபியும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறோம்டா. எங்க காதலை நீ தான் அய்யனார் மாதிரி காத்து, சேர்த்து வைக்கணும். உன் கையைக் காலா நினைச்சுக் கேட்கிறேன் பங்கு. மாட்டேன்னு மட்டும் சொல்லாதேடா..." என்று குணா நண்பனின் கைகளைப் பற்றிக் கொண்டு கேட்க... அதைக் கேட்டு திகைத்த சரவணன்,

"பக்கத்து இலைக்குப் பாயாசம் கேட்டியே அப்பவேவா...?" என்று கேட்க...

"ஹி, ஹி... ஆமான்டா..."

"டேய், அப்போ அஞ்சு ஒன்பதாவது தான்டா படிச்சிட்டு இருந்தது."

"நீ மட்டும் பத்தாவது படிக்கிற பொண்ணை டாவடிக்கலாம். நான் ஒன்பதாவது படிக்கிற பொண்ணை டாவடிக்கக் கூடாதா? ஒரு வருசம் தானே வித்தியாசம். அதெல்லாம் இப்போ எதுக்கு? இப்போ அஞ்சு காலேஜ் முடிச்சிட்டாள். இப்போ அவள் மேஜர்."

"அதுவும் சரி தான்... அப்போ அன்னைக்கு அட்டுபிகர்ன்னு நான் சொன்னப்பா நீ சொன்ன வருந்துற விசயம் அஞ்சுவாடா...?"

"ஆமான்டா..."

"ஓ, அம்மாவுக்கு உடம்பு சரியில்லைன்னதும் அதைக் காரணம் காட்டி அஞ்சுவை எனக்குக் கல்யாணம் பண்ணி வச்சுருவாங்களோன்னு பயந்து தான் நீ என் கூடத் தொத்திட்டு வந்தியா?"

"ஆமான்டா, அஞ்சு ஏற்கெனவே விசயத்தை ஃபோனில் சொல்லிட்டாள். என்ன செய்றதுன்னு தெரியாம குழம்பிட்டு இருந்தப்போ தான் உனக்கு உங்கப்பா கிட்ட இருந்து ஃபோன் வந்தது."

"நீ குழம்பிட்டு இருந்தியா? கும்பகர்ணன் மாதிரி தூங்கிட்டு இருந்த..." அவன் நண்பனை கேலி செய்ய...

"காதலுக்காகக் காதலை வேணா தியாகம் செய்யலாம். அதுக்காகத் தூக்கத்தை, சோறை தியாகம் பண்ண முடியாது பங்கு."

"காதலுக்குப் புதுத் தியரி கொடுத்திருக்கடா. உன்னை என் நண்பன் சொல்லிக்கவே எனக்குப் பெருமையா இருக்கு."

"ஹி, ஹி... டேங்க்ஸ் பங்கு." குணா அசடு வழிய...

"அடிங்க, காதலை விடத் தூக்கமும், சோறும் பெருசாம். போடா டேய், போய் ஒரு குண்டான் பிரியாணியைத் தின்னுப்புட்டு தூங்குற வழியைப் பாரு. உன் காதலியை வேற எவனாவது லவட்டிட்டு போகட்டும்."

"டேய் சரவணா..." குணா அழாத குறையாக அவனைப் பார்க்க...

"சரி சரி அழாதே... நான் இருக்கேன்ல... நான் பார்த்துக்கிறேன். வா..." என்று அவன் நண்பனை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.

வீட்டிற்கு வந்ததும் நன்றாக வெந்நீரில் ஒரு குளியல் போட்டவன் இட்லியை கோழி குழம்புடன் ஒரு பிடி பிடித்தான். அவன் உண்பதை பார்த்துக் கொண்டிருந்த குணாவிற்குப் பயத்தில் உண்ண முடியவில்லை.

'பயபுள்ள என்ன பண்ண போகுதோ தெரியலையே?' என்று குணா வேண்டியபடி சரவணனை பார்த்திருந்தான்.

உண்டு முடித்ததும் சுகமாகத் திண்ணையில் அமர்ந்த சரவணன் தனது அன்னையிடம் மெதுவே பேச்சு கொடுக்க ஆரம்பித்தான்.

"இப்போ என்னாத்துக்குப் பெருசு என்னோட கல்யாணத்துக்கு மும்முரமா வேலை பார்க்குது?"

"அதை ஏன்டா கேட்கிற? விவசாயம் முன்ன மாதிரி இல்லை. மழை இல்லவே இல்லை. அதனால் பெருத்த நஷ்டம். உன் மாமாந்தேன் கடனா பெரிய தொகை கொடுத்தாரு."

"ம்மா, எதுக்கு அந்தாளுக்கிட்ட கடனை வாங்கினீங்க? என் கிட்ட கேட்டு இருக்க வேண்டியது தானே."

"உங்கப்பாரு பிடிவாதம் தான் உனக்குத் தெரியுமே."

"அதுக்குன்னு கடனுக்கு வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்காம என்னைத் தள்ளிவிட முடிவு பண்ணிட்டாராக்கும்."

"அப்படிச் சொல்லாதேடா. என்ன இருந்தாலும் உன் அக்கா, உன் மாமா இல்லையா? அவுகளுக்கு உன்னை மாப்பிள்ளையாக்கி பார்க்கணும் ஆசை." மகள் மற்றும் மருமகனை விட்டு கொடுக்காது அவர் பேச...

"அதுக்கு அவரோட பொண்ணுக்கு மாப்பிள்ளையாக்கி பார்க்க ஆசைப்படக் கூடாது."

"என்ன பேச்சு பேசுற சரவணா?"

"உண்மைய சொன்னேன்ம்மா. என் மனசு தெரிஞ்சும் அப்பாரு எதுக்கு இத்தனை பிடிவாதம் பிடிக்காரு."

"அது ஒண்ணும் இல்லை சரவணா... அஞ்சு ஜாதகத்தில் இந்த வருசம் கல்யாணம் பண்ணி போடணும்ன்னு இருக்காம். இல்லைன்னா ஐஞ்சு வருசத்துக்குக் கல்யாணம் ஆகாதாம்."

"அஞ்சு, ஐஞ்சு... எவன்ம்மா இப்படி ரைமிங்கா ஜோசியம் பார்த்தது?" அவன் கேலியாய் வினவ...

"அப்படி எல்லாம் பேச கூடாது சரவணா... உனக்கும், நிலா பொண்ணுக்கும் கூடத்தான் ஜாதகம் பார்த்தேன். பத்து பொருத்தமும் பக்காவா பொருந்தி இருக்கிறதா சொன்னான். ம்ஹூம், என்ன பொருந்தி என்ன பிரயோஜனம்?"

"அப்படியாமா சொன்னான்... அப்போ உண்மையா தான் இருக்கும். இப்போ உனக்கு என்ன நம்ம அஞ்சுவுக்குக் கல்யாணம் பண்ணி பார்க்கணும். அம்புட்டு தானே."

"அம்புட்டு தான் ராசா. அப்படியே உனக்கும் கல்யாணம்..."

"நிச்சயம் என் கல்யாணம் நடக்கும்மா. இப்போ அஞ்சு கல்யாணத்தைப் பத்தி மட்டும் யோசிப்போம். கையில் வெண்ணெயை வச்சிட்டு நெய்க்கு அலைஞ்ச கதையா நாம கையில் மாப்பிள்ளையை வச்சிட்டு ஏன்ம்மா மாப்பிள்ளையே தேடி அலையணும்?"

'பங்கு கரெக்ட்டா பாயிண்டை பிடிச்சிட்டான். நான் கூடப் பங்கை என்னமோ நினைச்சேன். பங்கோட அமெரிக்க மூளை நமக்குச் சுட்டுப் போட்டாலும் வராது. பங்கு நீ வாழ்க.' குணா மனதில் நண்பனை பாராட்டினான்.

"அப்படி யாருடா நம்ம சொந்தத்தில் இருக்கிறது? எனக்குத் தெரிஞ்சு யாரும் இல்லையே."

"ஏன் நம்ம குணா இல்லையா?"

"யா, இட்ஸ் மீ..." குணா சட்டை காலரை சேர்த்துப் பிடித்துக் கொண்டு அசடு வழிந்தபடி பொன்னுத்தாயை பார்த்தான்.

"யாரு இவனா...?" அவர் குணாவை மேலும் கீழும் ஒரு பார்வை பார்க்க... குணாவின் முகம் காற்று போன பலூனாய் சுருங்கி போனது.

"என்னம்மா இப்படிக் கேட்டுட்ட...? நம்ம குணாவுக்கு என்ன குறைச்சல்? பெத்தவங்க இல்லை. இருந்த ஒரே தாத்தனும் போன வருசம் போய்ச் சேர்ந்துட்டாரு. மாமியார், மாமனார், நாத்தனார் தொல்லை இல்லை. சொத்து இருக்கு. இதை எல்லாம் விட அவனும் என்னோட கம்பெனியில் ஒரு பார்ட்னர்."

"கொஞ்சம் யோசிங்கம்மா..." குணாவும் சொல்ல...

"அஞ்சுவுக்கு உன்னைவிட ஒரு அசமந்தம் கிடைக்க மாட்டான் தான். நான் சரவணா அப்பா கிட்ட பேசுதேன்."

"அப்பா சரின்னு சொல்லுவாருல்ல..."

"எம் பேச்சை எதுத்து பேச உங்கப்பனுக்கு அம்புட்டுத் தைரியம் இருக்கா என்ன?" என்றவர் உள்ளே செல்ல...

"ஏன் பங்கு, எனக்கு ரொம்ப நாளா ஒரு டவுட்டு?"

"கேளுடா..."

"எந்தத் தைரியத்தில் இந்தப் பொம்பளைங்க எல்லாம் இப்படி ஒரு டயலாக் சொல்லுறாங்க? அதுவும் எப்பவும் மீசையை முறுக்கிட்டு திரியும் உங்கப்பனை பார்த்து உங்கம்மா எப்படிடா இப்படித் தைரியமா பேசுது."

"வாயிலேயே ஒண்ணு போட போறேன்." என்று கையை ஓங்கிய சரவணன்,

"அதுக்கு நீ முதல்ல கல்யாணம் பண்ணணும்டா..." என்று கூற...

"கல்யாணம் பண்ணாம உனக்கு மட்டும் இது எப்படித் தெரியுது?" குணா நண்பனை சந்தேகமாகப் பார்க்க...

"அதுக்கு இங்கே..." தலையைச் சுட்டிகாட்டிய சரவணன்,

"சாம்பல் நிற வஸ்து வேணும்டா..." என்று கேலியாய் கூற...

"அது இருந்தா நான் ஏன்டா அஞ்சுவை காதலிக்கப் போறேன்..?" குணா சலித்துக் கொள்ள...

"ஏம்மா அஞ்சு, இந்தக் குணா பய உன்னைய பதித்தான் ஏதோ சொல்றான். என்னன்னு கேளும்மா..." சரவணன் உள்ளே பார்த்து குரல் கொடுக்க...

"அஞ்சுவா? ஆளை விடுடா சாமி." என்ற குணா அலறியடித்துக் கொண்டு ஓடிவிட்டான். அதைக் கண்டு சரவணன் வாய்விட்டுச் சிரித்தான்.

மகனது சிரிப்பை மறைந்து இருந்து பார்த்த சொக்கனுக்கு மகனை கண்டு வாஞ்சை எழுந்தது. அவனது

விருப்பத்திற்கு மாறாக எதையும் செய்ய அவருக்கு மனம் ஒப்பவில்லை.

"மறைந்து இருந்து பார்க்கும் மர்மம் என்ன...?" திடீரென்று சரவணன் உரத்த குரலில் பாட... அதைக் கேட்டு திடுக்கிட்டவர் அவசரமாக அங்கிருந்து அகன்றார்.

‘எனக்கு உங்களைப் பத்தி தெரியும்ப்பா. எப்பவுமே எனக்கு எதிரா நீங்க செயல்பட மாட்டீங்க. சில தவறுகள் உங்களைக் கோபப்படுத்தி இருக்கலாம். எல்லாத் தவறுகளையும் சரி செஞ்சு என் நிலா பொண்ணை நான் கைப்பிடிப்பேன். இது சத்தியம்.’ என்று அவன் தனக்குள் கூறிக் கொண்டான்.

சரவணன் குணாவின் காதலை நல்லபடியாகத் திருமணத்தில் முடித்து வைத்தான். இன்னும் ஆறு மாதத்தில் திருமணம் என்று முடிவு செய்யப்பட்டது. அந்த மகிழ்ச்சியுடன் சரவணன், குணா இருவரும் சென்னைக்குக் கிளம்பினர். அங்கே நண்பனின் காதலுக்கு உதவி செய்த சரவணனின் காதல் ஊசலாடி கொண்டிருந்தது, அந்தோ பரிதாபம்...!

சென்னை வந்து சேர்ந்த உடனேயே சரவணன் குணாவை அழைத்துக் கொண்டு நிறுவனத்திற்கு வந்துவிட்டான்.

"உனக்கு உன் ஆளை பார்க்க போற அவசரம். ஆனா எனக்கு என்னடா அவசர வேலை இருக்கு? கொஞ்சம் நேரம் தூங்கி எழுந்து வருவேன்ல."

"உனக்கு... என்ன... வேலை... இருக்கா...? அடிங்க... வம்சி தனியா கிடந்து கஷ்டப்பட்டுட்டு இருக்கான். கொஞ்சம் கூடப் பொறுப்பே இல்லாம... வாட் ஈஸ் திஸ் நான்சென்ஸ்..." சரவணன் கோபத்தில் கத்த... அதற்கு மேல் வாயை திறப்பான் குணா... அவன் கப்சிப்பென்று வாயை மூடி கொண்டான்.

இருவரும் நிறுவனம் வந்த போது அங்கே அலுவலக அறையில் தலையில் கை வைத்தபடி இருந்த வம்சியைத் தான் முதலில் கண்டனர்.

"என்னடா ஆச்சு?" சரவணன் அவனைப் புரியாது பார்க்க...

"அந்தக் கொடுமையை நீயே பார் சரவணா..." என்ற வம்சி கண்ணாடி வழியே அலுவகத்தின் உள்பகுதியை சுட்டிக்காட்டினான்.

"அங்கே என்னடா இருக்கு?" என்று கேட்டபடி திரும்பிய சரவணன் அங்குக் கண்ட காட்சியில் திகைத்து போய் அப்படியே நின்றான்.

"இப்ப இவன் எதுக்குடா இங்கே வந்திருக்கிறான்? அதுவும் என் நிலா பொண்ணோட சிரிச்சு சிரிச்சு பேசிக்கிட்டு இருக்கான். ஹவ் திஸ் பாசிபிள்?"

"பங்குக்குக் கோபம் வந்துட்டா இங்கிலீபிசு கொட்டிட்டு வரும்." குணா நேரம் காலம் பார்க்காது நண்பனை சிலாகித்துக் கூற...

"நான் உன் நடு மண்டையில் நச்சுன்னு கொட்டிருவேன். அடங்குடா." சரவணன் அடக்கப்பட்ட கோபத்தில் கத்தினான்.

"டேய் உங்க சண்டைய பிறகு வைச்சுக்கலாம். இவன் தொல்லையில் இருந்து சிஸ்டரை காப்பாத்துடா."

"இந்த நாதாரி எப்போடா வந்தான்?"

"நீ அந்தப் பக்கம் ஊருக்குப் போனதும் இங்கே இவன் வந்து இறங்குறான். வந்த நேரத்தில் இருந்து நிலா கூடத் தான் கடலை போட்டுட்டு இருக்கான். கேட்டா, உங்க கம்பெனியில் ரொம்பவும் புத்திசாலி பொண்ணு அது ஒண்ணே ஒண்ணு தான். உங்களை எல்லாம் விட... அப்படின்னு கிண்டல் பண்றான்."

"அப்படியா சொன்னான்?" குணா சண்டைக்குத் தயாராக...

"நீ வேற சும்மாயிருடா... இவன் கிட்ட இருந்து என் ஆளை எப்படிக் காப்பாத்துறது?" சரவணன் யோசிக்க ஆரம்பித்தான்.

வேறு ஒன்றுமில்லை... இவர்களுக்கு ப்ராஜெக்ட் கொடுக்கும் பெரிய கணினி நிறுவனத்தின் எம்டி தீபக் இவர்களது நிறுவனத்திற்கு வருகை தந்திருந்தான். எடுத்தோம் கவிழ்த்தோம் என்று பேசி அவனைப் பகைத்துக் கொள்ள முடியாது. ஏனெனில் இவர்களது முன்னேற்றத்தில் அவனது பங்கு அதிகம். அதே சமயம் அவன் நிலாவுடன் நெருங்கி பேசுவதை அனுமதிக்கவும் முடியாது. சிறிது நேரம் யோசித்த சரவணன் அறை கதவை திறந்து கொண்டு விறுவிறுவென நிலாவை நோக்கி சென்றான்.

அங்கே தீபக் ஏதோ நகைச்சுவை சொல்ல... நிலா வாய்விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தாள். 'வாயில எத்தனை பல் இருக்குன்னு எண்ணலாம் போல... எப்படி வாயை திறந்துக்கிட்டு சிரிக்குது பாரு. என்னைக் கண்டா மட்டும் அந்தச் செர்ரி பழ உதடு அரை இன்ச் தான் சிரிக்கும்.' அவன் மனதிற்குள் அவளைத் தாளித்துக் கொண்டே தான் வந்தான்.

'இந்த ரணகளத்திலும் உன் ஆளு உதட்டை செர்ரி பழம்ன்னு ரசனையோட சொல்ற பார்த்தியா நீ தான்டா காதல் மன்னன்...' அவனது மனசாட்சி அவனைப் பாராட்ட... அது பாராட்டும் முதல் பாராட்டு என்பதால்,

'டேங்க்யூ, டேங்க்யூ...' என்று அவன் பெரும்புன்னகையுடன் ஏற்றுக் கொண்டான்.

சரவணன் அவர்கள் அருகில் சென்றும் கூட இருவரும் அவனைக் கவனிக்கவில்லை. மாறாகத் தங்களுக்குள் ஏதோ பேசி கொண்டிருந்தனர்.

"ம்க்கும்..." என்று சரவணன் தொண்டையைக் கனைக்க... அதில் திரும்பி பார்த்த நிலா அவனைக் கண்டு புன்னகைத்து,

"நேத்து எங்கே போயிருந்த சரவணா?" என்று குதூகலமாகக் கேட்க... அவள் சரவணனை ஒருமையில் அழைப்பதை கண்ட தீபக் விசமமாகப் பார்த்தான்.

"ஹாய் தீபக், வெல்கம்... முன்னாடியே சொல்லி இருந்தா நான் இங்கேயே இருந்திருப்பேனே." என்று அவன் தனது கையை நீட்ட...

"இதில் என்ன இருக்கு சரவணன்... சர்ப்ரைஸ் விசிட்." தீபக்கும் தனது கையைக் கொடுத்தான்.

"உனக்கு முன்னாடியே அவரைத் தெரியுமா? பாரேன், உன் கிட்ட கூடக் கையைக் குலுக்குறாரு. சார், எவ்வளவு பெரிய ஆள் தெரியுமா? ஆனா எல்லார் கூடவும் பிரெண்ட்லியா பழகுறாரு." என்று நிலா கூற...

"ஓ, அவ்வளவு பெரிய ஆளா அவரு..." சரவணன் தீபக்கை மேலும் கீழும் பார்த்தான்.

"நம்ம கம்பெனி எல்லாம் இவர் கம்பெனி முன்னாடி ஜூஜூபி..."

"ஓஹோ..." சரவணனுக்கு ஆத்திரமாக வந்தது. ஆனால் அதை வெளிக்காட்ட முடியாதே.

"இல்லையா பின்னே... உன்னையும், என்னையும் சேர்த்து மொத்தம் பதினேழு பேர் தான் இங்கே வேலை பார்க்கிறோம். ஆனா அவர் கம்பெனியில் நூறு பேருக்கு மேல் வேலை செய்றாங்க."

'இந்த டீடெயில் எல்லாம் வக்கணையா தெரிஞ்சு வச்சுக்கோ... ஆனா என் காதலை மட்டும் தெரிஞ்சு வச்சுக்காதே...' என்று நினைத்தவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. அதை அவளிடம் காட்டாது,

"நாம போகலாமா தீபக்...?" என்று தீபக்கிடம் கேட்க...

"யா... ஷ்யூர்." என்ற தீபக் அவனுடன் இணைந்து நடந்தான்.

"ஐ லைக் ஹர் வெரி மச்..." தீபக் சரவணனை ஓரக்கண்ணால் பார்த்தபடி கூற...

'அடேய் கலரு தல மண்டையா, ஐ லவ் ஹர் வெரி மச்டா.' என்று சரவணன் தீபக்கின் நிறம் மாற்றப்பட்டு இருந்த

தலைமுடியை பார்த்தபடி புலம்பி கொண்டு வந்தான்.

மாலை வரை அங்கே இருந்த தீபக் கிளம்பினான். அவனைச் சந்தோசமாக வழியனுப்ப வந்த சரவணன் அப்போது தான் கவனித்தான் நிலாவும் கிளம்புவதை...

"ஒன் மினிட் தீபக்..." என்றவன் அலுவலக அறைக்கு ஓடி சென்று கார் சாவியை எடுத்துக் கொண்டு வந்தான்.

"இப்போ போகலாம்..." என்று அவன் தீபக்கை அழைத்துக் கொண்டு வெளியில் வர... அங்கே நிலாவும் வெளியில் நின்றிருந்தாள்.

"நிலா, வாங்களேன்... நான் உங்களை டிராப் பண்றேன்." தீபக் தன்மையாகக் கேட்க...

"இல்லை சார், வேண்டாம். நான் சரவணன் கூடப் போயிக்கிறேன். தேங்க்ஸ் சார்." என்று அவள் மறுக்க... அந்தக் கணம் சரவணன் பூலோகத்தில் இல்லை... வானில் பறந்து கொண்டிருந்தான். அவன் தீபக்கை கெத்தாகப் பார்க்க... தீபக்கின் பார்வை அவனைத் துளைத்து எடுத்தது. அதைப் பற்றி அவன் ஆராயவில்லை.

"இட்ஸ் ஓகே. நோ ப்ராப்ளம்..." என்ற தீபக் தனது காரிலேறிச் சென்றான். ஆனால் போகும் போது முன்னால் இருந்த கண்ணாடி வழியே இருவரையும் உறுத்து விழிக்கத் தவறவில்லை.

"நிலா பொண்ணே! ரொம்பத் தேங்க்ஸ்..." சரவணன் இடை வரை குனிந்து அவளுக்கு நன்றி உரைக்க...

"எதுக்குத் தேங்க்ஸ்?" அவள் புரியாது அவனைப் பார்த்தாள்.

"இது புரிய நீ இன்னும் வளரணும் பொண்ணே..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

அன்றிரவே சரவணனின் நிம்மதி பறிப் போனது... ஆம், தீபக் தன்னுடைய பெட்டியை கட்டி கொண்டு சரவணனின்

வீட்டின் முன் வந்து நின்றான். அதைக் கண்டு மூவரும் திகைத்து நின்றனர்.

"இவன் இங்கே எதுக்குடா வந்திருக்கான்?" குணா நண்பனின் காதை கடித்தான்.

"அதான் எனக்கும் தெரியலை... ஆனா ஒண்ணு மட்டும் புரியுதுடா? என் காதலுக்கு ஆப்பு வைக்க வந்திருக்கான்னு..." சரவணன் அழுவது போல் சொன்னான்.

"கவலைப்படாதேடா பங்கு. எங்க உயிரை கொடுத்தாவது உன் காதலை சேர்த்து வைக்கிறோம்." இருவரும் கோரசாகக் கூற...

"ஹ... அப்போ சரி..." என்று சரவணன் வாயெல்லாம் பல்லானான்.

"வாங்க தீபக்..." வம்சி சுதாரித்துக் கொண்டு அவனை வரவேற்க...

"தேங்க்ஸ் வம்சி... உங்களுக்காவது என்னை வாங்கன்னு வரவேற்க தோணுச்சே..." தீபக் மற்ற இருவரையும் முறைத்தபடி உள்ளே வந்தான்.

"அப்படி இல்லை தீபக். திடீர்ன்னு உங்களைப் பார்த்ததில் அவங்க ரெண்டு பேரும் ஷாக்காகி இருக்காங்க. அப்படித் தானேடா."

"ஆமா, ஆமா..." சரவணன், குணா இருவரும் கோரஸ் பாடினர்...

"அப்போ நோ ப்ராப்ளம். நான் இங்கே வந்த விசயத்தைச் சொல்லிர்றேன். எனக்கு ஹோட்டலில் தங்குறதுன்னா அலர்ஜி. அதான் இங்கே வந்துட்டேன். என் ப்ராஜெக்ட் முடியும் வரை நான் இங்கே தான் தங்க போறேன். ஓகே தானே கைய்ஸ்..." அனுமதி வேண்டாது அறிவிப்பாய் சொன்னவனைக் கண்டு மூவரும் மனதிற்குள் கொலை காண்டானாலும் வெளியில் சிரித்து வைத்தனர்.

"எனக்குத் தனி ரூம் வேணும். சோ நீங்க உங்களுக்குள்ள அட்ஜெஸ்ட் பண்ணிக்கோங்க." என்றவன் அங்கிருந்த அறையை நோக்கி செல்ல... மூவரும் 'ஙே' என்று விழித்தனர்.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 6

"ஏன்டா இவன் சொல்றது எல்லாம் நம்புற மாதிரியா இருக்கு?" குணா சரவணனின் கையைச் சுரண்டினான்.

"அவனே ஒரு புளுகு மூட்டை... இதில் நீ எதைச் சொல்ற?" சரவணன் கடுப்புடன் கேட்டான்.

"ஹோட்டல்ல தங்குறது அலர்ஜின்னு சொல்றானே. அதைச் சொல்றேன்."

"ம்... மீக்கும் அதே டவுட்டு இருக்கு பங்கு. சென்னையில் இவனுக்குன்னு ஒரு கெஸ்ட் ஹவுஸ் கூட இருக்காதா? இவன் பொய் சொல்றான்னு என்னோட விவேக் மூளை சொல்லுது." என்று நம்பியாரை போல் கைகளைப் பிசைந்தபடி சொன்னான் சரவணன்.

"எல்லோரும் ஷெர்லாக்ஹோம்ஸ் தான் சொல்வாங்க. அது யாருடா விவேக்?" குணா புரியாது தலையைச் சொரிந்தான்.

"பீ இண்டியன், பை இண்டியன், டை இண்டியன் பரம்பரையில் வந்தவன்டா நானு... என்னைப் பார்த்து என்ன சொல்லிட்ட? கேவலம், ஒரு உதாரணத்துக்குக் கூட வெள்ளைக்காரனை தான் நாம அடையாளம் காட்ட வேண்டிய நிலையில் நாம இருக்கிறோம்ன்னு நினைக்கும் போதே... என் நெஞ்சு லைட்டா வலிக்குதே..." என்று சரவணன் தனது வலப்பக்க நெஞ்சை பிடித்தான்.

"மூதேவி, பதிலை சொல்லாம என்ன ஆக்சன் இது? அப்புறம் ஃபார் யுவர் கைன்ட் இன்ஃபார்மேசன், ஹார்ட்

அங்கே இல்லை. இங்கே இருக்கு." குணா சரவணனின் இடதுபக்க நெஞ்சை சுட்டிக்காட்டினான்.

"டோன்ட் டச் ஹியர் பேட் பாய். அங்கே என் காதலி குடியிருக்கிறாள்." சரவணன் குணாவின் கையைத் தட்டிவிட்டு விட்டு தனது நெஞ்சு பகுதியை மென்மையாக வருடி விட்டான்.

"டேய் யாருடா அந்த விவேக்கு?" குணா எரிச்சலுடன் கத்த...

"அதான் பங்கு க்ரைம் நாவல் மன்னன் ராஜேஷ்குமார் நாவலில் வருவாரே அவரு... பெயர் விவேக், அவருடைய மனைவி பெயர் கூட ரூபலா." என்று அவன் வாயெல்லாம் பல்லாகக் கூறினான்.

"உனக்கு ரணகளத்திலும் குதூகலம் கேட்குது." குணா பல்லை கடித்தான்.

"நம்ம சண்டையை விடு பங்கு. பாரு, நீயும் நானும் இவ்வளவு சீரியசா பேசிக்கிட்டு இருக்கும் போது இந்த வம்சி மட்டும் ஃபோனை நோண்டிட்டு இருக்கான். இவனை..." சரவணன் வம்சி மீது பாயத் தயாரான போது,

"ஒண்ணு இல்லைடா சரவணனா... அவனுக்கு ஐஞ்சு வீடு இருக்குடா." என்று வம்சி கத்தினான்.

"எப்படிடா சொல்ற?" சரவணன் திகைப்புடன் கேட்டான்.

"கூகுள் ஆண்டவர் இருக்க பயமேன்." வம்சி தனது அலைப்பேசியைக் காட்டினான்.

"செம ஸ்மார்ட் நீ..." என்று அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்ட சரவணன், "அப்படியே அவனைப் பத்தி படிச்சு சொல்லுடா." என்று வம்சி அருகில் அமர... குணா வம்சிக்கு மறுபக்கம் அமர்ந்து அலைப்பேசியை எட்டிப்பார்த்தான்.

"பாரு, எக்சாம் ஹால்ல மத்தவங்க பேப்பரை எட்டிப்பார்த்த பழக்கம் பயபுள்ளைக்கு இன்னும் போகலை." சரவணன் எக்கி குணாவின் தலையில் ஓங்கி ஒரு கொட்டுக் கொட்டினான்.

"இதெல்லாம் அநியாயம்டா பங்கு." தலையைத் தடவிய குணாவிற்கு அழுகையே வந்துவிட்டது.

"அவன் கிடக்கான்... நீ சொல்லு வம்சி." சரவணன் வம்சியை ஊக்குவித்தான்.

"தீபக் எலிஜிபிள் பேச்சுலர்." வம்சி கூற...

"நாசமா போச்சு..." என்ற சரவணன்,

"அவனுக்குக் கேர்ள் பெஸ்ட்டி, கேர்ள் பிரெண்ட், லவ்வர் இப்படி யாரும் இல்லையா?" என்று ஆர்வமாய்க் கேட்டான்.

"எதுக்குடா இத்தனை ஆர்வம்?" குணா விளங்காது அவனைப் பார்த்தான்.

"நான் எல்லாம் பாய் பெஸ்ட்டியா இருந்தப்போ எத்தனை லவ்வை பிரிச்சு விட்டிருப்பேன்." என்று சரவணன் கெத்தாகக் கூற... மற்ற இருவரும் அவனை ஜந்து போல் பார்த்தனர்.

"கைய்ஸ், அப்படிப் பார்க்காதீங்கோ. எனக்கு வெட்கம் வெட்கமா கம்மிங்." சரவணன் வெட்கப்பட...

"அவ்வளவு கேவலமானவனாடா நீ?" இருவரும் ஒருமித்த குரலில் அவன் மீது பாய்ந்தனர்.

"அப்படிச் செய்யலைன்னா பாய் பெஸ்ட்டி கெத்து என்னாகிறது? பாய் பெஸ்ட்டியோட முக்கியமான வேலையே அதான்டா... அப்போ தான் எப்போதும் நம்மைச் சுத்தி கேர்ள்ஸ் கூட்டம் இருந்துட்டே இருக்கும். அதெல்லாம் அழகிய நிலா காலம்டா..." என்று கனவில் மிதந்தான் சரவணன்.

"நம்மைக் கழட்டிவிட்டுட்டு இவன் போகும் போதே எனக்குத் தெரியும்டா... இவன் இந்த மாதிரி கோக்குமாக்கு வேலை பார்க்கத்தான்னு... இப்போ ப்ரூப் ஆகிருச்சு பாரு." குணா வம்சியிடம் சின்னப் பிள்ளை போல் புகார் வாசித்தான்.

"அதெல்லாம் என் நிலா பொண்ணைப் பார்த்துக் காதலில் விழும் வரை தான். அதுக்குப் பிறகு நான் டோட்டலி சேன்ஜ்டு பங்கு. நௌ ஐயம் டீசன்ட் பாய், யூ நோ..." என்று சரவணன் பீட்டர் விட...

"உன்னை..." குணா அவன் மீது பாயத் தயாராக...

"இப்போ தீபக்கை பத்தி தெரிஞ்சுக்க வேணுமா? வேண்டாமா?" வம்சி இடையிட்டுச் சத்தம் போட...

"மெதுவாடா வம்சி. அந்தக் குரங்கு பய வந்திர போறான்." சரவணன் வம்சியின் வாயை மூடினான்.

"ஓகே கேளுங்க..." என்று தொண்டையைக் கனைத்த வம்சி,

"அவன் பொண்ணுங்களை ஏறெடுத்துப் பார்க்கிறது இல்லை. பக்கா ஜென்டில்மேன்." என்று கூற...

"அதெப்படிடா ஒரு வயசு பையன் வயசு பொண்ணைப் பார்க்காம இருக்க முடியும்? அவனுக்கு ஏதோ ஹார்மோன் கோளாறா இருக்கும்." சரவணன் இடையிட்டு கூற... 'இவன் அடங்கவே மாட்டானா?' என்பது போல் வம்சி அவனைப் பார்த்தான்.

"ஒருவேளை உன் ஆளை பார்த்தா மட்டும் தான் அவனோட காதல் ஹார்மோன் வேலை செய்யுதோ?" குணா சந்தேகமாய்க் கேட்க...

"டேய், வாயை வச்சிட்டு சும்மா இருக்கலை..." என்ற சரவணன் அவனை அடிக்கப் பாய... வம்சி மீண்டும் இடையிட்டு சண்டையை நிறுத்தினான்.

"அவ்வளவு நல்ல பையன்னு கூகுள் சொல்லுதுடா." வம்சி சரவணனுக்கு எடுத்துக் கூறினான்.

"டேய் எனக்குச் சந்தேகமா இருக்குடா. ஒருவேளை தீபக் கடங்காரன் கூகுளுக்கு மாமூல் தள்ளி இப்படிச் சொல்ல வச்சிருப்பானோ." சரவணன் தீவிரமாய் யோசித்தான்.

"டேய், என்னால முடியலைடா." வம்சி அழுது விடுவது போல் பார்த்தான்.

"இனி பேசலை வம்சி. நீ வாசி..." என்று சரவணன் அலைப்பேசியைச் சுட்டிக்காட்டி கூறினான்.

"பெண்கள் பழக்கம் மட்டும் இல்லை... அவனுக்குச் சிகரெட், சரக்கு அடிக்கிறது, இப்படி எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை. மொத்தத்தில் அக்மார்க் நல்ல பையன்." என்று வம்சி முடிக்க...

"அப்புறம் எதுக்குடா இவன் எல்லாம் உயிரோட இருக்கான்?" சரவணன் சலிப்புடன் கூற...

"உன் உயிரை வாங்கத்தான்..." குணா பல்லை காட்டினான்.

"டேய், அடங்கலை... அடக்குவேன்."

"யாரை?"

"உன்னைத் தான்டா..." சரவணன் பல்லை கடித்தான்.

"ஆமா, உன் வீரத்தை என் கிட்ட காட்டு. ஆனா காட்ட வேண்டிய இடத்தில் காட்டாதே." குணா நொடித்துக் கொண்டான்.

"அரட்டை அடிக்காம போய்த் தூங்குங்கடா." வம்சி இடையிட்டு சொல்ல... மற்ற இருவரும் அமைதியானர்கள்.

மறுநாள் காலையில் எழுந்த சரவணன் பல் துலக்கியபடி பால்கனியில் நின்று கொண்டிருந்தான். அப்போது அவன் ஏதேச்சையாகக் கீழே குனிந்து பார்த்த போது அங்கு நிலா நிற்பது போல் தெரிந்தது. அவன் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு மீண்டும் பார்த்தான். நிலாவே தான்... ஆனால் உடனிருப்பது...??? அவள் அருகில் நின்றிருந்தவனை அடையாளம் கண்டு திகைத்துப் போனான். ஆம், அங்கு நின்றிருந்தது சாட்சாத் தீபக் தான். அடுத்த நொடி குளியலறையை நோக்கி ஓடியவன் வாயை கழுவி விட்டு வெளியில் செல்ல முயன்றவன் பின்பு மீண்டும் வந்து முகத்தைச் சோப்பு போட்டு நன்றாகக் கழுவி

விட்டுக் கண்ணாடியில் முகத்தை அங்கும் இங்கும் திருப்பி அழகு பார்த்துவிட்டு திருப்தியுடன் அறைக்குள் நுழைந்தான். வேகமாக உடை மாற்றியவன் புயலென வீட்டை விட்டு வெளியேற... அங்கு ஹாலில் விழிகள் மூடி சும்மா படுத்திருந்த குணா வம்சியிடம்,

"என்னடா, வீட்டுக்குள் புயலடிச்ச மாதிரி இருந்தது?" என்று கேட்டபடி விழிகளைத் திறக்க...

"எனக்கும் அப்படித் தான்டா ஃபீல் ஆச்சு..." அலைப்பேசியில் கவனத்தை வைத்திருந்த வம்சி தலையை நிமிர்த்திப் பதில் கூறினான்.

"ஒருவேளை பிரம்மையா இருக்கும்..." என்று விழிகள் மூடி கொண்டான் குணா. வம்சி தோள்களைக் குலுக்கியபடி அலைப்பேசியில் ஆழ்ந்தான்.

கீழ்தளம் வந்த மின்தூக்கியில் இருந்து பாய்ச்சலுடன் வெளியில் வந்த சரவணன் தன்னவளை காண ஆவலுடன் ஓடினான். ஆனால் அதற்குள் நிலா தீபக்கிடம் பேசியபடி அங்கே வந்தாள். அவள் சரவணனை கண்டதும்,

"குட்மார்னிங் சரவணா..." என்க...

"ஹி ஹி குட்மார்னிங்..." என்று சரவணன் வழிய...

"என்ன ப்ரோ, ஜாக்கிங்கா...?" என்று தீபக் கேட்க...

"ஆமா..." என்றான் சரவணன் விறைப்பாக...

"ஓகே சரவணா, நீ ஜாக்கிங் போ... நாங்க கிளம்பறோம்." நிலா அவனிடம் இருந்து விடைபெற...

"எங்கே?" அவன் திகிலுடன் இருவரையும் பார்த்தான்.

"வீட்டுக்கு..." அவள் மேலே கையைக் கட்டினாள்.

"நானும் வீட்டுக்கு தான் போறேன்... வா..."

"அப்போ ஜாக்கிங்..."

"சூரியன் உச்சிக்கு வந்துட்டான். சென்னை வெயிலில் ஜாக்கிங் போனா நான் கறுத்து போயிருவேன்." சரவணன் சிணுங்கலுடன் கூற...

"என்னவோ சொல்ற... ஒண்ணும் புரியலை... வா..." நிலா கூறியதும் அவன் வாயெல்லாம் பல்லாக அவளுடன் இணைந்து நடக்க... தீபக் மறுபுறம் நடந்து வந்தான்.

மூவரும் அவர்களது தளத்திற்கு வந்ததும் நிலா தனது வீட்டிற்குள் செல்ல... சரவணன் அவளை ஏக்கமாகப் பார்த்தான். அவளோ அவனது பார்வையை உணராது இருவருக்கும் சேர்த்து,

"பை..." என்று உரைத்துவிட்டு கதவை சாற்றிக் கொண்டாள்.

"ப்ச்..." சலித்தபடி சரவணன் தனது வீட்டுனுள் நுழைய... தீபக் மர்மமான புன்னகையுடன் அவனைப் பின்தொடர்ந்தான். அவன் அவனது வேலையை ஆரம்பித்து விட்டான். அதாங்க வில்லன் வேலையை...

*********************************

சரவணன் அவசரமாக அலுவலகத்திற்குக் கிளம்பி கொண்டிருந்தான். அலுவலகம் போகும் அவசரத்தை விட அவன் தன்னவளை அழைத்துக் கொண்டு போகும் அவசரத்தில் இருந்தான். இல்லை என்றால் தீபக் அவளை அவனுடன் அழைத்துக் கொண்டு அலுவலகம் சென்றுவிடுவானே. அதனால் அரக்கபரக்க அவன் தயாராகி வெளியில் வந்தவன் பழக்கதோசத்தில் நிலா வீட்டின் அழைப்பு மணியை அடிக்கப் போனான். ஆனால் வீட்டின் கதவு திறந்தே இருந்தது. அதைவிட வீட்டினுள் இருந்து பாட்டுச் சத்தம் சத்தமாகக் கேட்டது

"இந்தப் பொறப்பு தான் நல்லா ருசிச்சி சாப்பிட கிடைச்சது
ஸ்... ஆஹா... ஸ்... ஆஹா...
அத நெனச்சு தான் மனம் உலகம் முழுவதும் பறக்குது
அட சுடச்சுட அட சுடச்சுட அந்த மதுர மல்லிப்பூ இட்லியே

சிக்கன் கொழம்புல கொஞ்சம் பொரட்டி சாப்பிட எச்சிலு ஊறுது உள்ளுக்குள்ளே
இந்தப் பொறப்பு தான் இந்தப் பொறப்பு தான் நல்லா ருசிச்சு சாப்பிட கிடைச்சது."

அதைக் கேட்ட சரவணன், "நிலா பொண்ணு வாய்ஸ் இவ்வளவு கொடூரமாவா இருக்கு. அச்சோ சரவணனா உன் நிலைமை ரொம்பக் கஷ்டம்டா..." என்று அவன் புலம்பி கொண்டே உள்ளே நுழைந்தான்.

"வாவ், செம டேஸ்ட்..." என்ற குரலில் திரும்பி பார்த்தவன் திகைத்தான்.

அங்கே நிலா உணவு மேசையில் அமர்ந்திருக்க... தீபக் தலையில் துண்டை கட்டி கொண்டு, கையில் கரண்டியோடு பாட்டு பாடியபடி அவளைப் பார்த்திருந்தான்.

'இந்தக் குரங்கு வாய்ஸ் தானா? அதான் அவனை மாதிரியே கேவலமா இருக்கு.' சரவணன் முகத்தைச் சுளித்துக் கொண்டான்.

"அப்படியா? அப்போ இன்னொரு இட்லி சாப்பிடு." என்ற தீபக் அவளது தட்டில் இட்லியை எடுத்து வைத்தான்.

'என்னங்கடா நடக்குது இங்கே?' என்று தனக்குள் கூறியபடி சரவணன் அங்கு விரைந்தான். சரவணனை கண்டதும் நிலா முகம் மலர்ந்தாள். தீபக்கோ அவனை ஆராய்ச்சியாய் பார்த்தான்.

"வா வா, சரவணா... வந்து சாப்பிடு. தீபக் சார் சூப்பரா சமைச்சிருக்கார்." நிலா அவனை அழைத்தாள்.

"இன்னும் என்ன சார்? தீபக்குன்னு அழகா கூப்பிடு. நம்மைச் சரவணனை கூப்பிடற மாதிரி." தீபக் அவளிடம் கூற...

"அதெப்படி முடியும் சார்? சரவணன் என் கூட வேலை பார்க்கிறான். நீங்க பெரிய பிசினஸ் மேக்னெட்."

"சரவணன் உன் கூட வேலை செய்றவனா?" தீபக் யோசனையாய் சரவணனை பார்க்க... அவனோ திகிலுடன் இருவரையும் பார்த்தான்.

"அப்படியா? நீ சொன்னா ஓகே தான்..." என்று தீபக் ஆமோதிக்கவும் தான் சரவணன் நிம்மதி பெருமூச்சு விட்டான். அதைக் கண்டு தீபக்கின் உதடுகள் கேலியாய் வளைந்தது.

"கிளம்பு நிலா...?" சரவணன் அவளை அழைக்க...

"எங்கே?" இருவரும் ஒருமித்த குரலில் கேட்க...

"கம்பெனிக்கு தான்." சரவணனுக்கு எரிச்சல் வந்தது.

"நான் இன்னைக்கு லீவ் சரவணா." நிலா கூலாகப் பதில் கூற...

"லீவா? யாரை கேட்டு லீவு எடுத்த? அந்தத் தடிப்பசங்க எப்படி அனுமதிச்சாங்க?" சரவணன் படபடத்தான்.

"ரிலாக்ஸ் சரவணன். எதுக்கு இத்தனை பதற்றம்? நான் தான் நிலாவை லீவ் எடுக்கச் சொன்னேன்."

"நீங்க யாரு லீவு எடுக்கச் சொல்ல?"

"அவளுக்கு ப்ராஜெக்ட் கொடுத்தது நான் தானே... நிலா ஒருநாள் வேலை செய்யலைன்னா என் கம்பெனி ஒண்ணும் குடி முழுகி போயிராது." தீபக் அசால்ட்டாகக் கூற... சரவணன் செய்வதறியாது கைகளைப் பிசைந்தான்.

"நிலாவும், நானும் சென்னையைச் சுத்தி பார்க்க போறோம். அதான் லீவ்..." தீபக் கூடுதல் தகவல் கூற...

"ம் ம்..." என்று சரவணன் முனங்கி கொண்டே, நிலாவை முறைத்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தான். அவனால் ஒன்றும் செய்ய முடியாத நிலை. என்ன செய்வது...!

அன்று மாலை வீட்டிற்கு வரும் வரை சரவணனால் வேலையில் ஒன்ற முடியவில்லை. ஏதேதோ எண்ணங்கள்

எழுந்து அவனது மனதினை போட்டு அலைக்கழித்தது. அதே போல் அவன் வீடு வந்து சேர்ந்த போது பூட்டியிருந்த நிலாவின் வீடு அவனை வரவேற்றது. அதைக் கண்டவனுக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது. சோர்ந்து போனவன் தனது வீட்டிற்குச் சென்று உடை மாற்றிக் கொண்டு அமர்ந்தான். சிறிது நேரத்தில் அங்கு வந்த குணா சரவணனது சோர்ந்த காட்சியைக் கண்டு வாய்விட்டுச் சிரித்தான்.

"கிளிக்கு றெக்கை முளைச்சிருச்சு... அதான் பறந்து போயிருச்சு..." என்று குணா சரவணனை கிண்டலடிக்க...

"டேய் அடங்குடா..." என்று சரவணன் கோபமாய்ச் சீறினாலும் அவனது விழிகளில் இருந்த வலியை வம்சி உணர்ந்து கொண்டான்.

"குணா..." வம்சி குணாவை அதட்ட... குணா வம்சியை என்னவென்பது போல் பார்த்தான். வம்சி குணாவிடம் விழிகளால் சரவணனை சுட்டிக்காட்டினான். நண்பனது சோர்ந்த நிலையை அப்போது தான் குணாவும் கவனித்தான்.

"என்னாச்சுடா பங்கு?" குணா சரவணன் அருகில் வந்தமர்ந்தான்.

"திரும்பவும் அவளை இழந்திருவேனோ பங்கு...?" வலியுடன் கேட்டவனைச் சட்டென்று அணைத்துக் கொண்டான் குணா. வம்சி ஆறுதலாய் சரவணனின் தோளில் கை வைத்தான்.

"எதுக்கு சக்தி இருக்கோ இல்லையோ? உன்னுடைய காதலுக்கு சக்தி இருக்கு பங்கு. சிஸ்டர் உனக்குத் தான். நீ கவலைப்படாதே."

"அதுக்குள்ள தீபக் தட்டிட்டு போயிட்டா? நான் அவனைப் போல் அழகா இல்லையே." சரவணன் ஆதங்கப்பட...

"காதலுக்குக் கண்ணே இல்லைங்கிறேன். நீ அழகு பத்தி பேசிட்டு இருக்க. உன்னை விட அவன் ஒண்ணும் மன்மதன்

இல்லை." குணா நண்பனை தாங்கி பேசினான். சிறந்த நட்பிற்கு இது தானே அழகு!

அப்போது தீபக் உள்ளே நுழைந்தான். வரும் போதே அவன் அத்தனை தும்மல் போட்டுக் கொண்டு வந்தான்.

"வரும் போதே தும்மலா விளங்கிரும்." குணா முணுமுணுத்தான். சரவணன் அவனை முறைத்தான்.

"ஹாய் கைய்ஸ்..." என்றபடி தீபக் அங்கு வந்தமர... வம்சி மட்டும் அவனைக் கண்டு புன்னகைத்தான்.

"உங்க மூணு பேரில் வம்சி மட்டும் தான் புன்னகை மன்னன்." தீபக் வம்சிக்கு நற்சான்றிதழ் கொடுத்தான். மற்ற இருவரும் கடுப்புடன் அமர்ந்திருந்தனர்.

"தீபக் சார்..." நிலாவின் குரலில் சரவணன் ஆவலுடன் வாயிலை நோக்க... அவளோ கையில் தம்பளரோடு தீபக்கை நோக்கி சென்றாள். அதைக் கண்டு அவனது முகம் விழுந்து போனது.

"தீபக் சார், இதைக் குடிங்க. தும்மல் சரியாரும்." என்று அவள் தம்பளரை நீட்ட...

"தேங்க்ஸ்..." என்ற தீபக் அதை வாங்கிக் குடித்தான்.

அப்போது, "ஹச் ஹச் ஹச்..." என்ற தும்மல் சத்தம் கேட்டது. வேறு யார்? நமது நாயகன் தான்...

"சரவணனா, உனக்கு என்னாச்சு...?" நிலா பதட்டத்துடன் கேட்க...

"எனக்கும் சேம் தும்மல். சேம் கசாயம்." என்று அவன் பல்லை காட்ட... அவனது இளிப்பலேயே அவளுக்குப் புரிந்து போனது. அவன் பொய் சொல்கிறான் என்று... ஆனால் அது ஏன்? என்று அவள் யோசிக்கவில்லை.

"கொஞ்சம் இரு சரவணா..." என்றவள் தனது வீட்டிற்குச் சென்று கசாயம் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

"இதைக் குடி சரியா போயிரும்." என்று பெரிய லோட்டாவை அவன் முன் நீட்ட...

"தீபக் சாருக்கு மட்டும் சின்னத் தம்பளர். எனக்கு மட்டும் பெரிய்யயயயய தம்பளர். என் மேல அம்புட்டு பாசமா நிலா?" அவன் கேட்க...

"நீ எனக்கு நெருங்கிய நண்பன் இல்லையா? அதான்..." அவள் சொன்னதும் தான் தாமதம் அவன் கசாயத்தை வாயில் ஊற்ற... அடுத்த நொடி அவன் முகம் அருவருப்பில் கசங்க 'தூ' என்று கசாயத்தைத் துப்பினான்.

"என்னாச்சு சரவணா?" நிலா அறியாப்பிள்ளையாய் புரியாது கேட்க...

"கசக்குது..." அவன் முகம் கசங்க கூற...

"இல்லையே... பனங்கற்கண்டு போட்டு இனிக்குதே." என்று தீபக் சொன்னான்.

"என்னது இனிக்குதா?" என்ற சரவணன் தீபக்கின் தம்பளரை பிடுங்கி கசாயத்தை வாயில் ஊற்ற... அது கற்கண்டாய் இனித்தது.

"பாதகத்தி... எனக்கு மட்டும் ஏன் கசப்பா கொடுத்த?" அவன் கோபத்தில் மூச்சு வாங்க அவளைப் பார்க்க... அவன் அருகே வந்தவள்,

"பொய்யா சொல்ற? அதான் பழிவாங்கினேன்." என்றவள் அவனது காதை பிடித்துத் திருகினாள்.

"என் காதையா திருகுற... உன்னை..." சரவணன் அவளது கையைப் பிடிக்க வர...

"முடிஞ்சா பிடி. பார்க்கலாம்..." என்றவள் அங்கிருந்து ஓட... அவனும் அவளைத் துரத்தி கொண்டு ஓடினான். இருவரது சிரிப்பும் அந்த வீட்டினை நிறைத்தது. குணா, வம்சி இருவரும் அர்த்தமுடன் புன்னகைக்க... தீபக் யோசனையுடன் அமர்ந்திருந்தான்.

மறுநாள் சரவணன் அதிகாலையில் எழுந்து குளித்து வாசனை திரவியங்களை அள்ளி தெளித்துக் கொண்டு நடைப்பயிற்சிக்குத் தயாரானான். அவன் வெளியில் வந்து நிலாவின் வீட்டை பார்க்க... அது பூட்டி இருந்தது.

"மாமனை பார்க்க அவ்வளவு ஆசையா நிலா பொண்ணே... எனக்கு முன்னே போய்க் காத்திருக்கிறாய். இதோ வருகிறேன்." என்றவன் மின்தூக்கி மூலம் கீழ் தளத்திற்கு வந்தான். வெளியில் வந்தவன் கை, கால்களை நெட்டி முறித்தபடி,

"ஒழிந்தான் எதிரி. நீ பாடு ஏலேலோ ஐலசா... ச்சீ... இந்தச் சிட்சுவேசனுக்கு வேற பாட்டு பாடணும்." என்றவன் அப்படியே கற்பனையில் மூழ்கினான்.

"பருவமே புதிய பாடல் பாடல்
பருவமே புதிய பாடல் பாடு
இளமையின் பூந்தென்றல் ராகம்
இளமையின் பூந்தென்றல் ராகம்
பருவமே புதிய பாடல் பாடு
பருவமே புதிய பாடல் பாடு."

சரவணன் கனவில் நிலாவுடன் டூயட் பாடி கொண்டிருக்க... அப்போது 'டக் டக்' என்று ஷூவின் ஒலி கேட்டது.

"பாருடா, கனவு கூட ரியலா வருது. நாம எப்பவுமே சவுண்ட் எபக்ட்டோட தான் கனவு காண்போம்." என்று அவன் தனக்குள் கெத்தாகக் கூறிக் கொண்டான்.

"என்ன சரவணன் நின்னுக்கிட்டே தூங்கிறியா?" யாரோ அவனைப் பிடித்து உலுக்கினர்.

"எவ அவ...?" என்று விழி திறந்து கேட்டவன் அங்கு நின்றிருந்த நிலாவை கண்டதும் வாயை மூடி கொண்டான்.

"நீ... நான்... எப்படி?" அவன் கனவு நனவு தெரியாது திக்கி திணற...

"நான் சாரோட வாக்கிங் வந்தேன். நீ...?" அப்போது தான் தீபக் அங்கு இருப்பதைச் சரவணன் கவனித்தான். அவனது முகம் சுருங்கி போனது.

"நானும் வாக்கிங் தான் வந்தேன்." என்று அவன் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ள...

"ஓ... அப்போ சரி. நாங்க வாக்கிங் போயிட்டு வந்தாச்சு. சோ பை..." என்றவள் தீபக்குடன் மின்தூக்கி நோக்கி செல்ல... சரவணன் பொருமும் மனதுடன் இருவரையும் பார்த்திருந்தான்.

சரவணன் சிறிது நேரம் கீழே இருந்த கல்மேடையில் அமர்ந்துவிட்டு மீண்டும் தனது வீட்டிற்கு வந்தான். அங்கு வரவேற்பறையில் அமர்ந்திருந்த தீபக் அவனைக் கண்டு புன்னகைத்தான். இவனோ பதிலுக்குப் புன்னகைக்காது சென்றான்.

"சரவணன்..." தீபக் அழைத்ததும் அவன் என்னவென்று பார்க்க...

"ஒரே தலைவலி... காபி போட்டு கொடுங்க."

'ப்ளீஸ், காபி போட்டு கொடுக்க முடியுமான்னு கெஞ்சி கேட்டு இருக்கணும். அதை விட்டுட்டு அதிகாரம் பண்ணினா காபி மட்டுமல்ல பச்சை தண்ணி கிடையாது.' சரவணன் மனதில் நினைத்தபடி அமைதியாக நின்றான்.

'ஓ, கெஞ்சி கேட்டா நீ காபி போட்டு கொடுக்க ஓகே சொல்லிருவியா? அப்போ எப்படியும் காபி போட்டு கொடுக்கிற ஐடியால தானே இருக்க... போ, போய்க் காபியை போடு.' அவனது மனசாட்சி சிரிக்காது அவனைக் கலாய்த்தது.

"துரோகி..." அவன் மனசாட்சியை முணுமுணுப்பாய் வைதான்.

"சரவணன்..." தீபக் மீண்டும் அவனை அழைக்க...

"இதோ..." என்றவன் சமையலறையை நோக்கி விரைந்தான்.

பாலை காய்ச்சி காபி தூள் போட்டவன் சர்க்கரை டப்பாவை எடுக்கும் போது பக்கத்தில் இருந்த உப்பு டப்பாவை பார்த்தான். அதைக் கண்டதும் அவனது விழிகள் மின்னியது.

"போட்டுருவோமா?" அவன் சந்தோசித்தபடி தனக்குள் கேட்டுக் கொண்டான்.

"வேண்டாம், வேண்டாம்... உப்பிட்டவரை உயிர் இருக்கும் வரை மறக்க மாட்டாங்களாம். இவன் என்னை மறக்காம இருந்தால்... அது தப்பாச்சே. இவன் என்னை மறந்தே ஆகணும்." என்று தீவிரமாய்க் கூறியவன் சர்க்கரை அள்ளி போட்டுப் பாயாசம் போல் ஒரு காபியை கலந்து கொண்டு வந்து தீபக்கிடம் நீட்டினான். அவனது கெட்ட நேரம் அந்நேரம் பார்த்தா நிலா அங்கு வர வேண்டும். அவள் அவனது கையிலிருந்த காபியை பார்த்து,

"வாவ், தேங்க்ஸ் சரவணா..." காபியை வாங்க...

"நிலா, இது சாருக்கு... உனக்கு வேற போட்டுட்டு வர்றேன்." சரவணன் அவளைக் குடிக்க விடாது தடுக்க...

"நிலா குடிச்சா என்ன? நான் குடிச்சா என்ன? எல்லாம் ஒண்ணு தான்." தீபக் புன்னகையுடன் பெருந்தன்மையாகச் சொன்னான்.

"அதானே..." என்ற நிலா காபியை அருந்த போனாள்.

'சொந்த காசில் சூன்யம் வச்சிட்டியே சரவணா...' என்று சரவணன் தன்னவளை பாவமாகப் பார்த்தான்.

காபியை பருகிய நிலா அடுத்த நொடி வாயை மூடி கொண்டு வாஷ்பேசினை நோக்கி ஓடினாள். அதைக் கண்டு அதிர்ந்த தீபக் அவளின் பின்னேயே ஓடினான். சரவணனோ திகைப்புடன் நின்றிருந்தான். பின்னே அவன்

காபி போட்ட லட்சணத்திற்கு அவன் அவள் அருகில் போனால் அடித்துவிட மாட்டாளா!

நிலா வாஷ்பேசினில் காபியை துப்பிய போது அவளுக்கு நன்கு புரையேறியது. அதைக் கண்ட தீபக் அவளது தலையில் இதமாகத் தட்டி கொடுத்து,

"ரிலாக்ஸ் நிலா..." என்று பதமாகக் கூறினான். இந்தக் காட்சியைக் காண சகிக்காத சரவணனுக்கு முதன்முறையாகப் பயம் வந்தது. எங்கே! தன்னவளை இழந்து விடுவோமோ என்று... இழப்பின் வலி அவனுள் காதலின் தீவிரத்தை அதிகரித்தது. அதன்விளைவு,

‘சரவணா, பொறுத்தது போதும். பொங்கி எழு...’ என்று தனக்குள் சபதம் எடுத்து கொண்டவன் அடுத்து தான் செய்ய வேண்டிய வேலையைத் திட்டமிடலானான்.

தொடரும்...!!!

# அத்தியாயம் : 7

"மீனா, அடுத்த வாரம் உனக்குப் பொறந்தநாள் வருதுல்ல. கிளம்பு, கடைவீதிக்குப் போய்த் துணி எடுத்துட்டு வந்துருவோம்." மாரிமுத்து சின்ன மகளிடம் கூறினார்.

"ஐய், ஜாலி..." என்று மீனா துள்ளி குதித்துக் கொண்டு கிளம்பவுதற்காகத் தயாராகப் போனாள்.

"என்னடி ஜாலி...? பன்னெண்டாவது படிச்சிட்டு இருக்கன்னு கொஞ்சமாவது பொறுப்பு இருக்கா?" அஞ்சலை மீனாவிடம் காய்ந்தார்.

"அதுக்காக எப்ப பாரு படிச்சிட்டே இருக்க முடியுமா?" என்று மீனா சிணுங்கினாள்.

"மீனா, நீ போய் டிரெஸ் மாத்திட்டு வா. துர்கா நீயும் கிளம்பு." மாரிமுத்து இரண்டு மகள்களையும் கிளம்பச் சொல்லி பணித்தார். அவர்கள் இருவரும் சென்றதும் அஞ்சலை கணவரை பிடிபிடியென்று பிடித்துக் கொண்டார்.

"எல்லாம் நீங்க கொடுக்கிற செல்லம். இப்போ நமக்கு இருக்கிற செலவுக்கு இந்தச் செலவு தேவை தானா?"

"இப்போ தான் நிலா சம்பாதிக்கிறாளே. இன்னமும் முதல்ல இருந்த மாதிரியே இருக்கணுமா?"

"நல்லா இருக்கு நீங்க சொல்ற நியாயம். அடுத்தடுத்து வரிசையா மூணு பொட்டப்புள்ளைய பெத்து வச்சியிருக்கிற தகப்பன் பேசுற மாதிரியா பேசுறீங்க?"

"எம் பொண்ணுங்களுக்கு என்னடி? அவங்க பெண் சிங்கங்கள்." என்று மீசையை முறுக்கி கொண்டார் மாரிமுத்து.

"என்ன சிங்கங்களா இருந்து என்ன செய்ய? ஒருத்தனை கட்டிக்கிட்டு அசிங்கப்படத் தானே வேண்டியிருக்கு." அஞ்சலையின் குரல் தாங்கலுடன் ஒலித்தது.

"என்னடி பேச்சு ஒரு மாதிரியா இருக்கு?"

"எங்கப்பனும் எங்காத்தா கிட்ட இதே வார்த்தையைத் தான் சொல்லுச்சு... ஆனா இங்கே என்னத்த வாழுது?" அதற்கு மேல் மாரிமுத்து வாயை திறப்பார். தயாராகி வந்த மகள்களை அழைத்துக் கொண்டு தப்பித்து விட்டார்.

ஜவுளி கடையில் இரு மகள்களும் ஆசை ஆசையாக உடைகளைப் பார்த்து கொண்டிருந்ததைக் கண்டு அவரது விழிகள் பனித்தது. தனது பிள்ளைகளுக்குச் செய்ய வக்கில்லாத எந்தத் தகப்பனுக்கும் எழும் குற்றவுணர்ச்சி, வேதனை அவருள் எழுந்தது. அவர் மனதில் சரவணனுக்கு நன்றி கூறிக் கொண்டார். ஏனெனில் அவன் தான் மீனாவின் பிறந்தநாளை அறிந்து வைத்திருந்து பணத்தை அவரது வங்கி கணக்கில் போட்டது. அதை அறிந்து அவர் அவனுக்கு அழைத்தார்.

"எதுக்குப் பணம் எல்லாம் மாப்ளே? நீங்க கிடைச்சதே நான் செஞ்ச புண்ணியம்."

"மாமா, அடுத்த வாரம் நம்ம மீனு குட்டிக்கு பேர்த்டே வருதே. மறந்துட்டீங்களா?"

"அட ஆமா மாப்ளே... மறந்தே போயிட்டேன்."

"மீனு குட்டிக்கு தான் இந்தப் பணம். அப்படியே துர்காவுக்கும் டிரெஸ் வாங்கிக் கொடுங்க மாமா. காலேஜ் போகிற பொண்ணு... அவளுக்கும் ஆசை இருக்கும்ல."

"சரிங்க மாப்ள..." என்றவர் மனம் நெகிழ அழைப்பை துண்டித்தார்.

அதை நினைத்து பார்த்தவர் மனம் நெகிழ்ந்தது. மனைவியிடம் கூறியது போல் நிலாவின் சம்பளத்தை அவர் செலவு செய்யவில்லை. அவளது திருமணத்திற்காகச் சேர்த்து வைக்கிறார். ஏதோ அவர் சக்திக்கு ஏற்ப மகளுக்குச் சீர் செய்ய வேண்டுமே...

"அப்பா இந்தக் கலர் நல்லாயிருக்கா?" மீனாவின் குரலில் நினைவு கலைந்தவர் மகளைப் பார்த்து,

"உனக்கு எதுன்னாலும் நல்லா இருக்கும். உனக்குப் பிடிச்சதை எடு." என்றவர் இரண்டாவது மகள் துர்காவிடம்,

"நீயும் ட்ரெஸ் எடுத்துக்கோ." என்க...

"எதுக்குப்பா வீண் செலவு?" துர்கா குடும்பச் சூழ்நிலை அறிந்து மறுத்தாள்.

"அப்பா சொல்றேன்ல... எடு." அவர் வற்புறுத்தவும் அவள் முகம் மலர தனக்கான உடையைப் பார்க்கலானாள். அதைக் கண்டவருக்குத் தனது வறுமையை நினைத்துக் கோபம் வந்தது.

உடை எடுத்துவிட்டு அப்படியே உணவு விடுதிக்கு போய்விட்டு வீடு வர இரவாகி விட்டது. அஞ்சலை மகள்கள் உறங்கும் வரை ஒன்றும் பேசாது அமைதியாக இருந்தார். அவரது அமைதி கண்டு,

"என்ன ரொம்ப அமைதியா இருக்க? பெரிய பூகம்பத்தை எதிர்பார்த்தேனே." என்று மாரிமுத்து கிண்டலடிக்க...

"எனக்கு மட்டும் என்ன வாங்கிக் கொடுக்கக் கூடாதுன்னு எண்ணமா என்ன? எம் பொண்ணுங்க சந்தோசமா இருந்தா எனக்கும் சந்தோசம் தான். என்ன ஒண்ணு, நீங்க கடன் வாங்கிக் கஷ்டப்படக் கூடாதே. அது தான் எனக்கு வருத்தமா இருக்கு." மனைவியின் அன்பில் மாரிமுத்து நெகிழ்ந்து போனார்.

"கடன் எல்லாம் வாங்கலை. நீ கவலைப்படாதே."

"அப்போ பணம்?"

"எப்படியோ வந்துச்சு." என்ற மாரிமுத்து மேலே பதில் கூறவில்லை.

"என்னங்க...?" அஞ்சலை தயக்கத்துடன் கணவரை அழைத்தார்.

"சொல்லு..."

"நம்ம நிலா கல்யாணம்..." அவர் தயக்கத்துடன் நிறுத்த...

"அவளோட கல்யாணத்தை எப்படி நடத்தணும்ன்னு எனக்குத் தெரியும். நீ பேசாம இரு." என்றவரிடம் மேலும் வாக்குவாதம் பண்ண அவரால் முடியவில்லை. இந்த விசயத்தில் அவரது குரல் எடுபடாது என்பது அவருக்குத் தெரியும். அன்று அவர் செய்த வினை இன்று அவரது வாயை மூட செய்திருக்கிறது.

காலையில் எழுந்த பொன்னுத்தாய் வாசல் கூட்டுவதற்காக விளக்கமாறுடன் கதவை திறந்தார். அங்கே நின்றிருந்த மகனை கண்டதும் அவர் இனிய அதிர்ச்சியில் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார். கையில் விளக்கமாறுடன், தலைமுடியை விரித்துப் போட்டபடி அன்னை நின்றிருந்த கோலம் கண்டு சற்று திகைத்துப் போனான் சரவணன்.

"ம்மா, நான் பேச போகும் விசயம் தெரிஞ்சு பத்ரகாளியா மாறிட்டியா? நான் உன்னை நம்பி தானே வந்தேன். தாயே என் தெய்வம் என்று... தாயே என்னைக் காலைவாரி விட்டால் நான் எங்கே போவேன்... தாயே, பதில் சொல், பதில் சொல்..." அவன் நாடகபாணியில் வசனம் பேசியவன் போலியாக விழிகளைத் துடைத்துக் கொண்டான்.

"நான் பெத்த மகனே... என்ன ராசா, இப்படிச் சொல்லிப்புட்ட. நான் உசிர் வாழ்றதே உனக்காகத் தான்." என்றபடி பொன்னுத்தாய் அவன் அருகில் வர...

"ம்மா, ஆயுதத்தைக் கீழே போட்டுட்டு கிட்டே வா..." அவன் விளக்கமாறை சுட்டிக்காட்ட...

"அடச்சே..." என்றவர் கையிலிருந்த விளக்கமாறை தூக்கி போட்டு விட்டு மகனை கட்டி கொண்டார்.

இவர்களது அலப்பறையில் சொக்கன் எழுந்து அங்கே வந்தார். அங்கே மகன் நின்றிருப்பதைக் கண்டு சந்தோசப்பட்டாலும் வெளியில் அதைக் காட்டி கொள்ளாது,

"துரை இப்பத்தானே ஊருக்கு வந்துட்டு போனாரு. இப்போ எதுக்கு வந்து இருக்காராம்?" என்று அவர் மனைவியைப்

பார்த்து கேட்க...

"இது என் வீடு என் வீட்டுக்கு வர பெர்மிசன் கேட்கணுமாக்கும். நோ நெவர்..." என்றவன் கையிலிருந்த பையை எடுத்துக் கொண்டு அவரைத் தாண்டி வீட்டினுள் சென்றார்.

"வீட்டுக்கு வந்த புள்ள கிட்ட பேசுற லட்சணமா இது?" பொன்னுத்தாய் மோவாயை தோள்பட்டையில் இடித்துக் கொண்டு முகத்தை வெட்டியபடி சென்றார்.

"பார்த்துடி ஆத்தா... கழுத்துச் சுளுக்கிக்கப் போகுது." சொக்கன் மனைவியைக் கேலி செய்தார்.

சொக்கனுக்கு மனதில் யோசனை ஓடிய போதும் எதுவும் பேசாது இருந்தார். மகன் குளித்து முடித்து உணவு உண்டு முடிக்கும் வரை அவர் எதுவும் பேசவில்லை. மூவரும் உண்டு விட்டு முற்றத்தில் அமர்ந்தனர்.

"ம்மா, அக்கா இங்கே இருக்காளா? அவள் வீட்டில் இருக்காளா?"

"அவளோட நாத்தனாருக்கு உடம்பு சரியில்லைன்னு மதுரைக்குப் போயிருக்காள்."

"அப்போ நல்லதா போச்சு... நான் வந்த விசயத்தைச் சொல்லிர்றேன்." அவன் கூறியதும் சொக்கன் மகனை கூர்ந்து பார்த்தார். ஆனால் என்னவென்று கேட்கவில்லை. அவனே சொல்லட்டும் என்று அமைதியாக இருந்தார்.

"நிலா வீட்டில் போய்ப் பொண்ணு கேட்கணும்."

"திரும்பவுமா?" பொன்னுத்தாய் அவனைக் கவலையாய் பார்த்தார்.

"நிலா தான் என் பொஞ்சாதின்னு சொன்னப்ப எல்லாம் சரின்னு தானே சொன்ன. இப்போ என்ன பம்முறம்மா?"

"அதுக்கு இல்லைடா..." பொன்னுத்தாய் தயங்கினார்.

"எதுக்குத் தயங்குற? பளிச்சின்னு மண்டையில் உறைக்கிற மாதிரி வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு சொல்லு. ஏற்கெனவே பொண்ணு கேட்டு போய் அவமானப்பட்டு வந்திருக்கோம். திரும்பப் போய் அவமானப்படணுமா? அதை எல்லாம் விட அந்தப் பொண்ணுக்கு இவனைப் பிடிக்கலை. இது தெரிஞ்சிருந்தும் போய்ப் பேச சொல்லுறியா?"

"ப்பா, அப்போ இருந்த சூழ்நிலை வேற... இப்போ இருக்கும் சூழ்நிலை வேற."

"என்னடா பெரிய சூழ்நிலை... அந்தப் பொண்ணு பேசிய பேச்சுக்கு எல்லோரும் உன்னைத் தானேடா அசிங்கமா பேசினாங்க. நீ ஆம்பளையே இல்லைன்னு. உன்னைக் கேவலப்படுத்தியவள் எங்களுக்கு மருமகளா வர தேவையில்லை." அப்பாவின் வார்த்தைகளில் அவன் மனம் நெகிழ்ந்து போனான். அவர் அவனுக்காகத் தான் பார்க்கிறார். அவனது அவமானத்தை அவரது அவமானமாக அவர் கருதுகிறார்.

சரவணன் எழுந்து சென்று அவரது காலடியில் அமர்ந்தவன் அவரை அண்ணாந்து பார்த்து, "ப்பா, உன் புள்ள ஆம்பளைன்னு நிரூபிக்க வேண்டாமா?" என்று கேட்க...

"நிரூபிச்சே ஆகணும்டா... நரம்பில்லாத நாக்கு நாலையும் பேசிச்சில்ல. பேசுன இந்த ஊர் முன்னாடி நீ வாழ்ந்து காட்டணும். உனக்கு எப்படிப்பட்ட பொண்ணு வேணும்? டாக்டரா, இன்ஜினியரா, ஐஏஎஸ்ஸா... எந்த மாதிரியான பொண்ணு வேணும்?"

"எனக்கு நிலா தான் வேணும்." என்று தன்னைப் பாவமாகப் பார்த்தவனைக் கண்டு அவரது மனம் இளகித்தான் போயிற்று.

"அது எப்படிடா? அந்தப் பொண்ணால தான் நீ ஊரான் கிட்ட அந்தப் பேச்சு வாங்கின. அப்படி இருந்தும்... இது சரிப்பட்டு வருமா சரவணா?"

"எல்லாம் சரியா வரும்ப்பா..."

"இப்போ அவசரமா கல்யாணம் பண்ணிட்டு நாளைக்கு அந்தப் புள்ள பேசிய வார்த்தை ஞாபகம் வரும் போது எல்லாம் நீ அந்தப் புள்ளைய வார்த்தையால வதைச்சிர கூடாது. நான் ரெண்டு பக்கமும் யோசிச்சு தான் பேசுறேன்." தனக்காக மட்டுமல்லாது பெண்ணவளுக்காகவும் யோசிக்கும் தந்தையைக் கண்டு அவனுக்குப் பெருமிதமாக இருந்தது. சும்மாவா அவர் இந்த ஊர் நாட்டாமையாக இருக்கிறார்!

"அப்பா, அதை எல்லாம் நான் மறந்து ரொம்ப நாளாச்சு. அவள் மேலுள்ள காதல் மட்டும் தான் இதயத்தில் இருக்கு."

"ஏன்டா சரவணா, கொஞ்சம் கூட வெட்கமே இல்லையாடா?" மருமகள் மீது மகன் வைத்திருக்கும் காதல் கண்டு எல்லா மாமியாருக்கும் வரும் பொறாமை குணம் பொன்னுத்தாய்க்கும் எழுந்தது.

"ப்பா, நம்ம குடும்பத்துக்கு வெட்கம், மானம், சூடு, சொரணை எல்லாம் இருக்கா என்ன?"

"இல்லவே இல்லையே..." அப்பாவும், மகனும் 'ஹைபை' கொடுத்து கொண்டனர்.

"கர்மம், கர்மம்.." பொன்னுத்தாய் தலையில் அடித்துக் கொண்டார்.

"கிழவிக்குப் பொறாமைடா..." சொக்கன் மகனுடன் இணைந்து கொண்டு மனைவியைக் கலாய்த்தார்.

"யோவ் கிழவா, யாரை பார்த்து கிழவிங்கிற?" பொன்னுத்தாய் சண்டைக்குக் கிளம்பினார்.

"அடப்பார்டா கோபத்தை... அடியேய் கிழவி, அடுத்த முகூர்த்தத்தில் உன் புள்ளைக்குக் கல்யாணம் பண்ணி வச்சா... எண்ணி பத்து மாசத்தில் உன் பேர புள்ள உன் கையில் இருப்பான். அப்போ நீ கிழவி தானே." பேர

குழந்தைகள் என்றதும் பொன்னுத்தாய் முகம் மலர்ந்தார். கிழவி என்று சொன்ன கணவரை மன்னித்து விட்டார்.

"அப்பா, மசமசன்னு பேசிட்டு இருக்காம ஏற்பாடு பண்ணுங்கப்பா..." சரவணன் தந்தையை அவசரப்படுத்தினான்.

"டேய் மகனே, நான் உன் அப்பாடா..." சொக்கன் அலறினார்.

"ஐயோ அதில்லைப்பா... கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்கன்னு சொன்னேன்."

"இன்னைக்கே போய்ப் பொண்ணு கேட்கிறோம். ஓகேவா? நாம வர போற விசயத்தை உன் மாமனாருக்கு ஃபோன் போட்டு சொல்லு."

"சரிப்பா..." மகிழ்ச்சியுடன் தலையசைத்தவன் அலைப்பேசியை எடுத்துக் கொண்டு வாயிலுக்குச் சென்றான்.

மாரிமுத்துவிடம் அவன் விசயத்தைக் கூற மறுபக்கம் அவர் மகிழ்ந்து போனார். அழைப்பை துண்டித்துவிட்டு மனைவியிடம் விசயத்தைச் சொல்ல... அஞ்சலையோ கவலையுடன் கணவரை பார்த்தார்.

"எதுக்கு இப்படி முகத்தைச் சோகமா வச்சிட்டு இருக்க... உனக்குத் தான் மாப்பிள்ளையை ரொம்பப் பிடிக்குமே. பிறகு என்ன?"

"அதில்லைங்க... நிலா..."

"நிலா யார் கம்பெனியில் வேலை பார்க்கிறாள்ன்னு நினைச்ச... நம்ப மாப்பிள்ளை கம்பெனியில் தான்."

"என்னங்க சொல்றீங்க?" அஞ்சலைக்கு இது புதிய செய்தி...

"ஆமா அஞ்சலை, நிலா படிப்பு முதல் இப்போ வேலை பார்க்கிறது வரை எல்லாமே அவளுக்கு மாப்பிள்ளை தான் பார்த்து பார்த்து செய்கிறார்."

"எனக்கு அப்பவே சந்தேகம், அரியர் வச்ச இவளுக்கு யாருடா வேலை கொடுக்கிறதுன்னு... இப்போ தானே புரியுது." அஞ்சலைக்குச் சந்தோசமாக இருந்தது.

"ம், அதே தான். இப்போ சொல்லு. இந்த மாப்பிள்ளையை விட வேறு நல்ல மாப்பிள்ளை நம்ம நிலாவுக்குக் கிடைக்குமா?"

"அச்சோ அப்படி எல்லாம் நான் சொல்லலைங்க. மாப்பிள்ளை தங்கம்ன்னு அப்பவே எனக்குத் தெரியுமே. எனக்குப் பயமே நிலாவை நினைச்சு தான்."

"அப்போ விசயம் வேற... இப்போ விசயம் வேற. அடுத்தடுத்து தங்கச்சிங்க இருக்கிறப்போ அவளால் மறுத்து பேச முடியாது. போன தடவை மாதிரி நீ தலையிடாம இருந்தால் போதும். நான் அவகிட்ட பேசிக்கிறேன்."

"சரிங்க, நான் வாயை திறக்கலை." அஞ்சலை சந்தோசமாய்க் கூறினார். நிலாவின் வீட்டில் திருமணக் களை வந்து விட்டது.

அன்று மாலையில் சரவணன் தனது பெற்றோருடன் நிலாவின் வீட்டிற்கு வந்து இறங்கினான். மாரிமுத்து, அஞ்சலை வெளியில் மகிழ்ச்சியுடன் வரவேற்றாலும் உள்ளுக்குள் சிறு தயக்கம் இருந்தது. அது நிலாவினால் என்றால் மிகையில்லை. ஆனால் அதை எல்லாம் போக்கிவிட்டது சொக்கனின் அன்பான அணுகுமுறை. பழைய விசயங்களைச் சொக்கன் பேசவில்லை. மாறாகத் திருமணம் பற்றி மட்டுமே பேசினார். அதனால் சங்கடங்கள் அழகாகத் தவிர்க்கப்பட்டது.

"வர்ற முகூர்த்தத்தில் கல்யாணத்தை வச்சுக்குவோம். எல்லா வேலைகளையும் நாங்க பார்த்துக்கிறோம். நீங்க பொண்ணைக் கூட்டிட்டு வந்தா மட்டும் போதும்." சொக்கன் சொல்லவும் மாரிமுத்து, அஞ்சலை சந்தோசமாகத் தலையாட்டினர்.

"எதுக்கும் மருமவப்புள்ள கிட்ட ஒரு வார்த்தை..." பொன்னுத்தாய் இழுக்க...

"அப்போ படிக்கணும்ன்னு ஒத்த கால்ல நின்னுச்சு. இப்போ கல்யாணத்த மறுக்க ஒரு காரணமும் இல்லைங்க. என் பேச்சை என் பொண்ணு கேட்பாள்." மாரிமுத்து தீர்மானமாகக் கூறினார்.

"ம்மா, நான் தான் மாப்பிள்ளைன்னா நிலா மறுக்க மாட்டாள். அந்தளவுக்கு நான் அவளுக்குக் கிளோஸ் பிரெண்ட்." மகன் கூறியதும் அந்தத் தாயுள்ளம் மகிழ்ந்து போனது.

"அப்போ சரி..." பொன்னுத்தாய் சம்மதம் கூறிவிட்டார்.

"ஏன்டா மவனே, இன்னும் பிரெண்ட் தானா? நீ எப்போ காதல் பண்ணி, கல்யாணம் பண்ணி, புருசனாகி... சொல்லும் போதே மூச்சு வாங்குதே." சொக்கன் மகனை கிண்டல் செய்ய...

"அதுக்குத் தான் நான் ஸ்ட்ரெய்ட்டா கல்யாணத்துக்குப் போயிட்டேன்." என்று சரவணன் கெத்தாகச் சட்டை காலரை தூக்கி விட்டுக் கொள்ள... அங்கே சிரிப்பலை பரவியது.

அப்போதும் சரவணன் ஒன்றை மறந்து போனான். அன்று செய்த அதே தவறை இன்றும் அவன் செய்தான். அன்றும் இன்றும் அவன் அவளது பெற்றோர் சம்மதத்தைத் தான் கேட்டானே ஒழிய... அவளது சம்மதத்தை அவன் கேட்கவே இல்லை.

அன்றே சரவணன் சென்னைக்குக் கிளம்பிவிட்டான். அவன் எதையோ சாதித்து விட்ட திருப்தியில் இருந்தான். தனக்கும், நிலாவுக்கும் திருமணப் பேச்சு முடிந்ததில் அவனுள் புதிதாய் கர்வம் முளைத்தது. அதனால் அவன் தீபக்கிடம் சென்று சவால் விடச் சென்றான். அவன் வீட்டிற்குள் நுழைந்ததும் நண்பர்களிடம் கூடப் பேசாது நேரே தீபக்கை தேடி சென்றான். அவனது அறை கதவை தட்டிவிட்டு அனுமதி பெற்றுவிட்டு உள்ளே சென்றான்.

"வாங்க சரவணன். ஊருக்கு போயிட்டு ஒரே நாளில் திரும்ப வந்துட்டீங்க. காதலியை பிரிஞ்சு இருக்க முடியலையா?" தீபக் கள்ளச்சிரிப்புடன் கேட்டான்.

"எஸ் அதே தான்..." என்ற சரவணன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

"ஓஹோ..."

"அதனால் தான் நான் ஒரு முடிவு பண்ணிட்டு வந்திருக்கேன்." என்ற சரவணனை கண்டு தீபக்கின் விழிகள் இடுங்கியது.

"எனக்கும், நிலாவுக்கும் அடுத்த மாசம் பத்தாம் தேதி கல்யாணம்." அதைக் கேட்டு தீபக் திடுக்கிட்டுப் போனான்.

"உண்மையாவா?"

"இதில் எதுக்கு நான் பொய் சொல்ல போறேன்? உண்மையே. நானும், நிலாவும் காதலிக்கிறோம். இப்போ எங்க காதல் கல்யாணத்தில் முடிந்திருக்கிறது."

"நீங்களும், நிலாவும் காதலிக்கிறீங்களா? இதை நான் நம்பணுமா?"

"நம்பி தான் ஆகணும். வேறு ஆப்சன் இல்லை." என்ற சரவணனை தீபக் யோசனையாய்ப் பார்த்தாலும் வெளியில்,

"ஆல் த பெஸ்ட்..." என்று கூற...

"தீபக் சார், இதுக்கு ஆல் த பெஸ்ட்ன்னு சொல்ல கூடாது. வாழ்த்துகள் அல்லது கங்கிராட்ஸ்ன்னு சொல்லணும்."

"இப்போ இது தான் பொருத்தம்." என்ற தீபக் நமட்டு சிரிப்புடன் அறையை விட்டு சென்றுவிட்டான்.

சரவணனும் வெளியில் வர... அவனது நண்பர்கள் அவனைப் பிடித்துக் கொண்டனர்.

"போன காரியம் என்னடா ஆச்சு?"

"சக்ஸஸ்..." என்று சரவணன் தனது வலக்கை கட்டை விரலை உயர்த்திக் காட்ட...

"சூப்பர் டா... எப்போ ட்ரீட்?" குணா, வம்சி கோரசாய் கேட்டனர்.

"கொடுக்கிறேன்டா..." என்றவன், "இவன் ஏன்டா இப்படிப் பேசிட்டு போறான்?" என்று கேட்க...

"எவன்?"

"தீபக்..." என்றவன் தீபக் கூறியதை சொன்னான்.

"அவன் கெடக்கிறான் மாங்கா மடையன்... நீ ட்ரீட் கொடு..." என்று மீண்டும் இருவரும் கேட்க...

"போகலாம்டா... இப்போ..." என்றவனை மேலே பேசவிடாது குணா,

"இப்போ மணி பதினொண்ணு... நேரே தலப்பாக்கட்டி பிரியாணி சாப்பிட போறோம்." என்று கட்டளையுடன் சொல்ல...

"டேய் நிலா..." சரவணன் பரிதாபமாக நண்பர்களைப் பார்த்தான்.

"நிலா பத்திரமா இருக்கும். ஆனா சோறு பத்திரமா இருக்காதுடா. எவனாவது காலி பண்ணிட்டுப் போயிருவான் பங்கு. சோறு முக்கியமா? காதலி முக்கியமா?" குணா கேட்க... சரவணனுக்கும் லேசாகப் பசி எடுப்பது போல் தோன்ற...

"சோறு தான்டா..."

"என் இனம்டா..." குணா அவனைத் தோளோடு அணைத்துக் கொள்ள... மூவரும் பிரியாணி கடையை நோக்கி கிளம்பினர்.

அவர்கள் பிரியாணியை மொக்கி கொண்டிருந்த நேரத்தில் நிலா காபி ஷாப்பில் அமர்ந்திருந்தாள். எதிரே தீபக்

அமர்ந்திருந்தான்.

"சார், ஏதோ சொல்லணும்ன்னு கூட்டிட்டு வந்துட்டு எதுவுமே பேசாம இருந்தா என்ன அர்த்தம்?"

"அது வந்து நிலா..." என்று தயங்கிய தீபக்கை ஆச்சரியமாகப் பார்த்தாள் நிலா.

"எதுவாக இருந்தாலும் சொல்லுங்க சார்." என்றவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"ஐ லவ் யூ நிலா." என்று பட்டென்று காதலை சொல்ல... அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்.

"பதில் சொல்லு நிலா? என் காதலை ஏற்றுக் கொள்வாயா?"

"சார்..." அவள் தயங்கினாள்.

"ம், கமான்..." அவன் அவளை ஊக்குவிக்க...

"நான் ஒருத்தரை காதலிக்கிறேன்." அவள் அப்படிக் கூறியதும் தான் சரவணன் கூறியது உண்மை என்று தீபக்கிற்குப் புரிந்தது.

"ஓ... வாழ்த்துகள்." என்று தீபக் புன்னகை புரிய...

"நீங்க உண்மையில் ஜென்டில்மேன் சார்." நிலா அவனைப் புகழ...

"தேங்க்யூ... கிளம்பலாமா?" என்று அவன் எழ... அவளும் எழுந்தாள்.

இருவரும் இணைந்து அலுவலகத்திற்கு வந்தனர். நிலா அவள் இடத்திற்குச் சென்றுவிட... தீபக் அவனுக்குக் கொடுக்கப்பட்டு இருந்த அறைக்குச் சென்றான். நாற்காலியில் அமர்ந்தவன் உடனே சரவணனை தன்னை வந்து பார்க்க சொன்னான். சரவணன், 'எதுக்கு இவன் கூப்பிடுறான்?' என்று தெரியாது தீபக்கை காண சென்றான்.

"வாங்க சரவணன், உட்காருங்க..." என்று அவனை அமர சொன்ன தீபக் அவனை ஊடுருவி பார்த்தான்.

'பயபுள்ள எதுக்கு இப்படிப் பார்த்து வைக்குது?' சரவணன் விழித்தான்.

"வாழ்த்துகள் சரவணன்."

"எதுக்கு?"

"உங்க திருமணத்துக்கு..."

"காலையில் சொல்லாத வாழ்த்து இப்போ வந்திருக்கு... அதிசயம் தான்."

"காலையில் உண்மை நிலவரம் தெரியலை. இப்போ தான் தெரிஞ்சது." என்றவனைச் சரவணன் யோசனையாகப் பார்த்தான்.

"எஸ், நீங்களும், நிலாவும் காதலிக்கிறதா நிலா என் கிட்ட சொன்னாள்." என்று தீபக் கூற... அதைக் கேட்ட சரவணன் குழம்பி போனான். 'இது என்னடா புதுக் கதை?' அவன் யோசித்தான்.

அப்போது தீபக் நிலாவுடன் பேசியதை சொல்ல... அதைக் கேட்ட சரவணன் உள்ளுக்குள் அதிர்ந்தான்.

'என்னாது... நிலா ஒருத்தனை காதலிக்கிறாளா?'

ஆனாலும் வெளியில் அதைக் காட்டி கொள்ளாது, "நான் தான் சொன்னேன்ல..." என்று அவன் கெத்து காட்டி கொண்டான். வேறுவழி...

அதேநேரம் மாரிமுத்து நிலாவை அலைப்பேசியில் அழைத்துப் பேசினார். தந்தையின் அழைப்பை கண்டு சந்தோசத்துடன் ஏற்றுப் பேசியவள் மறுபக்கம் அவர் கூறிய வார்த்தைகளைக் கேட்டு திகைத்து போனாள்.

"அடுத்த மாசம் பத்தாம் தேதி உனக்குக் கல்யாணம் முடிவு பண்ணி இருக்கு."

"ப்பா... திடீர்னு சொன்னா எப்படிப்பா?"

"கல்யாணம் திடீர்னு தான் தகைஞ்சு வரும்."

"என் கிட்ட சம்மதம் கேட்கணும்ன்னு தோணலையாப்பா..."

"எதுக்குக் கேட்கணும்? ஏற்கெனவே நீ இழுத்து வச்ச எழவு பத்தாதா?"

"ப்பா, அதுக்குன்னு... எனக்குன்னு ஒரு மனசு இருக்குப்பா."

"இங்கே பார் நிலா, அப்போ நீ சொன்ன காரணம் எனக்கு நியாயமா பட்டுச்சு. அதான் நான் உன் விருப்பத்துக்குச் சரின்னு சொன்னேன். ஆனா இப்போ...? நீ படிச்சு முடிச்சு உன் விருப்பப்படி வேலைக்கும் போகிற. பொறவு என்ன...?" என்றவரின் அதிகார குரல் திடீரென்று தழுதழுத்தது.

"உனக்கு அடுத்து உள்ள உன் தங்கச்சிங்களைக் கொஞ்சம் நினைச்சு பாரு நிலா. நம்ம குடும்பச் சூழலுக்கு இப்படியொரு பெரிய இடம் தகைஞ்சு வர்றது அதிசயம். அதையும் இதையும் சொல்லி அப்பா நினைப்புல மண்ணை அள்ளி போட்டுறாதே." தந்தையின் கெஞ்சலில் அவள் தனது விருப்பத்தைக் குழி தோண்டி புதைத்து கொண்டாள். வீட்டில் மூத்த பெண்ணாய் பிறந்தவர்களின் சாபமோ இது...

"சரிப்பா... இனி நீங்க இப்படி எல்லாம் பேசாதீங்க. உங்க வார்த்தைக்கு நான் கட்டுப்படுறேன்." மகள் சம்மதம் சொன்னதும் அவருக்குச் சந்தோசமாக இருந்தது.

"இன்னும் ஒரு வாரத்தில் லீவு போட்டுட்டு ஊருக்கு கிளம்பி வர பாரு. எனக்கும், உங்கம்மாவுக்கும் கல்யாண வேலை தலைக்கு மேல இருக்கு. நீ வந்து பொறுப்பா வீட்டை பார்த்துக்கோ."

"திடீர்னு லீவு கேட்டா கொடுக்க மாட்டாங்க."

"அதெல்லாம் கொடுப்பாங்க. நீ கேட்டு பாரு." அவர் சரவணனை மனதில் நினைத்துக் கொண்டு கூற...

"சரிப்பா..." என்று அழைப்பை வைத்தவளுக்கு ஓவென்று அழ வேண்டும் போலிருந்தது. நேரே கழிவறைக்குச் சென்றவள் அங்கிருந்த கண்ணாடியை பார்த்து ஓவென்று கதறி அழுதாள்.

ஆணவனின் காத்திருந்த காதல் வெற்றிக் கொண்டது. பெண்ணவளின் காத்திருந்த காதல் தோல்வியுற்றது. இது தான் ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள வித்தியாசமோ! பெண் பிறப்பின் சாபமோ!

தொடரும்...!!!

# அத்தியாயம் : 8

அழைப்பை துண்டித்த மாரிமுத்து தனது மற்ற இரு மகள்களையும் அழைத்தார். இருவருக்கும் உள்ளூர் விடுமுறை என்பதால் வீட்டில் இருந்தனர்.

"சொல்லுங்கப்பா..." இருவரும் அவர் முன் வந்து நின்றனர்.

"உங்க அக்கா கிட்ட கல்யாணத்தைப் பத்தி எதுவும் பேச கூடாது. ஏற்கெனவே நடந்தது தெரியும் தானே?" ஏற்கனவே நிகழ்ந்த கலவரம் அவர்களது மனக்கண்ணில் வந்து போனதில் அவர்களது முகம் பயத்தில் வெளிறிப் போனது. அதனால் அவர்கள் சரியென்று கூறினர். அதைக் கண்ட மாரிமுத்து நிம்மதியாகத் தனது வேலையைப் பார்க்க சென்றுவிட்டார்.

அங்கே சரவணன் தீபக்கின் முன் அமர்ந்து அவனையே பார்த்திருந்தான். தீபக் ஏதோ சொல்ல வருவதும் பின்பு தயங்குவதுமாய் இருந்தான்.

"என்ன தீபக் சார்? ஏதோ சொல்ல வந்து தயங்குற மாதிரி இருக்கு."

"நீங்க ரொம்ப லக்கி சரவணன்."

"ஏன் இப்படிச் சொல்றீங்க?"

"நிலா மாதிரியான பெண் கிடைக்கத்தான்."

'அடேய் நானே அவளோட காதலை தெரிஞ்சு அதிர்ந்து போய் இருக்கேன். இதில் நீ வேற...' என்று உள்ளுக்குள் அழுத சரவணன் வெளியில்,

"தேங்க்யூ, தேங்க்யூ..." என்று புன்னகைத்தவனுக்கு அப்போது தான் அது ஞாபகத்தில் வந்தது.

"என்னை வாழ்த்துற நீங்க ஏன் நிலாவுக்கு லவ் ப்ரொப்போஸ் பண்ணுனீங்க? ஐ டிடின்ட் எக்ஸ்பெக்ட் திஸ் சார்." என்று அவன் முறுக்கி கொண்டான்.

"உங்க காதலில் கொஞ்சம் விளையாடி பார்க்க வந்தேன்."

"ஹலோ யார் சார் நீங்க? நீங்க விளையாடுறதுக்கு என் காதல் தான் கிடைச்சதா?"

"சரவணா, என்னை நன்றாக உற்று பாருங்க. என்னை அடையாளம் தெரியலையா?" தீபக் கூறியதும் சரவணன் மேசை மீது கை வைத்து அவனை நன்றாக உற்றுப் பார்த்தான்.

"ப்ச், தெரியலையே." என்று சரவணன் உதட்டை பிதுக்கினான்.

"அதானே... உங்களுக்குப் பெண்களைத் தானே ஞாபகம் இருக்கும். ஆண்களை எப்படி ஞாபகம் இருக்கும்?"

"சார், நீங்க...? ஒருவேளை என் கூடக் காலேஜில் படிச்சீங்களா?" அவன் சந்தேகமாய்க் கேட்டான்.

"பரவாயில்லையே, பெண்கள்ன்னு சொன்னதும் காலேஜ் லைஃப் ஞாபகம் வந்திருச்சே. ஆமா, நானும் நீங்க படிச்ச அதே காலேஜில் தான் படிச்சேன்."

"ஆமா சார், காலேஜ் படிக்கிறப்போ ஐயா பெரிய ரோமியோ தெரியுமா?"

"ஆனா நீ எனக்கு ராவணன்டா..." தீபக்கின் குரல் கோபமாய் ஒலித்தது.

"தீபக்... சார்..." சரவணன் உள்ளுக்குள் திடுக்கிட்டான்.

"அனுபமா உனக்கு ஞாபகம் இருக்கா?"

"அதெப்படி ஞாபகம் இல்லாம போகும் தீபக். நார்த் இண்டியன் பொண்ணு தானே. சும்மா மைதா மாவு மாதிரி தகதகன்னு இருப்பாளே. அவள் தானே..." சரவணன் ரசனையுடன் கூற...

"அப்போ அவள் என்னோட லவ்வர்டா..." தீபக்கின் குரல் கர்ஜனையாய் ஒலித்தது.

"என்னாது லவ்வரா...?" சரவணன் அதிர்ச்சியில் வாயை பிளந்தான்.

"ம்... நீ அவளோட பாய் பெஸ்ட்டி... அவள் கிட்ட என்னைப் பத்தி இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லி எங்க காதலை பிரிச்சுட்ட. அப்போ எப்படி வலிச்சது தெரியுமா?" என்ற தீபக்கை கண்டு நாற்காலியில் இருந்து எழுந்து அவனை நோக்கி வந்த சரவணன் அவனை அணைத்துக் கொண்டான்.

"தல, இப்போ புரியுது தல... காதலோட வலி என்னன்னு இப்ப புரியுது." என்று சரவணன் வராத கண்ணீரை வரவழைத்துக் கொண்டு அழுதான்.

"இப்போ புரியுதா? அதனால் தான் உங்க காதலை பிரிக்க நினைச்சேன். ஆனா உங்க லவ்வர் பயங்கர ஸ்ட்ராங். வேற ஒருத்தன் கிடைச்சும் உங்களைக் கழட்டி விடாம உங்களுக்காகப் பேசினா பாருங்க. நிலா ரொம்பவே கிரேட். இந்தக் காலத்து பொண்ணுங்க மத்தியில் நிலா ரொம்ப வித்தியாசமான பொண்ணு."

"ஆமா..." என்று சரவணன் வாயெல்லாம் பல்லானான்.

"எப்படியோ உங்க காதல் வெற்றி அடைஞ்சிருச்சு." தீபக் கூறியதும்,

"தீபக் சார், நான் வேணும்ன்னா அனு கிட்ட... சாரி சாரி அனுபமா கிட்ட பேசட்டுமா?"

"எப்படின்னு... உன் புருசன், குழந்தைகளை விட்டுட்டு வான்னா?"

"ஆங்... அனுபமாவுக்குக் கல்யாணமாகிருச்சா?"

"ஆமாம்..."

"விடுங்க சார்... உங்களுக்கு என்ன குறைச்சல்? உங்களுக்குன்னு ஒருத்தி உங்களுக்காகக் காத்திருப்பாள்."

"அட, நீங்க வேற... இப்போ சூப்பர் பிகர் ஒண்ணு செட்டாகி இருக்கு." என்று தீபக் கண்ணைச் சிமிட்ட...

"அடப்பாவி தீபக் சார்... உங்களுக்கு நான் என்ன பாவம் பண்ணினேன்? அதான் உங்களுக்கே உங்களுக்கு ஒரு ஆள் இருக்கே. பிறகு எதுக்கு இப்படி என் காதல்ல கும்மியடிக்கப் பிளான் பண்ணினீங்க?"

"காதலோட இழப்பு உங்களுக்குத் தெரிய வேண்டாமா சரவணன்?"

"அது என்னவோ உண்மை தான் சார். ஒவ்வொரு முறையும் நீங்க நிலா கூடச் சுத்தும் போது என்னோட பிபி தான் எகிறும்."

"அது நானே பார்த்தேனே... ஆனாலும் பாய் பெஸ்ட்டியா இருக்கிறது நல்லா கிக்கா தான் இருக்கு."

"அந்தக் கர்மம் எல்லாம் உங்களுக்கு எதுக்குச் சார்? நீங்க இப்படியே இருங்க..." சரவணன் கூறிக் கொண்டு இருக்கும் போது நிலா தீபக்கின் அறைக்கு வெளியே இருந்து கண்ணாடி வழியே உள்ளே பார்த்தாள். தீபக் அவளைக் கண்டு கொண்டு உள்ளே அழைத்தான். அதைக் கண்ட சரவணன் திரும்பி பார்த்தான். நிலாவை கண்டதும் அவனுக்கு உள்ளுக்குள் நடுங்க துவங்கியது. தீபக் அவள் முன் ஏடாகூடாமா எதையாவது கேட்டு விடக் கூடாதே என்று...

"வா நிலா... என்ன விசயம்?"

"நான் சரவணன் கிட்ட தனியே பேசணும்." என்றவள் சரவணனை பார்க்க... சரவணன் முகத்தில் பல்ப் எரிந்தது.

"ஓ தாராளமா..." தீபக் கூறியதும் தான் தாமதம்,

"வா சரவணா..." என்றவள் அவனது கையைப் பிடித்து அழைத்துச் செல்ல... சரவணனோ ஒருவித மயக்கத்துடன் அவளைப் பார்த்தபடி இணைந்து நடந்தான்.

வெளியில் வந்தவள் அவனது கையை விட்டு விட்டு, "வீட்டுக்கு போகலாமா?" என்று கேட்க...

"ஓ எஸ்..." என்றவன் தனது காரை எடுத்துக் கொண்டு வந்தான். அவள் காரிலேறியதும் அவன் காரை கிளப்பினான்.

வீடு வரும் வரை இருவரும் எதுவும் பேசவில்லை. கனத்த அமைதி இருவருக்கும் இடையில் நிலவியது. அவர்களது குடியிருப்பு வந்ததும் காரை நிறுத்திவிட்டு இறங்கியவர்கள் மின்தூக்கி மூலம் அவர்களது தளம் வந்தனர்.

"உன் வீட்டுக்கா? நம்ம வீட்டுக்கா?" 'நம்ம' என்று அவன் கூறியது கூட அவளுக்கு உறைக்கவில்லை.

"என்னோட வீட்டுக்கு..." என்றவள் இயந்திரகதியில் வீட்டின் கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றாள். அவனும் உடன் சென்றான்.

"உட்கார் சரவணா..." அந்த மனநிலையிலும் அவள் அவனை அமர சொல்ல... அவன் தான் அவளது மனநிலையைக் கணிக்கத் தவறி விட்டான்.

"சரவணா..."

"சொல்லு நிலா..."

"நான் உன் கிட்ட ஒண்ணு கேட்கணும். எனக்குப் பிரெண்ட்ஸ் அவ்வளவா கிடையாது. என்னோட பெஸ்ட் பிரெண்ட் நீ மட்டும் தான்."

"எதுவா இருந்தாலும் தயங்காம கேளு..." அந்த நொடி காதலன் சரவணன் நண்பன் சரவணனாக மாறிவிட்டான்.

"எனக்கு அடுத்த மாசம் கல்யாணம்." அவன் மனதிற்குள் சந்தோசப்பட்டான்.

"வாழ்த்துகள் நிலா..." என்று புன்னகையுடன் கூறியவனைப் பார்த்து,

"அது வந்து சரவணா..." அவள் தயக்கத்துடன் நிறுத்தினாள். அவளது தயக்கம் கண்டு அவனது புத்தியில் அப்போது தான் தீபக் கூறியது உறைத்தது.

'அடச்சே, இதை எப்படி மறந்தேன்?' அவன் மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டான்.

"சொல்லு நிலா..." அவன் ஊக்குவிக்க...

"நான் ஒருத்தரை காதலிக்கிறேன்."

"யாரு?" அவனுக்குள் சிறு நப்பாசை எழுந்தது.

"அது... அது வேண்டாம்." என்று அவள் சொல்ல மறுத்து விட்டாள். அந்த நொடி அவனது காதல் மனம் கனத்துப் போனது. அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. சிறிது நேரம் அமைதியாக இருந்தவன்,

"இப்போ நான் என்ன செய்யணும்? உன் காதலனோட உன்னைச் சேர்த்து வைக்கணுமா? இல்லை கல்யாணத்துக்குச் சாட்சி கையெழுத்து போடணுமா?" அவன் மனதினை திடப்படுத்திக் கொண்டு கேட்டான்.

"இல்லை அதெல்லாம் ஒண்ணும் செய்ய வேண்டாம். ஏனோ மனசுக்கு கஷ்டமா இருந்துச்சு. உன் கிட்ட சொன்னா கொஞ்சம் ஆறுதலா இருக்கும்ன்னு சொன்னேன்."

"அதுக்குன்னு உனக்குப் பிடிக்காத வாழ்க்கையை நீ ஏன் ஏத்துக்கணும்?" அந்த வாழ்க்கையே அவன் தான் என்றாலும் அந்தக் கணம் கூட அவன் அவளின் நலனை பற்றி மட்டுமே யோசித்தான்.

"பெண்ணாய் பிறந்தால் சில சென்ட்டிமெண்ட்க்கு கட்டுப்பட்டுத் தான் ஆகணும். விடு சரவணா..." அவள் துயரத்துடன் கூறியது கண்டு அவனது நெஞ்சு கலங்கியது.

"அப்படி ஒரு சென்ட்டிமெண்ட் தேவை இல்லை. நீ வா... நான் உன் காதலனுடன் சேர்த்து வைக்கிறேன். யாரவன்னு சொல்லு...?"

"இல்லை வேண்டாம்." அவள் பிடிவாதமாய் மறுத்தாள்.

"நிலா..." அவன் குரலை உயர்த்தினான்.

"இல்லை சரவணா... எனக்கு என் காதலை விடக் குடும்பம் முக்கியம். அவங்க சந்தோசம் முக்கியம்."

"அதுக்காக உன் சந்தோசத்தைக் குழி தோண்டி புதைக்கப் போறியா?" அவன் தனது சந்தோசத்திற்கு மூடுவிழா நடத்தி விட்டு அவளைப் பார்த்து கேட்டான்.

"ஆமா..."

"நீ வாயை திறக்கலைன்னா... நான் எல்லோர் கிட்டேயும் உன் காதலை சொல்லி கல்யாணத்தை நிறுத்திருவேன்." அவன் கோபமாய்க் கத்தினான்.

"சரவணா..." அவள் அவனை விட அதிகமாய்க் கத்தினாள்.

"நீ மட்டும் அப்படிச் செய்த... அடுத்த நொடி என் உடம்பில் உயிர் இருக்காது." அழுத்தமான குரலில் உறுதியாய் கூறியவளை கண்டு அவன் திகைத்துப் போனான்.

"நிலா, என்ன பேச்சு பேசுற?" அவன் அவளைக் கண்டித்தான்.

"ப்ளீஸ் சரவணா... என் மனசை யார் கிட்டேயாவது சொல்லணும்ன்னு நினைச்சேன். ஏன்னா மனசுக்குள்ளேயே காதலை வச்சிக்கிட்டு இருக்கிறது ரொம்பக் கஷ்டமா இருக்கு. அதான் உன் கிட்ட சொன்னேன். இப்போ கொஞ்சம் ரிலீஃப்பா இருக்கு."

"ஓ... காதலனை மறந்துட்டு வேற ஒருத்தனை கல்யாணம் பண்றது ரிலீஃப்பா இருக்கா?"

"என்னை நம்பிக்கை துரோகி, ஏமாத்துக்காரின்னு சொல்லுறியா சரவணா...?" அவள் அடிப்பட்ட பார்வையுடன் அவனைப் பார்த்தாள்.

"அது அப்படி இல்லை நிலா..."

"நான் என் கணவனுக்கு உண்மையா இருப்பேன் சரவணா. இது சத்தியம்." என்றவள் விழிகள் கலங்க எழுந்து அறைக்குச் சென்றுவிட்டாள்.

அதற்கு மேல் அங்கு இருக்க முடியாது சரவணனும் தனது வீட்டிற்கு வந்தான். கனத்த மனதுடன் பால்கனியில் அமர்ந்தவனின் மனம் பழைய நினைவுகளை நோக்கி பயணித்தது. அங்கே கட்டிலில் படுத்திருந்த நிலாவும் பழைய நினைவுகளைத் தான் அசை போட்டு கொண்டிருந்தாள்.

நான்கு வருடங்களுக்கு முன்பு...

நிலா பனிரெண்டாவது பரீட்சையில் நல்ல மதிப்பெண்கள் எடுத்துத் தேர்ச்சி பெற்றிருந்தாள். பள்ளியில் இருந்து வீடு வரும் வரை எல்லோரிடமும் தான் தேர்ச்சி பெற்ற விசயத்தைக் கூறி சந்தோசமாய் வந்து கொண்டிருந்தாள். வீட்டிற்கு நுழைந்ததும்,

"ஆத்தா, நான் பாசாகிட்டேன்." என்று கத்தியபடி அன்னையைப் பின்புறம் இருந்து அணைத்து கொண்டாள்.

"என் செல்லம்..." என்று மகளை நெட்டி முறித்த அஞ்சலை சமையலறையில் இருந்த கருப்பெட்டியை உடைத்து மகளது வாயில் வைத்தார்.

"அம்மா, எனக்கு..." என்றபடி வந்த துர்கா, மீனாவுக்கும் கருப்பெட்டியை உடைத்து கொடுத்தார்.

"அம்மா நாளைக்குப் போய்க் காலேஜ் அப்ளிகேசன் வாங்கணும்..."

"வாங்கிட்டு வா நிலா... பொம்பளை பிள்ளைங்களுக்குப் படிப்பு தான் முக்கியம்." அஞ்சலை மகளது படிப்பிற்குப் பச்சை கொடி காட்டினார். மாலையில் வீட்டிற்கு வந்த மாரிமுத்து மகளது தேர்ச்சி கேட்டு மகிழ்ந்தார். அவரும் கல்லூரி படிப்பிற்கு ஊக்குவித்தார்.

மறுநாள் கல்லூரி சென்று விண்ணப்ப படிவத்தை வாங்கிக் கொண்டு வந்த நிலா, வீட்டினுள் இருந்து வந்த பேச்சுச் சத்தத்தில் அப்படியே நின்றாள்.

"மாரிமுத்து, சொல்றேன் தப்பா நினைக்காதே. இப்போ உன் குடும்பம் இருக்கும் சூழ்நிலையில் நீ நல்ல முடிவு எடுக்கிறது நல்லது." அதைக் கேட்டு அவளுக்கு எரிச்சல் வந்தது. என்ன பேச்சு இது என்று...

"நிலாவுக்கு இப்போ தான் பதினெட்டு வயசாகுது." மாரிமுத்து தயங்கினார்.

"பதினெட்டு வயசு சின்ன வயசு இல்லை. கல்யாணத்துக்குச் சரியான வயசு தான்." வந்திருந்தவர் கூற...

"ஆமாங்க, நல்ல சம்பந்தம் வரும் போது சட்டுபுட்டுன்னு முடிச்சிரணும்ங்க." அஞ்சலை ஒத்து ஊதினார். அதைக் கேட்டு அவளுக்கு அத்தனை கோபம் வந்தது. 'இந்த அம்மாவை...' என்று கோபத்தில் பல்லை கடித்தாள்.

"இருந்தாலும்..." மாரிமுத்து அப்போதும் தயங்கினார்.

"எனக்குக் கல்யாணத்தில் விருப்பம் இல்லை... நான் மேலே படிக்கப் போறேன்." என்றபடி உள்ளே வந்தவள் திட்டவட்டமாகக் கூற...

"என்னம்மா, கொஞ்சமும் மட்டு மரியாதை இல்லாம இப்படித்தான் பேசுவதா?" அந்தப் பெரியவர் அவளைச் சத்தம் போட...

"எனக்கு ஆபிசர்... கல்யாணத்தில் ஆபிசர்... விருப்பம் ஆபிசர்... இல்லை ஆபிசர்... போதுமா இந்த மரியாதை." என்று கேட்டவளை கண்டு அவர் எழுந்துவிட்டார்.

"உன் வீடு தேடி வந்ததுக்கு நல்ல மரியாதை கொடுத்துட்ட மாரிமுத்து." என்று கோபமாக உரைத்தவர் அங்கிருந்து செல்ல...

"மாமா இருங்க..." மாரிமுத்து அழைக்க அழைக்க... அவர் நிற்காது சென்றுவிட்டார்.

"என்னடி திமிர் கூடி போச்சா?" அஞ்சலை மகளைக் கண்டு சத்தம் போட்டார்.

"நம்ம குடும்ப நிலைமையைப் பேசுறதுக்கு இந்தாளு யாரு? அதைச் சாதகமா பயன்படுத்திட்டு கல்யாணத்துக்கு வலை வீசுறான்."

"பெரியவங்களை மரியாதை இல்லாம பேச கூடாது நிலா." மாரிமுத்து அவளைக் கடிந்தார்.

"பெரியவங்க பெரியவங்க மாதிரி நடந்துக்கணும்." நிலா அலட்சியமாய்ச் சொன்னாள்.

"நம்ம குடும்ப நிலைமை ஊர் அறிந்தது தானே..." அஞ்சலை அவளைத் திட்ட... அவளோ காதில் ஏறாதவளாகச் சென்றுவிட்டாள்.

"பாருங்க... எப்படிப் போறான்னு...?"

"விடு, சின்னப் பொண்ணு தானே."

"அவள் சொல்றது ஒரு பக்கம் இருக்கட்டும். நீங்க என்ன நினைக்கிறீங்க?"

"அது வந்து..."

"எதுக்கு வந்து போயின்னு இழுத்துட்டு... நிலாவை கல்யாணத்துக்குப் பிறகு படிக்க வைக்கிறேன்னு சொல்றாங்க. நல்ல பையன், சொந்தமா தொழில் பண்றான். அதைவிட ஊர் நாட்டாமை குடும்பம். அவங்க வீட்டு மருமக நம்ம பொண்ணுன்னா எவ்வளவு பெரிய பெருமை தெரியுமா?" அஞ்சலை விழிகளில் கனவு படர்ந்தது.

"அதைவிட இன்னொண்ணு சொன்னாங்களே... நம்ம மற்ற இரண்டு பொண்ணுங்களும் அவங்க பொறுப்புன்னு..." மாரிமுத்து சிரித்தபடி எடுத்து கொடுத்தார்.

"நான் அடுத்தவங்களை நம்பி என் பொண்ணுங்களைப் பெத்துக்கலை. என் புருசனை நம்பி தான் பெத்தேன்." அஞ்சலை நொடித்துக் கொள்ள...

"ஹா ஹா..." என்று மாரிமுத்துப் பெருமையாக மீசையை நீவி விட்டுக் கொண்டார்.

"அந்த நம்பிக்கை இருக்குல்ல... அப்புறம் என்னம்மா? நான் படிச்சு முடிச்சு நம்ம குடும்பத்தைப் பார்த்துக்குவேன்." என்றபடி நிலா அங்கு வந்தாள்.

"என்னவோ போடி... நல்ல சம்பந்தத்தை விட்டுட்டோமேன்னு கவலையா இருக்கு." என்ற அஞ்சலை சமையலை பார்க்க சென்றார்.

"நிலா, இங்கே வா..." தந்தை அவளை அழைக்க...

"பையன் பெயர் சரவணன்..." அவர் வரனை பற்றித் தான் பேச போகிறார் என்பதை அறிந்து அவள் அவனது பெயரை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஆனால் கேட்பது போல் அமைதியாக இருந்தாள்.

"நல்ல பையன்டா..."

"சரிப்பா..."

"கல்யாணம் பண்ணிக்கிறியா?"

"வேண்டாம்ப்பா, ப்ளீஸ்..." அதற்கு மேல் அவரால் மகளை வற்புறுத்த முடியவில்லை. ஏழ்மையில் இருந்தாலும் அவரது மகள் அவருக்கு இளவரசி அல்லவா!

நிலா வீட்டில் போய்ப் பேசிய அந்த மனிதர் நிலா திருமணத்திற்குச் சம்மதிக்கவில்லை. எவ்வளவோ கெஞ்சி பார்த்தும் அவள் திமிராகப் பேசியதாகச் சொக்கனிடம் போட்டு கொடுத்தார். அவ்வளவு தான் சொக்கனுக்கு இரத்தம் கொதித்தது.

"அந்த அன்றாடங்காய்ச்சிக்கு என் மகனை கல்யாணம் பண்ண பிடிக்கலையாக்கும்." என்று அவர் கோபத்தில்

சத்தம் போட்டார்.

"அப்பா... நிலாவை தப்பா சொல்லாதீங்க. உங்க மகன் உங்களுக்கு உசத்தியா இருக்கலாம். அதுக்காக அடுத்த வீட்டுப் பொண்ணைத் தப்பா பேசாதீங்க." என்றவனின் கலக்கம் விழிகளில் தெரிந்ததை அந்தத் தந்தை கண்டு கொண்டார்.

அன்றே சரவணன் சென்னைக்குக் கிளம்பி சென்றுவிட்டான். சொக்கனுக்குக் கோபம் இருந்த போதும் மகனின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அமைதியாகி போனார். ஆனால் ஊர் வாயை மூட முடியுமா? ஆளாளுக்கு ஒன்றை புறணி பேசினர். எல்லாமே சரவணனை பற்றித் தவறாகப் பேசியது சொக்கனின் ஆத்திரத்தை தூண்டிவிடப் போதுமானதாய் இருந்தது. அவ்வளவு தான் அவர் பொங்கி எழுந்து விட்டார். நேரே மாரிமுத்துவை தேடி சென்றுவிட்டார்.

"டேய் மாரிமுத்து, வெளியே வாடா..." அவர் மாரிமுத்து வீட்டு வாசலில் இருந்து கத்த துவங்கினார். மாரிமுத்து வெளியில் வரவும் பிடித்துக் கொண்டார்.

"உம் பொண்ணால ஊரான் எல்லாம் என் மகனை பத்தி நாக்குல நரம்பு இல்லாம பேசுறாங்க. இதுக்கு நீ ஒரு பதிலை சொல்லியே ஆகணும்." சொக்கன் கோபமாய் இரைந்தார்.

மாரிமுத்துவும் விசயம் கேள்விப்பட்டு வருத்தப்பட்டார். ஆனால் ஊர் வாயை மூட முடியுமா?

"தெரியாம நடந்த தப்பு. என்னை மன்னிச்சுக்கோங்க." அப்படி இருந்தும் மாரிமுத்து இந்த இடத்தில் பணிந்து போனார். ஏனெனில் தவறு அவரது மகள் மீது இருக்கிறது அல்லவா...!

"மன்னிப்பு கேட்டா எல்லாம் சரியாகிருமா? உம் பொண்ணால எம் மகன் அவமானம் தாங்காம ஊரை விட்டு போயிட்டான். உம் பொண்ணு என் மகனை கல்யாணம்

பண்ணிக்காததுக்குக் காரணம் என்னன்னு நான் சொல்லவா?" அதற்கு மாரிமுத்து அமைதியாக நிற்க...

"உம் பொண்ணு எவனையோ காதலிக்கிறாள்... அதான் எம் மகனை கட்டிக்கக் கசக்குது. அந்த உண்மையைச் சொல்லிட்டு போக வேண்டியது தானே. அதை விட்டுட்டு எம் மகனை ஆம்பளை இல்லைன்னு சொல்லுவாங்களோ... இனி சொல்லி பாருங்கடா." என்று சொக்கன் ருத்ர தாண்டவம் ஆடி விட்டார்.

எல்லோர் முன்னும் மாரிமுத்துவும், அவரது மனைவியும் தலைகுனிந்து நின்றனர். சரவணனை பேசிய அதே ஊர் நாக்கு இப்போது நிலாவை பேசியது. அதைக் கேட்டு மாரிமுத்துவும், அஞ்சலையும் கூனிக்குறுகி போய்விட்டனர். சொக்கன் சென்றதும் இருவரும் வீட்டினுள் சென்று முடங்கினர். மாரிமுத்து அன்று வேலைக்குச் செல்லவில்லை. நிலா அவளது தோழி வீட்டிற்குச் சென்று இருந்தாள். மற்ற இருவரும் ட்யூசன் சென்று இருந்தார்கள்.

"அம்மா..." என்றபடி நிலா உற்சாகமாக வந்தாள்.

அவ்வளவு தான் அஞ்சலைக்கு எங்கிருந்து தான் ஆத்திரம் வந்ததோ...! எழுந்து விறுவிறுவெனச் சமையலறைக்குச் சென்றவர் கரண்டியை அடுப்பில் வைத்தார்.

"அப்பா, என்ன ஒண்ணும் பேச மாட்டேங்கிறீங்க? வேலைக்குப் போகலையா." நிலா தந்தையிடம் கேட்க...

"ப்ச், போகலை. ஒரே தலைவலியா இருக்கு. அம்மா கிட்ட போய்க் காபி வாங்கிட்டு வா..." மாரிமுத்து சொல்லவும் அவள் சமையலறையை நோக்கி சென்றாள்.

அவள் சென்ற சிறிது நேரத்தில் அவள் ஆவென்று அலறிய சத்தம் கேட்டு மாரிமுத்துப் பதறியடித்துக் கொண்டு ஓடினார். அங்கு அவர் கண்ட காட்சியில் அவரது இதயம் நின்று துடித்தது. நிலா காலில் சூடு வாங்கியபடி துடித்துக் கொண்டிருந்தாள். அஞ்சலை கோபத்துடன் கையில் கரண்டியுடன் அவளைப் பார்த்திருந்தார்.

"அஞ்சலை..." என்று கத்தியவர் வேகமாய் வந்து அவரது கையிலிருந்த கரண்டியை பிடுங்கி தூர வீசினார்.

"ப்பா..." என்று கண்ணீருடன் அரற்றியவளை கண்டு மாரிமுத்து கலங்கியபடி அவளை அணைத்துக் கொண்டு அங்கிருந்த நாற்காலியில் அமர வைத்துவிட்டு வெளியில் சென்று மருந்து எடுத்து வந்து பூசினார்.

"ப்பா, எரியுது..." கண்ணீருடன் தேம்பிய மகளைக் கண்டு அவரது மனம் துடித்தது.

"எரியுதா? நல்லா எரியட்டும்டி... என் மனசு அதை விட அதிகமா எரியுது. உன்னால இன்னைக்கு ஊரார் முன்னாடி நாங்க தலைகுனிஞ்சு நின்னோம். உன்னைப் பெத்த பாவத்துக்கு நாங்க தலைகுனியறது சரி. ஆனா அந்தப் பையன் என்னடி பாவம் பண்ணினான்?"

"யாரும்மா?" அவள் தேம்பி கொண்டே கேட்டாள்.

"போயும் போயும் உன்னை பொண்ணுக் கேட்டு வந்தானே அந்த அப்பாவியைச் சொல்றேன். நீ வேண்டாம்ன்னு சொன்ன பாவத்துக்கு அவனைப் போய் ஆம்பளை இல்லைன்னு எல்லோரும் சொல்றாங்க. அந்த அவமானம் தாங்காம அவன் ஊரை விட்டு போயிட்டான். இந்தப் பாவம் உன்னைச் சும்மா விடாதுடி." ஊரார் முன் தனது மகளைத் தவறாகப் பேசிய சொக்கனின் பேச்சை கூட அஞ்சலை விட்டு விட்டார். இதற்குக் காரணமான மகளின் செயலை தான் அவர் கண்டித்தார்.

அஞ்சலை சொன்னது கேட்டு நிலா ஸ்தம்பித்துப் போனாள். தனது துடுக்குத்தனத்தால் ஒருவனைத் தீராத பழிச்சொல்லிற்கு ஆளாக்கி விட்டாள். அந்தக் கணம் அவன் காற்றைப் போல் அவளது மனதில் நுழைந்தான். ஏனென்று தெரியவில்லை, அவனால் அவளுக்கு ஏற்பட்ட சூட்டுப்புண் கூட அவளுக்கு வலிக்கவில்லை. தனக்கு இந்த வலி தேவை தான் என்று ஏற்றுக் கொண்டாள்.

'சாரி, ஐயம் ரியலி சாரி...' மென்மையான மனம் கொண்ட மெல்லியாள் மனம் வருந்தினாள்.

இரக்கத்தில் தோன்றிய உணர்வு நாள் செல்ல செல்ல... காதலாக மாறிப் போனது. அது அவளுக்கு மட்டுமே பத்திரமாகவும் போனது.

அதற்கு அடுத்த வந்த நாட்களில் ஊரார் நிலாவை பற்றித் தவறாகப் பேச... அவளது பெற்றோருக்கு மகளைப் பற்றி நன்கு தெரியும். ஆனால் இதனால் நிலாவுக்கும், அவளை வைத்து மற்ற இரு பெண்களுக்கும் பிரச்சனை வருமோ என்று இரவோடு இரவாக வீட்டை காலி செய்துவிட்டு கிளம்பினர். இதைச் சற்றுத் தாமதமாகத் தான் சரவணன் தெரிந்து கொண்டான். அடுத்து வந்த நாட்களில் அவன் அவர்களைத் தேடி அலைந்தான். சில மாதங்களுக்குப் பிறகு மாரிமுத்து வேலை செய்யும் நிறுவனத்தின் முகவரி அறிந்து அங்குச் சென்று பார்த்தான். அவர் மூலம் எல்லா விசயங்களையும் அறிந்தான். நிலா தன்னால் சூடு வாங்கியது கேட்டு அவன் மிகவும் வருந்தினான். பிறகு நிலா மேலே படிக்க வேண்டி தான் திருமணத்தை மறுத்ததைத் தெரிந்தவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது.

"இனி நிலா படிப்பு மட்டுமல்ல... அவளே என் பொறுப்பு மாமா." என்று அவளது படிப்புச் செலவு அனைத்தையும் அவன் ஏற்றுக் கொண்டான். அன்றிலிருந்து இன்று வரை அவளது ஒவ்வொரு விசயமும் அவனுக்கு அத்துப்படி. சரவணன் உதவுவது அஞ்சலைக்குத் தெரியாது. தெரிந்தால் எதுவும் சொல்வாரோ என்று மாரிமுத்து மறைத்து விட்டார்.

இப்படியாக நம்பிக்கையுடன் வளர்ந்த சரவணனது காதல் நிலாவின் காதலால் தடுமாறி நிற்கின்றது. ஆனால் அவனுக்குத் தெரியவில்லை, அவளது ரகசிய காதலன் அவன் தான் என்று... இருவருக்கும் விதி என்ன வைத்து காத்திருக்கிறதோ!!!

தொடரும்...!!!

# அத்தியாயம் : 9

சரவணனும், நிலாவும் திருமணத்திற்காக ஊருக்கு கிளம்பினர். உடன் குணா, வம்சி திருமணத்திற்காக வந்தனர். அன்று சரவணனிடம் பேசிய கையோடு தீபக் மும்பைக்குச் சென்றுவிட்டான். அவன் இனி இவர்களது வாழ்வில் வர போவது இல்லை.

சரவணன் தான் மாப்பிள்ளை என்று நிலாவுக்கு இன்னமும் தெரியாது. இன்னும் இரண்டு நாட்களில் திருமணம். முன்பே வர சொன்ன தந்தைக்கு அவள் ஏதேதோ சாக்கு போக்கு சொல்லி சமாளிக்க... அவளது மனவருத்தம் அறிந்த சரவணன் அவள் போக்கில் விடச் சொல்லி மாரிமுத்துவிடம் கூறிவிட்டான். மருமகன் பேச்சிற்கு மறுபேச்சு அவர் பேசவில்லை. அவனும் திருமணம் தொடர்பான எந்தவொரு நிகழ்விலும் கலந்து கொள்ளவில்லை. இருவரும் இல்லாது உடை எடுப்பது முதல் சாமி கும்பிடுவது வரை இரு குடும்பத்தினரும் சேர்ந்து செய்து முடித்தனர். சரவணனின் இரு சகோதரிகளும் வந்திருந்தனர். அமராவதி அமைதியாக இருக்க... கலாவதி தான் அங்கலாய்த்தாள்.

"பொன்னு உருக்குறதுக்குக் கூட வராம அப்படி என்ன சோலி இருக்கு?" தம்பி வராததைக் கண்டு கொள்ளாத கலாவதி நிலா இல்லாததைக் குத்தி காட்டினாள்.

"கலா, தெக்கால இருக்கிற பத்து ஏக்கர் நிலம் உனக்கு வேணுமா? இல்லையா?" சொக்கன் குரல் கொடுக்கவும் கலாவதி அப்படியே பம்மி விட்டாள். சொத்து முன் சொந்தம் எதற்கு?

ஊரை நெருங்கியதும் சரவணன் காரை நேரே நிலாவின் வீட்டை நோக்கி ஓட்டினான். ஊர் வந்ததோ, வீடு வந்ததோ தெரியாது தனக்குள் மூழ்கி இருந்தாள் நிலா. அவளைக் காணவே அவனுக்குப் பாவமாக இருந்தது.

"நிலா..." அவன் அவளை மெல்ல அழைத்தான்.

"ஆங்..." அவள் தூக்கத்தில் இருந்து விழிப்பது போல் திடுக்கிட்டு விழித்தாள்.

"உங்க வீடு வந்திருச்சு..."

"ம்..." என்றவள் தனது உடமைகளை எடுத்துக் கொண்டு இறங்க...

அவளது குடும்பம் ஓடி வந்து வரவேற்றது. சரவணன் ஏற்கெனவே சொல்லி வைத்திருந்தால் அவனைப் பற்றி அறிமுகம் இல்லாதவர்கள் போல் நடந்து கொண்டனர். சிறிது தூரம் குடும்பத்துடன் நடந்து சென்றவள் அப்போது தான் ஞாபகம் வந்தவளாய் சரவணனை நோக்கி ஓடி வந்தாள். அவன் காரை கிளப்பாது அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன நிலா? ஏதாவது மறந்து வச்சிட்டியா?"

"இல்லை சரவணா... என் கல்யாணத்துக்காக எல்லோரும் வந்திருக்கீங்க. எங்க தங்குவீங்க... நானும் இதைப் பத்தி யோசிக்காம வந்துட்டேன்." அவள் கேட்டதற்கு என்ன பதில் சொல்வது? என்று சரவணன் யோசித்துக் கொண்டிருக்கும் போது மாரிமுத்து அங்கு வந்து அவனைக் காப்பாற்றினார்.

"நம்ம நாட்டாமை வீட்டில் தங்க ஏற்பாடு பண்ணி இருக்கேன் நிலா. நீ கவலைப்படாம இரும்மா."

"தேங்க்ஸ்ப்பா..." அவள் சிறு புன்னகையுடன் கூற...

"அப்போ நான் வர்றேன்..." என்ற சரவணன் காரை கிளப்பிக் கொண்டு தனது வீட்டினை நோக்கி சென்றான்.

"பங்கு, இப்பவே நீ தான் மாப்பிள்ளை சொல்லிரு. அப்படிச் சொன்னேன்னா சேதாரம் கொஞ்சம் கம்மியா இருக்கும்." குணா சொல்ல...

"ப்ச், நீ வேற சும்மாயிருடா..." சரவணன் சலித்துக் கொண்டான்.

"குணா..." வம்சி குணாவை கண்டித்தான். குணாவும் வாயை மூடி கொண்டான்.

சரவணன் வீட்டில் அவனுக்கு அப்படியொரு வரவேற்பு. வம்சி சரவணனின் சின்ன அக்கா மகன் ரஞ்சனுடன் ஐக்கியமாகி விட்டான். குணாவின் விழிகள் அஞ்சலியை தேடியது. முற்றத்துத் தூணில் சாய்ந்தபடி அவள் ஜிலேபி உண்டு கொண்டு இருந்ததைக் கண்டு அவன் அங்கே சென்றான்.

"அஞ்சு..." என்றழைத்தபடி அவன் அவள் முன்னே குதித்துக் குத்துக்காலிட்டு அமர்ந்தான்.

"ஆ..." என்றவளின் வாயிலிருந்த ஜீலேபி அவனது முகத்தின் மீது தெறித்தது. அவனது உதடுகள் மீது தெறித்த ஜிலேபியை நாவால் எடுத்து சுவைத்தவன்,

"ஜீலேபி ஏன் இனிக்குது தெரியுமா?" என்று அவளிடம் கேட்க...

"ஏன்?" அவள் இன்னமும் அதிர்ச்சி விலகாது கேட்க...

"நீ சாப்பிட்டதால்..." என்று கூறி அவன் சிரிக்க...

"துப்பியதால்..." என்றவள் கலகலவெனச் சிரித்தாள்.

"அஞ்சும்மா, ஏன் மெலிஞ்சு போயிட்ட? மாமனை பார்க்காமலா?"

"ஆமா, சீக்கிரம் என்னைக் கல்யாணம் பண்ணிக்கோங்க."

"எங்கே? உன் மாமன் நந்தி மாதிரி நின்னுட்டு என் உயிரை வாங்குறான்."

"அதான் மாமா கல்யாணம் தான் முடிய போகுதே..."

"அடுத்த முகூர்த்தத்தில் நம்ம கல்யாணத்தை வைக்கச் சொல்லலாம். நீ கவலைப்படாதே."

"நான் எங்கப்பா கிட்ட சொல்றேன்."

"யாரு? அந்த மிக்சர் மாமா கிட்டேயா?"

"குணா..." அவன் தந்தையைக் கிண்டலடித்த கடுப்பில் அஞ்சலி பல்லை கடிக்க...

"எப்பப்பாரு அரைச்சிக்கிட்டே இருந்தா... அதான் மிக்சர் மாமான்னு சொன்னேன். ஆனா இந்தப் பெயரை நான் வைக்கலை. உன் மாமன் தான் வச்சான்." என்றவன்,

"விடு ஜூட்..." என்று தப்பித்து விட்டான். அஞ்சலி கோபத்தில் இன்னும் இரண்டு ஜாங்கிரியை வாயில் வைத்து அடைத்தாள்.

சரவணன் தனது அறையில் சோகமாய் அமர்ந்திருந்தான். அவனுக்குக் காபி கொண்டு வந்த பொன்னுத்தாய் அவனது வாடிய முகத்தைக் கண்டு பதறிப் போனார்.

"சரவணா, முகத்துல சந்தோசமே இல்லையே. என்னாச்சுடா?" அவர் கவலையுடன் கேட்டார்.

"ஒண்ணும் இல்லைம்மா..." என்றவன்,

"அம்மா, மடியில் படுத்துக்கவா?" என்று கேட்க...

"தாராளமா படு... ஆனா அதுக்கு முன்னே காபி தண்ணி குடிச்சிட்டு படு..." என்றவர் மகன் காபி அருந்திய பிறகே மடியில் படுக்கச் செய்தார். தாயின் இதமான வருடலில் மனக்கிலேசம் மறைந்து சரவணன் நிம்மதியுடன் உறங்கினான்.

நிலா பெருத்த அமைதியுடன் இருப்பதைக் கண்டு அஞ்சலையின் அடிவயிறு கலங்கியது. மணப்பெண்ணுக்கான மலர்ச்சி மகளின் முகத்தில் இல்லாததை அறிந்து வேதனை உற்றவராய் அவளை நாடி சென்றார்.

"நிலா..." ஜன்னல் வழியே வெளியில் பார்த்திருந்த நிலா அன்னையின் அழைப்பில் திரும்பி பார்த்தாள்.

"என்னம்மா ஒரு மாதிரியா இருக்க...?" அன்னை கேட்டதும் சட்டென்று தனது முகத்தை மலர்ச்சியாக வைத்து கொண்டவள்,

"ரொம்ப வருசம் கழிச்சு நம்ம ஊருக்கு வந்திருக்கிறோம் இல்லையா. அதுவும் இந்த வீடு... நான் பிறந்து வளர்ந்த வீடு." எதையோ சொல்ல வந்தவள் நிறுத்திவிட்டு,

"அதான் ஒவ்வொண்ணையும் ரசிச்சு பார்த்துட்டு இருக்கேன். அதோ அந்த வேப்ப மரம் என்னோட மூணாவது பிறந்தநாளுக்கு வச்சது ஞாபகம் இருக்காம்மா?" சந்தோசமாக மகள் பேசியதை கண்டு அந்த அன்னை நம்பி விட்டார்.

"ஆமா நிலா..." என்று அவரும் புன்னகையுடன கூறினார். பின்பு,

"நிலா, அம்மா மேல வருத்தம் இல்லையே." என்று கேட்க...

"எதுக்கும்மா?"

"உன் காலில் சூடு வச்சது..." அன்னை சொன்னதும் மனதில் அவனது ஞாபகம் நிழலாடியது. முயன்று ஒதுக்கியவள்,

"ப்ச், நான் செஞ்சதும் தவறு தானே. விடும்மா." என்றாள்...

"கல்யாணமானா எல்லாம் சரியாகிரும் நிலா. மாப்பிள்ளை தம்பி உன்னை நல்லா வச்சுக்குவார்."

"ம், ம்..." வெறுமனே உம் கொட்டிய மகளை ஆதூரமாகப் பார்த்தவர்,

"கொஞ்சம் தூங்கி ஓய்வெடு. சாயங்காலம் ப்யூட்டி பார்லரில் இருந்து ஆள் வர்றாங்க." என்க...

"எதுக்கும்மா?"

"நீ கல்யாண பொண்ணுங்கிறதை அப்பப்போ மறந்தர்ற ..." என்றவர் சென்று விட்டார்.

நிலாவின் நினைவுகள் மீண்டும் அவனிடத்தில்... முகமறியா ஒருவன் அவள் அகம் தொட்டதை நினைத்து கொண்டிருந்தாள்.

'என்ன நிலா இது? உனக்கே நீ நினைக்கிறது பைத்தியக்காரத்தனமா இல்லை. உன்னைப் பொண்ணு கேட்டு வந்தான். நீ கல்யாணம் வேண்டாம்ன்னு சொன்ன. ஆனா அதைத் திரிச்சு பொய் சொன்னது ஊர் ஜனங்க. அதில் அவமானம் தாங்காம அவன் ஊரை விட்டு போயிட்டான். அதுக்கு நீ என்ன பண்ணுவ?' அவளது மனசாட்சி கேள்வி கேட்டது.

"என்னால் தானே..." அவள் குற்றவுணர்வில் மருகினாள்.

'சரி, அப்படியே இருக்கட்டும். அதுக்காக அவனைக் காதலிப்பியா? இந்நேரம் அவன் உன்னை மறந்துட்டு வேற பொண்ணைக் கல்யாணம் பண்ணிட்டு நிம்மதியா வாழ்ந்திட்டு இருப்பான்.'

"இருக்கலாம்... ஆனா அவனுக்காக நான் காத்திருந்தது அவன் மீதான களங்கத்தைத் துடைக்க..."

'இப்போ என்ன பண்ணப் போற?'

"ப்ச், ஒண்ணும் தெரியலை."

'குட், கொஞ்சம் தூங்கி எழுந்திரு. எல்லாம் சரியாகும்.'

நிலா குழப்பத்துடனே உறங்கி போனாள். மதிய உணவிற்குக் கூட எழவில்லை. யாரும் அவளைத் தொந்தரவு செய்யாது அஞ்சலை பார்த்துக் கொண்டார். மாலையில் எழுந்தவளுக்கு மேலே சிந்திக்க முடியாதபடி உறவினர் கூட்டம் சூழ்ந்து கொண்டு கலாட்டா செய்து கொண்டிருந்தது. பிறகு அழகு நிலையத்தில் இருந்து வந்து மருதாணி போட அழைத்தார்கள். தப்பித்தோம் பிழைத்தோம் என்று அவள் அங்கே ஓடிவிட்டாள்.

சரவணனும் எதிலும் ஒட்ட முடியாத மனநிலையுடன் சுற்றிக் கொண்டிருந்தான். திருமணத்திற்கு முதல் நாள் வரை

யோசனையுடன் சுற்றிக் கொண்டு இருந்தவன் திருமணத்திற்கு முதல் நாள் இரவு ஒரு முடிவுடன் மாரிமுத்துவுக்கு அழைத்தான்.

"மாமா, நான் நிலா கூடக் கொஞ்சம் பேசணும். தனியா, அதுவும் இப்பவே..."

"இப்ப வீடு முழுசும் சொந்தக்காரங்க இருக்காங்களே மாப்ள." என்று யோசித்தவர்,

"சரிங்க மாப்ள, வந்து பேசுங்க. நீங்க வீட்டுக்குள்ளே வராம மொட்டை மடியில் போய் இருங்க. நான் நிலாவை அனுப்பி வைக்கிறேன்."

சொன்னது போல் சரவணன் அங்கு வர... மாரிமுத்து அவனை மாடியில் காத்திருக்கச் சொல்லிவிட்டு நிலாவிடம் வந்து விசயத்தைக் கூறிவிட்டுச் சென்றுவிட்டார். அவள் செய்வதறியாது கைகளைப் பிசைந்தாள். அப்போது அங்கே அவளது தங்கைகள் வந்தார்கள்.

"நிலா, நாளைக்கு என்ன ஹேர்ஸ்டைல் பண்ணினால் நல்லா இருக்கும்?" அவர்கள் கேட்ட கேள்வி அவளது காதுகளில் விழவில்லை.

"நிலா..." இருவரும் உரக்க கத்தினர்.

"ஆங்... என்னங்கடி?"

"என்ன யோசனை? மாம்ஸ் கூட ட்ரீம்ஸா?" மீனா குறும்பாய் கண்சிமிட்டினாள்.

"மீனா..." நிலா தங்கையை முறைத்தாள்.

"நிலா, என்ன பிரச்சனை?" துர்கா அக்காவின் முகத்தை வைத்து அவளது பிரச்சனையைக் கணித்தாள்.

"அவர் என் கிட்ட பேசணும்ன்னு சொல்றாராம். என்ன பேச துர்கா? எனக்கு பயமாயிருக்கு." நிலாவிற்கு உண்மையில் பயத்தில் வியர்த்து வழிந்தது.

"பாருடா, துடுக்குத்தனமான நிலா பயப்படுகிறதே... அடடே ஆச்சரியக்குறி!!!" மீனா அக்காவை கலாய்த்தாள்.

"நிலா, மாமாவை பார்த்து பேச என்ன பயம்?" துர்கா ஆதரவாகக் கேட்டாள்.

"இல்லை... அவரை முன்னே பின்னே பார்த்தது இல்லை. எனக்கு அவர் புதுசு. தெரியாத, அறியாத மனிதர்." நிலா மீண்டும் கைகளைப் பிசைந்தாள்.

"ஆனா அவருக்கு நீ தெரிந்த, அறிந்த மனுசி தான்." மீனா விசம சிரிப்பு சிரித்தாள்.

"என்னடி சொல்ற?" நிலா குழப்பத்துடன் கேட்க...

"நிலா, முதல்ல உன்னைப் பெண் கேட்டு வந்தாரே அவர் தான் இவர்..." துர்கா கூறியதை கேட்டு முதலில் திகைப்படைந்த நிலா அப்படியே கட்டிலில் அமர்ந்தாள். பிறகு மெல்ல மெல்ல அவளது மனதில் மகிழ்ச்சியும், நிம்மதியும் குடியேறியது. மனம் கவர்ந்தவனே மணாளனாக வந்தால் சந்தோச ம் தானே...

"அப்படிச் சொல்ல கூடாது துர்கா... இரு நானே சொல்றேன்." என்று தொண்டையைக் கனைத்துக் கொண்ட மீனா,

"மாமா உன்னை ஏழு வருசமா லவ் பண்றாராம். அதாவது நீ பத்தாவது படிக்கும் போது இருந்தே . நீ ப்ளஸ்டூ படிச்சு முடிச்சப்போ அவரோட வீட்டில் கல்யாண பேச்சு எடுத்தாங்களாம். அதனால அவர் வீட்டில் உன்னைப் பத்தி சொல்லி இருக்கார். அவங்களும் சரின்னு சொல்லி பெண் கேட்டு வந்தாங்க. அதுக்குப் பிறகு நடந்தது தான் உனக்குத் தெரியுமே." என்று அவள் கூற... நிலா மௌனமாகி போனாள். தன்னால் அவனுக்கு நேர்ந்த அவமானங்கள் அவள் கண்முன்னே வந்து போனது. எந்த ஆணுக்கும் கோபம் வரும் வார்த்தைகள் அல்லவா அது...!

"உன்னால் ஊரே அவரைத் தப்பா பேசியப்போ கூட அவர் உன்னை வெறுக்கலை நிலா." துர்கா கூறியது கேட்டு நிலா

விழிகள் பளிச்சிட நிமிர்ந்தாள்.

"ஆமா நிலா, நீ மேலே படிக்கத்தான் அப்படிச் சொன்னன்னு புரிஞ்சிட்டு அவர் தான் நீ படிக்க உதவி பண்ணியிருக்கார். நீ அரியர் வச்ச போதும் உனக்கு வேலை போட்டு கொடுத்து இருக்கார். அவர் காதல் கிடைக்க நீ கொடுத்து வச்சிருக்கணும்." துர்கா கூறியதை கேட்க அவள் அங்கே இல்லை. அவள் காற்றாக அறையைத் தாண்டி விரைந்தாள்.

"அன்று வந்ததும் இதே சூரியன்... இன்று வந்ததும் அதே சூரியன்..." தங்கைகள் இருவரும் கேலியாய் பாடி கொண்டே அவளைத் துரத்தி வந்தனர்.

மாடிப்படிகளில் இரண்டு இரண்டு படிகளாகத் தாவி ஏறிய நிலா மூச்சிரைக்க மாடியில் வந்து நின்றாள். மனம் கவர்ந்தவனின் முகத்தைக் காணும் ஆவல் அவளிடம்... அவளது கொலுசொலி சத்தத்தில் திரும்பி பார்த்த சரவணன் அவளிடம் விசயத்தை எப்படிச் சொல்வது என்று தயங்கி நின்றான். நிலாவோ அங்குச் சரவணனை கண்டு அதிர்ந்தாலும் சந்தோசம் தான் கொண்டாள். நண்பன், மனம் கவர்ந்த காதலன் கணவனாக வந்தால் யாருக்கு தான் பிடிக்காது.

"பிராடு, நீ தான் மாப்பிள்ளைன்னு ஏன்டா சொல்லலை?" அவள் முணுமுணுத்து கொண்டாள். அவளுக்கு நேர்மாறான மனதுடன் அவன் இருந்தான்.

"நிலா... நான் சொல்றேன்னு தப்பா நினைக்க வேண்டாம். உனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்." என்றவனைக் கண்டு இரு கைகளையும் கட்டி கொண்டு அமர்த்தலாக அவனைப் பார்த்தவள்,

"நீ தான் மாப்பிள்ளைன்னு ஏன் முன்னாடியே சொல்லலை?" என்று கேட்க...

"அது வந்து..." அவன் தயங்கி நிறுத்தினான்.

"நீ என்னை ஏமாத்திட்ட சரவணா?"

"அப்படி எல்லாம் இல்லை நிலா. நீ உயிரை விட்டுருவேன்னு சொல்லும் போது என்னால் ஒண்ணும் பேச முடியலை. இப்போ கூட நான் ஏன் வந்தேன்னா…"

"கல்யாணத்தை நிறுத்த வந்தியா சரவணா?"

"ஆமா…"

"நிறுத்திட்டு…" அவள் கேள்வியாக அவனைப் பார்த்தாள்.

"நிறுத்திட்டு… உன்னை உன் காதலனோட சேர்த்து வைக்கிறேன்…."

"திரும்ப இந்த ஊர் உன்னைக் கேலி பேசும் சரவணா…" அவள் அந்த இருளிலும் அவனது முகத்தைக் கூர்ந்து கவனித்தாள்.

"பேசினா பேசிட்டு போகட்டும். எனக்கென்ன…"

"அதைப் பொய்ன்னு நிரூபிக்க நீ கல்யாணம் பண்ணிப்பியா சரவணா?"

"கல்யாணமா…? என் வாழ்க்கையில் கல்யாணம் எல்லாம் இல்லை." என்று விரக்தியுடன் ஒலித்த அவனது வார்த்தைகளில் அப்படியே ஓடி போய் அவனை அணைத்துக் கொள்ள வேண்டும் என்று அவளது கைகள் பரபரத்தது. அவள் முயன்று அமைதியாக நின்றாள்.

"சரி அதை விடு… எங்க கல்யாணத்துக்கு எல்லா ஏற்பாடும் பண்ணிட்டியா?"

"அது எல்லாம் நான் பார்த்துக்கிறேன். நீ கிளம்பு. குணா, வம்சி ரெண்டு பேரும் காரோட காத்திருக்காங்க. வா…" அவன் அவசரப்படுத்தினான்.

"அப்போ நீயும் வா…"

"இங்கே யாரு சமாளிக்கிறது… நான் இங்கே இருந்தாகணும். நீ மட்டும் கிளம்பு."

"மாப்பிள்ளை இல்லாம எப்படிடா என் கல்யாணம் நடக்கும் மடையா?" அவளது வார்த்தைகளில் முதலில் புரியாது விழித்தவன் பின்பு புரிந்ததும் திகைப்புடன் அவளைப் பார்த்தான்.

"யூ மீன்... ஐ... யூ..." என்று அவன் சந்தோசத்தில் திக்கி திணறினான்.

"எஸ் எஸ்... ஐ லவ் யூ..." என்றவள் புயல் போல் ஓடி வந்து அவனை இறுக அணைத்து கொண்டாள். அவனும் பேச்சற்று அவளை அணைத்துக் கொண்டான். அத்தனை நிம்மதி இருவரது உள்ளத்திலும்... அவன் தான் முதலில் சுதாரித்துக் கொண்டு பேசினான்.

"எப்படி இப்படி? என்னால் நம்ப முடியலை நிலா?"

"என்னால் தானே நீ அவமானப்பட்ட சரவணா. அந்த எண்ணம் தான் உன்னையே நினைக்க வச்சு காதலிக்க வச்சது." என்றவளின் முகத்தை நிமிர்த்தியவன்,

"இஸிட்... அப்படின்னா இன்னும் அவமானப்பட நான் தயார்." என்றான் விரிந்த புன்னகையுடன்...

"அடிவாங்க போற சரவணா... இந்த அவமானத்தைப் போக்க நீ என்னைப் பத்து மாசத்தில் அம்மாவாக்கணும்."

"அப்படிங்கிற... அப்படின்னா இப்பவே..." என்றவன் அவளது முகத்தை நோக்கி குனிய...

"கொன்னுருவேன்... எல்லாம் கல்யணத்துக்கு அப்புறம் தான்..."

"நம்ம வரலாற்றைப் படிக்கிறவங்க ரொம்பப் பாவம்டி. ஒரு ரொமான்ஸ் கூட இல்லைன்னு காறி துப்ப போறாங்க." சரவணன் சிணுங்கினான்.

"துப்பினா துப்பட்டும். துடைச்சுக்கலாம்." என்றவள்,

"என்னால் நீ அவமானப்பட்டு இருக்க... அப்படி இருந்தும் என்னை இத்தனை ஆழமா காதலிச்சு இருக்கியே.

எப்படிடா? உண்மையில் நீ கிரேட். உன் காதல் கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும்." அவளது விழிகள் கலங்கி போனது.

"தெரியலை. உன்னைப் பார்த்தவுடனே பிடிச்சு போச்சு. இப்போ வரை பிடிச்சு இருக்கு. இனியும் பிடிக்கும். உன் காதல் முன்னாடி என் காதல் எல்லாம் நத்திங். யாருன்னே தெரியாம, பார்க்காம, என்னோட அவமானத்தை உன்னோட அவமானமா நினைச்சு என்னையே நினைச்சிருந்த பாரு. உன் காதல் தான் இந்த உலகத்திலேயே விலை மதிக்க முடியாத ஒன்று. அது எனக்கானது எனும் போது இந்த உலகத்திலேயே ரொம்ப அதிர்ஷ்டசாலி நான் மட்டும் தான்." அவன் பெருமையாகச் சொன்னான்.

"நானும் தான் அதிர்ஷ்டசாலி. அரியர் வச்ச எனக்கு வேலை போட்டு கொடுக்கும் காதலன் யாருக்கு கிடைக்கும்."

"அதானே நானே கேட்கணும்ன்னு நினைச்சேன். நீ நல்லா தானே வொர்க் பண்ற. பிறகு எப்படி அரியர்? டவுட்டு?"

"அதென்னமோ தெரியலை, படிக்கும் போது எல்லாம் உன் ஞாபகம் தான் வரும். இந்தப் படிப்புக்காக ஒருத்தனை அவமானப்படுத்திட்டோமேன்னு. அதான் சரியா படிக்க முடியலை."

"அதுக்குன்னு உன் கேரியரில் விளையாடலாமா?" அவன் உரிமையுடன் கோபித்துக் கொண்டான்.

"எனக்கு வேலை போட்டுக் கொடுக்கத்தான் நீ இருக்கியே." என்று கூறியபடி நெஞ்சில் சாய்ந்தவள் மீது அவனுக்குக் கோபம் நீடிக்குமா என்ன!

"எப்படியோ நம்ம காதலில் ஜெயிச்சிட்டோம்." சரவணனுக்கு நிம்மதியாக இருந்தது. அவளுக்குமே...

*************************

மறுநாள் முகூர்த்த நேரத்தில் சரவணன் நிலாவின் வெண்சங்கு கழுத்தில் மங்கள நாணை அணிவித்து

அவளைத் தன்னுடையவளாக்கி கொண்டான். இருவரின் முகத்திலும் அத்தனை நிறைவு, மகிழ்ச்சி!!! இருவரும் எல்லோரையும் வரவேற்கும் பொருட்டு எழுந்து நின்றனர். உறவினர்கள் ஒவ்வொருவராக வர ஆரம்பித்தனர்.

"பங்கு..." சரவணனின் பக்கத்தில் இருந்த குணா அவனது கையைச் சுரண்டினான்.

"என்னடா?"

"நான் எப்போ மாப்பிள்ளை ஆகுறது பங்கு?"

"இந்த ஜென்மத்தில் அது நடக்குமான்னு எனக்குத் தெரியலை."

"ஏன் பங்கு?" குணா அழுதுவிடுபவன் போல் பார்த்தான்.

"பின்னே எங்க மாமாவை பார்த்து மிக்சர் மாமான்னு சொன்னா... அஞ்சு சும்மா விடுவாளா?"

"நீ தானேடா அப்படிச் சொல்லுவ."

"நான் சொல்வேன். ஆனா நீ சொல்ல கூடாது."

"சொல்லலைடா... இப்ப நான் என்ன பண்ண?"

"பேசாம அஞ்சு கால்ல போய் விழு..."

"விழுந்தா... போட்டு மிதிப்பாளேடா..."

"மிதிச்சாலும் வாங்கிக்க..."

"மொத்ததில் புருசன் ஆகணும்ன்னா ரோசம் இருக்கக் கூடாதுன்னு சொல்ற..."

"யா யா... லைக் மீ..." என்று முப்பத்தி இரண்டு பற்களையும் அவன் காட்டினான்.

"நானும் உன் கூட்டணியில் சேர்த்துக்கிறேன். வேறவழி... விதி வலியது." என்ற குணா அஞ்லியை தேடி சென்றான்.

அப்போது இவர்களது திருமணப் பேச்சை முறித்தவர் அங்கு வர... சரவணன், நிலா இருவரும் அவரை முறைத்தனர்.

"வாய்யா... ஊருக்குள்ள நாலு பேர் நாலு விதமா பேசுவாங்களே... அவங்கல்ல ஒருத்தர் நீங்க தானா?" என்று அவரது கையைப் பிடித்து அருகில் அழைக்க... அவன் அழைத்த தினுசில் அவர் அரண்டு போய் ஓடிவிட்டார்.

"எல்லாம் இந்த ஆளால் வந்தது..." சரவணன் எரிச்சலுடன் முணுமுணுத்தான்.

"அவரை ஏன் குறை சொல்லுற? நீ உன் லவ்வர் கிட்ட லவ்வை சொல்லியிருக்கணும். அவளைத் தவிர ஊருக்கே உன் காதலை சொல்லி வச்சிருக்க. உனக்குத் தைரியம் போதாது சரவணா." நிலா அவனைக் கலாய்த்தாள்.

"ஓய், யாரை பார்த்துத் தைரியம் இல்லைன்னு சொல்லுற?" அவன் தனது முழுக்கை சட்டையை மடித்து விட்டபடி கேட்க...

"நீ இன்னும் என் கிட்ட ஐ லவ் யூன்னு சொல்லலை."

"அது தானா..." என்று ஈயென்று இளித்தவன் அடுத்த நொடி காதல் மன்னனாய் மாறி அவளைப் பார்வையால் வசியம் செய்தபடி,

"ஐ லவ் யூ..." என்றான்... அவனது காதலை வார்த்தைகளில் மட்டுமல்லாது செயலில் உணர்ந்தவளின் காதல் இன்னமும் அதிகரித்தது.

"ஹாய் சரண்..." என்ற குயிலோசையில் இருவரது மயக்கம் கலைந்தது. அந்தக் குயிலை சரவணன் உடனே அடையாளம் கண்டு கொண்டான்.

"ஹேய் ரம்யா... எப்படி இருக்க? பார்த்து ரொம்ப நாளாச்சு." என்று ரம்யாவிடம் ஆர்வமாய்க் குசலம் விசாரித்தான்.

"சரவணா, யாரிது?" நிலா அந்தப் பெண்ணைப் பார்த்தபடி கேட்க...

"என் பெயர் ரம்யா. சரவணனோட கேர்ள் பெஸ்ட்டி." என்றபடி அவள் நிலாவிடம் தனது கையை நீட்ட... நிலா சரவணனை முறைத்தாள்.

"அம்மாடி தாயே முறைக்காதே, அவள் கேர்ள் பெஸ்ட்டி இல்லை. கேர்ள் பிரெண்ட். அவ்வளவு தான்." என்று சரவணன் பம்ம...

"அது... அந்தப் பயம் இருக்கணும்." என்ற நிலா கெத்தாக அவனைப் பார்த்தாள்.

இந்த அழகிய காட்சியை வம்சி, குணா இருவரும் தங்களது அலைப்பேசியில் அழகாய் பதிந்து கொண்டனர். சொக்கன், பொன்னுத்தாய், மாரிமுத்து, அஞ்சலை நால்வரும் தங்கள் மக்களைக் கண்டு பெருமையில் பூரித்து நின்றனர்.

பொறுமையுடன் காத்திருக்கும் காதலுக்கு சக்தி உண்டு. அது எப்படியும் காதலர்களை இணைத்து விடும். அதற்கு உதாரணம் நம் சரவணன், நிலா இருவரும். அவர்களை வாழ்த்தி விடைபெறுவோமாக!!!

சுபம் *_*